

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மே 2, 2013 | புரட்சி 12 | முழக்கம் 16 | விலை: ரூ.3.00


## சாதி இருக்கிறது என்பானும் இருக்கின்றானே....



"இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி
இருக்கிற தென்பானும் இருக்கின் றானே!
வெருட்டுவது பகுத்தறிவே! இல்லை யாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும்"

......................

"சாதிமத பேதங்கள் மூடவழக்கங்கள்
தாங்கி நடை பெற்றுவரும்
சண்டைஉல கிதனை
ஊதையினில் துரும்புபோல்
அலைக்கழிப்போம் பின்னர்
ஒழித்திடுவோம் புதிய தோர்
உலகம் செய்வோம்"

...................

"அற்பத் தீண்டாதார் என்னும்
அவரும் பிறரும் ஓர்தாய்
கர்ப்பத்தில் வந்தோரன்றோ – சகியே
கர்ப்பத்தில் வந்தோரன்றோ."

"பொற்புடை முல்லைக் கொத்தில்
புளியம்பூ பூத்ததென்றால்
சொற்படி யார் நம்புவார் – சகியே
சொற்படி யார்நம்புவார்."

........................

"சாதிப் பிரிவு செய்தார்
தம்மை உயர்த்துதற்கே
நீதிகள் சொன்னாரடி – சகியே
நீதிகள் சொன்னாரடி."

.....................

"எஞ்சாதிக் கிவர்சாதி
இழிவென்று சண்டையிட்டுப்
பஞ்சாகிப் போனாரடி – சகியே
பஞ்சாகிப் போனாரடி."

.....................

(புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சாதி எதிர்ப்புப் பாடல் வரிகளின் தொகுப்பு)

**(புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 123 ஆவது பிறந்த நாள் – ஏப். 29)**

# 'தர்மபுரியை'த் தொடர்ந்து 'மரக்காணம்' தமிழகத்தில் தலைதூக்கும் ஜாதி வன்முறை

தமிழ்நாட்டில் ஜாதி வெறியை உசுப்பிவிடும் பா.ம.க.வினர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

வாக்கு வங்கியை உறுதி செய்து கொள்வதற்கு தமிழ்நாட்டில் தலித் மக்களுக்கு எதிராக பா.ம.க. சாதிக் கலவரத்தை நடத்தத் தொடங்கியிருப்பது வன்மையான கண்டனத்துக்குரியதாகும். தர்ம புரியைத் தொடர்ந்து இப்போது 'மரக்காணத்தில்' தலித் மக்களுக்கு எதிராக திட்டமிட்ட தாக்குதலை பா.ம.க. நடத்தியுள்ளது. மரக்காணம், கடையன் தெரு, கழிக்குப்பம், சுனாமேடு கிராமங்கள் ஏற்கனவே பலமுறை பா.ம.க.வினரால் தாக்குதலுக்கு உள்ளான பகுதியாகும்.

கடந்த ஆண்டு 'சித்ரா பவுர்ணமி' விழாவில் காடுவெட்டி குரு, வன்னியப் பெண்களை காதல் திருமணம் செய்யும் தலித் இளைஞர்களை வெட் டுங்கள் என்று பேசி வன்முறையைத் தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து தர்மபுரி மாவட்டத்தில் கொண்டம்பட்டி, நத்தம் காலனி, அண்ணா நகர் பகுதியில் வாழ்ந்த தலித் மக்களின் உடைமைகளை சூறையாடினர். மீண்டும் இந்த ஆண்டு மாமல்லபுரத்தில் 'சித்ரா பவுர்ணமி'க்கு காவல்துறை அனுமதித்ததே தவறு. காவல்துறை விதித்த எந்த கட்டுப்பாட்டையும் மதிக்காமல் மீண்டும் ஜாதி வெறியைத் தூண்டிவிடும் பேச்சு களே அங்கே பேசப்பட்டுள்ளன. இந்த பேச்சுகளை மக்கள் தொலைக்காட்சி நேரடியாகவே ஒளிபரப்பி யது. அதைப் பார்த்தவர்கள் எல்லோருக்குமே ஜாதி வெறியைத் தூண்டியது யார் என்ற உண்மை புரியும். 'சித்ரா பவுர்ணமி'க்கு போகும் போதே திட்டமிட்ட தாக்குதலை தொடங்கிவிட்டார்கள்.

பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ராமதாசு கடந்த பல மாதங்களாகவே மாவட்டந்தோறும் ஜாதி அமைப்புகளை தலித் மக்களுக்கு எதிராக ஒன்று திரட்டும் கூட்டங்களை நடத்தி வந்தார். அந்தக் கூட்டங்களுக்கு எல்லாம் காவல்துறை அனுமதி வழங்கியது. அதே நேரத்தில் ஜாதிக் கலவரத்துக்கு அணி திரட்டும் இந்த முயற்சிகளை எதிர்த்து திராவிடர் விடுதலைக் கழகம் தோழமை அமைப்பு களோடு இணைந்து நடத்திய போராட்டங்களை தடை செய்து கைது செய்தது. 'இந்து' நாளேடு கீழ்க்கண்ட செய்தியை வெளியிட்டுள்ளது.

"காட்டைக் கடந்த வந்து தலித் குடியிருப்பு களைத் தாக்கி தீ வைத்ததோடு, ரேஷன் கார்டு, பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள், மாணவர் மதிப் பெண் சான்றிதழ்கள் போன்ற முக்கிய ஆவணங்கள்



Dalits lose belongings in violence by drunken mob

Kavita Kishore

MARAKKANAM: In front of one of the burnt houses at Kattayantheru lie a number of charred certificates, including ration cards and other

were forced to flee into the ... when they saw the mob app... ing.

"Most of us don't have any... left except the clothes that ... wearing. Most of the area ha...

எரிந்த நிலையில் கிடந்தன. நகைகள் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன" என்று 'இந்து' நாளேடு விரிவாக செய்தி வெளியிட்டுள்ளது.

நேரில் பார்வையிட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்றக் குழு, புதுச்சேரியிலிருந்து மரக்காணம் வரை பா.ம.க.வினர் வன்முறை நடத்தியுள்ளதை சுட்டிக் காட்டி கண்டித்துள்ளது. முதன்மைச் சாலையிலிருந்து 500 மீட்டருக்கு அப்பால் உள்ள சடையன் தெரு கிராமத்துக்குள் இடையே உள்ள காட்டையும் தாண்டி வந்து பா.ம.க.வினர் தாக்கியுள்தாகவும், 18 தலித்துக்கள் படுகாயமடைந்துள்ளனர் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. அரசுப் பேருந்துகளும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன. தலித் மக்களின் வீடுகளும் எரிக்கப்பட்டுள்ளன.

பா.ம.க.வினர் வந்த வாகனங்களில் ஏற்பட்ட விபத்தால் சிலர் காயமடைந்துள்ளதோடு, விவேக், செல்வராஜ் என்ற இருவர் உயிரிழந்துள்ளதாக காவல்துறை வடக்கு மண்டல அய்.ஜி. கூறியுள்ளார். ஆனால், மருத்துவர் ராமதாசு, இவர்கள் கலவரத் தில் கொல்லப்பட்டவர்கள் என்று கூறி, ஆர்ப் பாட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளார். விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர், வீடு எரிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக வழங்கக் கூடிய உதவிகள் செய்யவில்லை என்றும், காவல்துறை வன்முறையாளர்கள் எவரையும் கைது செய்யவில்லை என்றும் கூறப்படுகிறது.

வன்னிய சமூக மக்களும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் மக்கள் தான். இவர்களை தேர்தல் அரசியல் அதிகாரத்துக்காக ஜாதி வெறியைத் தூண்டிவிட்டு பலிகடாவாக்குவது இந்த சமுதாயத்துக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

தமிழக அரசு இதில் உறுதியாக நடவடிக்கை எடுத்து, ஜாதி வெறி சக்திகளின் வெறியாட் டத்துக்கு கடிவாளம் போட வேண்டும் என்பதே நமது உறுதியான கருத்து.

மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களான வன்னியர் சமுதாயம், மத்திய அரசுப் பதவிகளில் தனியார் நிறுவனங்களில் மறுக்கப்படும் வேலை வாய்ப்பு உரிமைகளுக்கும், பொருளாதார சமூக மேம்பாட் டுக்கும் போராட வேண்டுமே தவிர, தலித் மக்களை எதிர்த்து அல்ல! 'பார்ப்பன' சங்கங்களை இணைத்துக் கொண்டு, 'தலித்' மக்களுக்கு எதிராக போராட்டக் களம் அமைக்கும் பா.ம.க., பார்ப்பன மேலாதிக்கத்துக்கும் 'மனு சாஸ்திர' கொடுங் கோன்மைக்கும் தளம் அமைத்துத் தர முயற்சிப்பது மாபெரும் சமூகத் துரோகம்; வரலாறு இதை மன்னிக்காது. ✦

# ஜாதி பாகுபாட்டுக்கு தடைச் சட்டம்: பிரிட்டனில் தலித் போராட்டம் வெற்றி

பிரிட்டனில் ஜாதி வேற்றுமை சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது. இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானம் பிரிட்டன் பொதுச் சபையில் கடந்த செவ்வாய்கிழமை (ஏப். 23) நிறை வேறியது. பிரிட்டனில் குடியேறிய 'தலித்' மக்களின் நீண்டகாலப் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி இது. பிரிட்டனில் 'சமத்துவ சட்டம் 2010' இல் இனம், மரபு, குலம் என்ற அடிப்படையில் பாகுபாடு காட்டுவது ஏற்கனவே தடைசெய்யப்பட்டுள்ளது. இதில் 'ஜாதி' என்பதையும் இணைக்க வேண்டும் என்று அங்கே இந்தியாவிலிருந்து குடியேறிய 'தலித்' மக்கள் வற்புறுத்தி வந்தனர். இப்போது அந்தச் சட்டத்தில் ஜாதி என்பதும் சேர்க்கப்பட்டு விட்டது. பார்ப்பன-உயர்ஜாதியினர் இதற்கு எதிராகக் குரல் கொடுத்ததோடு, இந்தக்



**அமைச்சர் ஜோ அவின்சன்**

கோரிக்கையை ஏற்கக் கூடாது என்று வலியுறுத்தி வந்தனர். முதலில் பிரபுக்கள் சபை இதற்கு ஆதரவாக இரண்டு முறை வாக்களித்தும் பொதுச் சபை தயக்கம் காட்டி வந்தது. இப்போது பொதுச் சபையும் தனது முடிவை மாற்றிக் கொண்டு தீர்மானத்தை ஆதரித்துள்ளது. பணியிடங்களில் 'தலித்' பிரிவினர் மீது பாகுபாடு காட்டப்படுவது உண்மை தான் என்பதை சமத்துவத்துக்கான பெண் அமைச்சர் ஜோ அவின்சன் ஒப்புக் கொண்டார். பணியிடங்களில் சாதிப் பாகுபாடுக்கு உள்ளா வோருக்கு பாதுகாப்பு தரப்பட வேண்டும்" என்றும் அவர் கூறினார். தெற்கு ஆசியாவுக்கு வெளியே ஜாதிப் பாகுபாட்டை தடை செய்துள்ள முதல் நாடு பிரிட்டன். இதை ஏனைய நாடுகளும் பின்பற்ற வேண்டும் என்று சர்வதேச தலித் இணைப்பு மய்ய ஒருங்கிணைப்பாளர் நிக்கி நோத்ரிண்ட் தெரி வித்தார்.

உள்ளே மாமல்லபுர வெறி பேச்சு

# மாமல்லபுரம் மாநாட்டில் உதிர்ந்த 'சிந்தனைத் துளிகள்'

*மாமல்லபுரத்தில் வன்னியர் சங்கம் நடத்திய 'வன்னியர் இளைஞர் பெரு விழாவை' மக்கள் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்புச் செய்தது. அங்கே பேசியவர்கள் சிந்திய 'சிந்தனை'த் துளிகள்:*

- இலவசங்களைக் கொடுத்து சாராயத்தைக் கொடுத்து திராவிடக் கட்சிகள் வன்னியர் சமூகத்தை சீரழித்துவிட்டது என்றார் "சின்ன அய்யா" (டாக்டர் அன்புமணி). அடுத்து தமிழ்நாட்டில் அமையப் போவது பாட்டாளி மக்கள் கட்சி ஆட்சி தான் என்றும், முதலமைச்சரானவுடன் போடப்படும் முதல் கையெழுத்து 'மதுக்கடைகளை மூடுவது', இரண்டாவது கையெழுத்து இலவசங்களை ஒழிப்பதுதான் என்றும் அவர், இனி இலவசமாக குழந்தைகளை தருவோம் என்றுகூட திராவிட கட்சிகள் கூறுவார்கள் என்று கிண்டலடித்துள்ளார். அடுத்த ஆண்டு இதே இடத்தில் நடக்கும் சித்ரா பவுர்ணமி விழாவில் பாட்டாளி மக்கள் கட்சியின் 10 நாடாளுமன்ற உறுப்பினர் களும் இந்த மேடையில் இருப்பார்கள். அவர்களுக்கு பாராட்டு விழா நடக்கும் என்றார்.

- விழாவில் பேசிய பலரும் "சின்ன அய்யா"வை தமிழகத்தின் அடுத்த முதலமைச்சர் என்றே பேசினார்கள்.

- 'மாவீரன்' குரு பேசுகையில், "நாங்கள் ஷத்திரியர் பரம்பரை, நெருப்பிலிருந்து பிறந்தவர்கள், சிவபெருமான் ஆசி பெற்றவர்கள், விவசாயிகள், படை நடத்தியவர்கள். இப்போதும் இந்த நாட்டில் உணவை உற்பத்தி செய்து தருவது எங்கள் ஷத்திரியர் குலம் தான்! நாங்கள் நெருப்பிலிருந்து பிறந்ததாக 'வன்னிய புராணம்' கூறுவது கற்பனையல்ல. சீதை நெருப்பில் இறங்கி, தனது கற்பை நிரூபித்திருப்பதை நம்புகிறவர்கள், நாங்கள் நெருப்பிலிருந்து பிறந்தவர்கள் என்பதை நம்பக் கூடாதா? என்று கேள்வி எழுப்பினார். (இதை மேடையிலிருந்து இரண்டு மருத்துவம் படித்த டாக்டர்கள் ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்பது தான் வேடிக்கை)

- முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் சாதி பற்றி குறிப்பிட்ட மாவீரன், "நாங்கள் அஞ்சி ஓடுவதற்கு மேளம் அடிக்கும் ஜாதி அல்ல - வீர வன்னியர்கள்" என்றார். "எங்களை எதிர்த்து வீரமணி பேசுகிறான், கருணாநிதி பேசுகிறான், தா.பாண்டியன் பேசுகிறான்", வீரமணி கருப்புச் சட்டை போட்டுவிட்டால் பெரிய ஆளா? கருப்புச் சட்டைப் போட்டவன் எல்லாம் பெரிய ஆளா? இவனுகள் எல்லாம் "நாலாம் ஜாதி பயலுக". நாங்கள் வீர வன்னியர் குல ஷத்திரியர்கள்" என்றார்.

- 'தேவர்' சங்கத்தைச் சார்ந்த குமார் என்பவர் பேசுகையில், "வன்னியர் கிராமங்களில் வேறு கட்சிகளின் கொடிகள் பறக்கக் கூடாது. ஊர் எல்லையில் இங்கே வேறு ஜாதியினருக்கு அனுமதி இல்லை என்று அறிவிப்புப் பலகையை எழுதி வையுங்கள்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

- பிராமணர் சங்கத்தைச் சார்ந்த அருண் பிரசாத் என்பவர் பேசும்போது, "2016 ஆம் ஆண்டு உடனே வரவேண்டும் என்று தாங்கள் காத்திருப்பதாக, (அதாவது பா.ம.க. ஆட்சி அமைக்கும் காலம்) ஒரே வரியில் பேச்சை நிறுத்திக் கொண்டார். ஆனால், 'பிராமண' சங்கத் தலைவர் நாராயணன், இந்த நிகழ்ச்சி குறித்து 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஏட்டுக்கு அளித்த பேட்டியில், "ஜாதி மறுப்புத் திருமணத்தை எதிர்ப்பதில் பா.ம.க.வுடன் நாங்கள் ஒன்றுபடுகிறோம். ஆனால் தலித் சமூகத்தினரை தனிமைப்படுத்துவதில் எங்களுக்கு உடன்பாடில்லை" என்று கூறியுள்ளார்.

  அதேபோல் இந்த நிகழ்ச்சியில் நாடார் சங்கத்தின் சார்பில் பேசிய தனபாலன், இதே இதழுக்கு அடுத்த நாள் அளித்த பேட்டியில், "எந்த ஒரு சமூகத்தையும் வேறுபடுத்திப் பார்ப்பது தங்களுக்கு உடன்பாடான கருத்து அல்ல" என்று கூறிவிட்டார்.

- இறுதியாக பேசிய "பெரிய அய்யா" (மருத்துவர் இராமதாசு), "காவல்துறை தலித் தலைவர்களை அடக்காவிட்டால், நாங்கள் அடக்கிக் காட்டுகிறோம்" என்றார். ஆனால், காவல்துறையிலுள்ள "அவர்களை"த் தவிர (தலித் பிரிவினர்) மற்ற எல்லா காவல்துறையினருமே எங்கள் கட்சியினர்தான். அதாவது நாங்கள் கூறும் கருத்தில் உடன்பாடு கொண்டவர்கள் தான் என்றார். சுப்ரமணிய அய்யர் என்பவர் தனக்கு மிகவும் நெருக்கமான நண்பராகியுள்ளார் என்ற தகவலையும் வெளியிட்டார்.

### சில விளக்கங்கள்

வன்னியர் சங்க குரு, "நாங்கள் நாலாஞ் ஜாதி யல்ல. (நான்காம் ஜாதி என்பது வர்ணாஸ்ரமப்படி சூத்திரர்). மாறாக வீர வன்னியர் ஜாதி" என்று பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார். தென்னகத்தில் 'பிராமணர்-சூத்திரர்' என்ற இரண்டு வர்ணாஸ்ரமப் பிரிவுகள் மட்டுமே உண்டு. 'வைசிய-சத்திரிய' பிரிவினர் கிடையாது என்று ஏற்கனவே நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இது தவிர மனு சாஸ்திரமே ஷத்திரிய ஜாதிகள் படிப்படியாக சூத்திரர்களாகி விட்டார்கள் என்று கூறியிருக்கிறது. மனு சாஸ்திரத்தின் 102 ஆவது அத்தியாயம் **43 ஆவது சுலோகம் இவ்வாறு கூறுகிறது.**

> "பிராமணனிடத்தில் வணங்காமையாலும் உபநயந முதலிய கர்மலோபத்தினாலும் ஷத்திரிய ஜாதிகள் இவ்வுலகத்தில் வர வர சூத்திரத் தன்மை அடைந்தார்கள்."

**44 ஆவது சுலோகம் கூறுவதாவது:**

> "பௌண்டரம், ஔண்டரம், திரவிடம், காம் போசம், யவநம், பாரதம், பால்ஹீகம், சீநம், கிராதம், தரதம், கசம், இத்தேசங்களை ஆண்டவர்கள் (ஷத்திரியர்கள்) அனைவரும் சூத்திரர்களாய் விட்டார்கள்" - என்று மனு சாஸ்திரம் கூறுகிறது.

இந்த "மாவீரர்களை" மனு சாஸ்திரமே ஷத்திரர்களாக அங்கீகரிக்கவில்லை. இவர்கள், சூத்திரர்களாகி விட்டார்கள் என்று கூறுகிறது. அதாவது குருவின் மொழியில் 4 ஆம் ஜாதிகள். ✦

## இலவசம் : சில கேள்விகள்

*இலவசங்களைக் கொடுத்து திராவிட கட்சிகள் வன்னியர்களை பிச்சைக்காரர்களாக்கிவிட்டது என்று 'சின்ன அய்யா' மாமல்லபுரத்தில் பேசியிருக்கிறார்.*

*அப்படியானால், அரசு தரும் இலவசங்களை தங்களது கட்சிக்காரர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று அறிவிப்பாரா?*

*அடுத்து வெளியிடவிருக்கும் தேர்தல் அறிக்கையில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இலவசங்களை ஒழிப்போம் என்று அறிவிப்பார்களா?*

*மற்றொரு முக்கிய கேள்வி: இலவசத்தை எதிர்க்கும் இவர்கள், தங்களின் ஒரே அடையாளமாக பெருமையுடன் முன் வைக்கும் 'ஜாதி' என்பது பல்கலைக்கழகத்தில் படித்து வாங்கியதா? அல்லது கடுமையாக உழைத்துப் பெற்றதா? அல்லது விலை கொடுத்து வாங்கியதா?*

*எந்த உழைப்போ படிப்போ செலவோ இல்லாமல் ஒவ்வொருவருக்கும் இலவசமாகக் கிடைத்ததுதானே இந்த ஜாதி.*

*இந்த இலவசத்தை மட்டும் ஏற்றுக் கொள்ளலாமா?*

## மோடி பேசும் 'அரசியல் தீண்டாமை'

கேரளாவில் ஒடுக்கப்பட்ட ஈழவ மக்களின் உரிமைக்குப் போராடிய நாராயண குரு நிறுவிய சிவகிரி மடத்துக்கு குஜராத் முதல்வர் நரேந்திரமோடி சென்றுள்ளார். திருவனந்தபுரம் அருகே வர்கலா என்ற ஊரில் ஸ்ரீ நாராயணா தர்ம மீமம்சா பரிஷத்தின் பொன் விழாவை தொடங்கி வைத்துள்ளார். இனப் படுகொலை செய்த மோடி, இந்த விழாவில் பங்கேற்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஜனநாயக வாலிபர் சங்கம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. காங்கிரஸ் கட்சியும் விழாவில் பங்கேற்கவில்லை. விழாவில் பேசிய நரேந்திர மோடி, "அரசியல் தீண்டாமை சமுதாயத்தில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் நீடித்துக் கொண்டிருக்கும் இந்த மிகப் பெரிய மோசமான நிலை சமூக வாழ்க்கையிலிருந்து அகற்றப்பட வேண்டும்" என்று பேசியுள்ளார். ('தினந்தந்தி' 25.4.2013)

மோடிக்கு கவலை எல்லாம் அரசியலில் நடக்கும் தீண்டாமை பற்றித்தான். சமூகத்தில் நடக்கும் தீண்டாமை பற்றி அவருக்கு எந்தக் கவலையும் இல்லை. "மோடியைப் போல் ஒரு சிறப்பான ஆட்சி இந்தியாவில் எங்குமே இல்லை; அவர்தான் அடுத்த பிரதமருக்கு தகுதியானவர்" என்று 'துக்ளக்' சோ ராமசாமி உள்ளிட்ட ஒரு "பஜனை கோஷ்டி" தொடர்ந்து ஜால்ரா தட்டி வருகிறது. இந்த நிலையில் மோடி ஆட்சி செய்யும் குஜராத்தில் 'சமூகத் தீண்டாமை' எப்படி இருக்கிறது என்ற தகவல்கள் இப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன.

'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டின் அகமதாபாத்பதிப்பு (ஏப்.11, 2013) முதல் பக்கத்தில் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது. கீர்த்திரதோரு என்பவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் குஜராத் அரசிடமிருந்து பெற்றுள்ள இந்த தகவல்கள் அம்மாநிலத்தில் தீண்டாமை-ஜாதி வெறி கொடி கட்டிப் பறப்பதை கிழித்துக் காட்டியுள்ளது.

- *98 சதவீத தலித் மக்களுக்கு குஜராத்தில் தேனீர்க் கடையில் தனி கிளாசில்தான் தேனீர் விற்கப்படுகிறது.*
- *தேர்ந்தெடுக்கப்பட்ட தலித் பஞ்சாயத்து தலைவர்களில் 62.71 சதவீதம் பேர் தீண்டாமைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். தங்கள் பஞ்சாயத்திலேகூட அவர்களுக்கு பொதுக் குழாய்களில் தண்ணீர் பிடிப்பதற்கும் உரிமை கிடையாது.*
- *அரசுப் பள்ளிகளில் நடக்கும் மதிய உணவுத் திட்டத்தில் தீண்டாமைதான் தலைவிரித்தாடுகிறது. 53.78 சதவீத ஆரம்பப் பள்ளிகளில் தலித் குழந்தைகள் பிற ஜாதி குழந்தைகளோடு சேர்ந்து உணவருந்த அனுமதிக்கப்படுவது இல்லை.*
- *தமிழ் பேசுவோர் வாழும் 1589 கிராமங்களில் 97 சதவீத தமிழ் மக்கள் கோயில்களுக்குள்ளேயே அனுமதிக்கப்படுவதில்லை.*

*- என்று அந்த செய்தி கூறுகிறது.*

*உண்மையான சமூகத் தீண்டாமையை நடைமுறைப்படுத்திக் கொண்டு 'அரசியல் தீண்டாமை' பற்றி மோடிகள் பேசக் கிளம்பியிருக்கிறார்கள். மோடியின் 'தீண்டாமை'யைப் பாராட்டி, அடுத்த ஆண்டு சித்திரா பவுர்ணமிக்கு மருத்துவர் ராமதாசு மோடியை சிறப்பு அழைப்பாளராகக்கூட அழைக்கலாம்!*

# இஸ்லாம் மதமும் - பெரியாரும்

இஸ்லாமிய தோழர்களை தமிழர்களாகவே நாம் கருதுகிறோம். தீண்டாமைக் கொடுமையி லிருந்து முழுக்குப் போட விரும்பி இஸ்லாம் ஆனவர்கள். தீண்டாமை இழிவு ஒழிய இஸ்லாம் மார்க்கத்துக்கு மாறுங்கள் என்று பெரியார் கூறினார். பெரியார் இயக்கத்திலிருந்து விலகி, இஸ்லாமைத் தழுவிய தோழர் பெரியார் தாசன். பெரியார் இஸ்லாமை ஏற்றாரா? எதிர்த்தாரா? என்ற குறுந்தகடு ஒன்றை அண்மையில் வெளியிட் டிருக்கிறார். இஸ்லாம் மார்க்கத்தைத் தேர்வு செய்வது பெரியார் தாசனின் உரிமை. ஆனால், எந்த மதத்தையும் ஏற்காத பெரியாரை தன்னுடைய கொள்கைக்கு இழுக்க பெரியார் தாசன் முயற்சிக்க வேண்டாம் என்பதே எமது கருத்து.

பெரியார்தாசனின் இத்தகைய தவறான முயற்சிகளால் இஸ்லாமியர்களோடு நமக்குள்ள சகோதரத்துவம் குலைந்து விடக் கூடாது என்ற கவலையோடு இங்கு இஸ்லாம் பற்றிய பெரியார் கருத்தை பதிவு செய்கிறோம். சாத்தான் குளத்தில் நடந்த முகம்மது நபிகள் பிறந்த நாள் நிகழ்வில் பெரியார் ஆற்றிய உரை 2.8.1931 'குடிஅரசு' இதழில் வெளி வந்துள்ளது.

"ஆதி திராவிடர்களை நான் 'இஸ்லாம் கொள்கையைத் தழுவுங்கள்' என்று சொன்ன தற்காக அநேகம் பேர் என் மீது கோபித்துக் கொண் டார்கள். அவர்களைப் பற்றி நான் கோபித்துக் கொள்ளவில்லை. அவர்களுக்குச் சொந்த அறிவு மில்லை. சொல்வதையும் கிரகிக்க சக்தியுமில்லை. சிலருக்குத் தங்கள் மேன்மை போய்விடுமே, தங்களுக்கு அடிமைகள் இல்லாமல் போய்விடுமே என்கின்ற சுயநல எண்ணம் என்றே நான் கருதி விட்டேன். ஏனெனில், 'மோட்சம் அடைவதற்காக' வென்று நான் ஆதி திராவிடர்களை இஸ்லாம் கொள்கைகளைத் தழுவுங்கள் என்று சொல்ல வில்லை. அல்லது 'ஆத்மார்த்தத்திற்கோ' 'கடவுளை அறிவதற்கோ' நான் அப்படிச் சொல்லவில்லை. ஆதி திராவிடர்களின் தீண்டாமையைப் போக்கு வதற்கு சட்டம் செய்வது, சத்தியாக்கிரஹம் செய்வது முதலியவை போலவே இஸ்லாம் கொள்கையைத் தழுவுவது என்பதும் ஒரு வழி என்றே சொன்னேன். இனியும் சொல்லுகின்றேன்.

சட்டம் செய்வது கஷ்டம்; செய்தாலும் அமுலில் வருவதும் கஷ்டம். சத்தியாக்கிரஹம் செய்வதும் கஷ்டம். செய்தாலும் வெற்றிப் பெறுவதும் சந்தேகம். இவற்றால் துன்பமும், தோல்வியும் கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆனால், ஆதி திராவிடர்களுக்கு இஸ்லாம் கொள்கையை ஏற்றுக் கொண்டேன் என்று சொல்வதில் என்ன கஷ்டம்? அதில் தோல்வியோ துன்பமோ ஏதாவது உண்டா? அல்லது அன்னியருக்கு ஏதாவது கஷ்டம் உண்டா? அவன் ஆஸ்தீகனாய் இருந்தால் என்ன? நாஸ்தீகனாய் இருந்தால் என்ன? உண்மை இஸ்லாம் ஆனால் என்ன? பொய் இஸ்லாம் ஆனாலென்ன? யாருக்கும் எவ்வித கஷ்டமும் இல்லாமல், வேண்டு மானால் எந்தவித மன மாறுதல்கூட இல்லாமல் தன்னுடைய இழிவையும் கஷ்டத்தையும் விலக்கிக் கொள்ள ஆசையும் அவசரமும்பட்ட ஒரு மனிதன் தான் மாலை 5 மணிக்கு இஸ்லாம் கொள்கையை ஏற்றுக் கொண்டதாய்ச் சொல்லி 5.30 மணிக்கு 'தீண்டாதவன்' என்கின்ற இழிவிலிருந்து மீண்டு தெருவில் நடக்க உரிமை பெற்று மனிதனாவதில் ஏன் மற்றவர்கள் ஆக்ஷேபிக்க வேண்டும்? என்பது எனக்கு விளங்கவில்லை. கேவலம் வயிற்றுச் சோற்றுக்காக 100க்கு 90 மக்கள் என்னென்னமோ அவரவர்களாலேயே இழிவான குற்றமான காரியம் என்று சொல்லப்படுவதை எல்லாம் செய் கின்றார்கள். அப்படி இருக்க இதில் என்ன இழிவோ குற்றமோ இருக்கின்றது என்று கேட்கின் றோம். உலகில் மதங்கள் அடியோடு ஒழிக்கப்படும் போது இஸ்லாம் மதமும் ஒழியும். அதுபோது இந்த ஆதி திராவிடர்கள் ஏற்றுக் கொண்டதும் ஒழிந்து போகுமே தவிர அது மாத்திரம் நிலைத்து விடாது. அதற்காக அதிகக் கஷ்டமும் இல்லை. ஆகையால், எது எப்படி யானாலும் தீண்டாமை ஒழிய வேண்டுமென்றும் தீண்டாதார் எனப்படுபவர்கள் இஸ்லாம் கொள்கையைத் தழுவ வேண்டியது என்பது ஒரு வழியேயாகும்.

ஏன் கிறிஸ்து மதத்தைத் தழுவக் கூடாது? ஆரிய சமாஜத்தைத் தழுவக் கூடாது? என்று கேட்கலாம். கிறிஸ்துமதக் கொள்கைகள் புஸ்தகத்தில் எப்படியிருக்கின்றது என்பது பற்றி நான் சொல்ல வரவில்லை. பிரத்தியட்சத்தில் பறக் கிறிஸ்துவன், பார்ப்பாரக் கிறிஸ்துவன், வேளாளக் கிறிஸ்துவன், நாயுடு கிறிஸ்துவன், கைக்கோளக் கிறிஸ்துவன், நாடார் கிறிஸ்துவன் என்பதாகத் தமிழ்நாடு முழுவதும் இருப்பதைப் பார்த்து வருகின்றேன்.

இஸ்லாம் மார்க்கத்தில் பாப்பார முஸ்லீம், பற முஸ்லீம், நாயுடு முஸ்லீம், நாடார் முஸ்லீம் என இருக்கின்றதா? என்று கேட்கிறேன்.

இங்குள்ள கிறிஸ்துவ சகோதரர்கள் கோவித்துக் கொள்ளக்கூடாது. வேண்டுமானால் வெட்கப் படுங்கள் என்று வணக்கமாக தெரிவித்துக் கொள் கிறேன். ஆரிய சமாஜம் என்பதும் ஒரு வேஷமே தான். அதுவும் பயன் அளிக்கவில்லை.

உதாரணமாக வைக்கம் சத்தியாக்கிரகத்தில் ஆரிய சமாஜத் தீயர்களையும், கிறிஸ்தவப் புலையர்களையும் தெருவில் நடக்கவிடவில்லை. இஸ்லாமானவன் தாராளமாய் விடப்பட்டான். பாலக்காட்டிலும் அப்படியே நடந்தது. ஒரு நாள் பாலக்காட்டில் ஒரு செர்மன் என்கிற இழிவு படுத்தப்பட்ட ஜாதியிலிருந்த தீண்டாதவன் ஒருவன் இஸ்லாமாகி தடுக்கப்பட்டத் தெரு வழியாகப் போனான். அப்போது அவனை ஜவுளிக் கடைப் பார்ப்பனரும் வெற்றிலைக் கடை நாயரும் தெருவுக்கு வந்த நின்று பார்த்தார்கள். உடனே அங்கு இங்கிருந்த ஒரு மாப்பிள்ளை (இஸ்லா மானவன்) "எந்தடா? பன்னிக் கூத்தச்சி மகனே! அவனைப் பார்க்கிறாய்" என்று கேட்டான். செர்மனாயிருந்த இஸ்லாம் சிரித்துக் கொண்டே போனான். பார்ப்பனனும் நாயரும் தலைகுனிந்து கொண்டார்கள். இது பிரத்தியட்சத்தில் நடந்த சம்பவம் - சந்தேகமில்லாமல் இனியும் நடக்கக் கூடிய சம்பவம்.

ஆகவே இஸ்லாம் மார்க்கம் செய்கின்ற நன்மை இந்து மார்க்கம் செய்வதைவிட அதிகமா? இல்லையா? என்று பாருங்கள்.

ஆனால், நான் இஸ்லாம் சமூகக் கொள்கைகள் முழுவதையும் ஒப்புக் கொண்டதாகவோ அவைகள் எல்லாம் சுயமரியாதைக் கொள்கைகள் என்று சொல்லுவதாகவோ யாருந் தீர்மானித்து விடாதீர்கள். அதிலும் பல விரோதமான கொள்கைகளைப் பார்க்கிறேன்."

**- பெரியார்**

# ஈழத் தமிழர்களோடு இணைந்து போராட இஸ்லாமியர் உறுதி

'பாப்புலர் பிரண்ட் ஆஃப் இந்தியா' என்ற இஸ்லாமிய அமைப்பு சார்பில் இலங்கை தமிழர்களுக்கான வாழ்வுரிமை கருத்தரங்கம் 16.4.2013 அன்று மாலை சென்னை சிங்கப்பூர் ஓட்டல் அரங்கில் சாலித் முகம்மது தலைமையில் நடைபெற்றது. இலங்கை தேசிய அய்க்கிய முன்னணி தலைவர் ஏ. அசாத் சாலி, தமிழர் தேசிய கூட்டமைப்பு ஆலோசகர் பேராசிரியர் கந்தையா சர்வேசுவரன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், அ. மார்க்ஸ், முன்னாள் பாப்புலர் பிரண்ட் தலைவர் அப்துல் ரகுமான் உள்ளிட்டோர் உரையாற்றினர். கடந்த கால கசப்பான அனுபவங்களை மறந்துவிட்டு ஈழத்தில் தமிழர்களும் முஸ்லீம்களும் சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்று ஈழத்திலிருந்து வந்த சிறப்பு விருந்தினர்கள் வலியுறுத்தினர். தமிழ்நாட்டில் இஸ்லாமியர்களோடு இணைந்த பொது அடையாளத்தை தமிழர்களுக்கு உருவாக்கியது பெரியார் இயக்கம். அந்த மரபின் தொடர்ச்சியை பாதுகாப்போம் என்றும், தமிழர்களின் உரிமைப் போராட்டம் இஸ்லாமியர் பங்கெடுப்பு இல்லாமல் வலிமை பெறாது என்றும் விடுதலை இராசேந்திரன் குறிப்பிட்டார்.

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற நிகழ்ச்சிகள்

1.4.2013 அன்று மாலை 5 மணியளவில் நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் வாசுகி மகாலில் தமிழீழ விடுதலைக்கான மாணவர்கள் கூட்டமைப்பு சார்பாக கருத்தரங்கம் நடைபெற்றது. "தமிழினத் திற்கு அன்று முதல் இன்று வரை இந்தியா செய்து வரும் தொடர் துரோகங்கள்" என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த கருத்தரங்கத்திற்கு திருச்சி சட்டக் கல்லூரி மாணவர் சதாசிவம் தலைமையேற்றார். மோ.ஜீவா (ஜெயம் பொறியியல் கல்லூரி), மோ. சுபாஷ் (சென்னை அம்பேத்கர் சட்டக் கல்லூரி), கௌதமன் (கந்தன் கலை-அறிவியல் கல்லூரி), கார்த்தி (எஸ்.எஸ்.எம். பொறியியல் கல்லூரி) ஆகியோர் முன்னிலை வகித்தனர். எஸ்.எஸ்.எம். பொறியியல் கல்லூரி மாணவர் மா.தாமரைக் கண்ணன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். இந்தியா வின் தொடர் துரோகங்களை அம்பலப்படுத்தி சிறப்புரையாற்றிய திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஈழ போராட்ட வரலாறு - ஆயுத போராட் டமாக மாறிய காரணம் - ஈழ விடுதலைக்கு தொடர்ந்து செய்ய வேண்டி யவை ஆகியவை களைப் பற்றியும் சுமார் மூன்றரை மணி நேரம் விரிவாக பேசினார்.

9.4.2013 அன்று சேலம் மாவட்டம் இளம் பிள்ளையில், காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை ஒரு நாள் பயிற்சி வகுப்பு மற்றும் கலந்துரை யாடல் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட அமைப் பாளர் அ.முத்துமாணிக்கம் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்ச்சிக்கு மண்டல அமைப்புச் செய லாளர் அ.சக்திவேல், மாவட்டத் தலைவர் கருப்பூர் சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு வகுப்பெடுத்தார். தோழர்களின் அய்யங்களுக்கும் விளக்கமளித்தார். இறுதியாக இளம்பிள்ளை பகுதியின் தலைவராக சி.தங்கதுரை, செயலாளராக வ.கார்த்திகேயன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கு.சவுந்திர ராசன் நன்றி கூறினார்.

10.4.2013 அன்று மாலை 6 மணியளவில் விழுப் புரம் மாவட்டம் கடுவனூரில், தமிழ்நாடு மாணவர் கழகத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராமர்-தனலட்சுமி ஆகியோரின் வாழ்க்கை துணைநல ஒப்பந்த விழா நடைபெற்றது. கிராமத்திலேயே பொது கூட்ட மேடையாக அமைத்து ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியில், ஊர் பொது மக்கள் அனைவரும் வியப்போடும், ஆவலோடும் கலந்து கொண்டனர். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்கவுரையாற்றி வாழ்க்கை இணையேற்பு ஒப்பந்தத்தை நடத்தி வைத் தார். சென்னை மண்டல அமைப்புச் செயலாளர் அன்பு தனசேகரன், பேராசிரியர் அ.பெரியார் முதலானோர் வாழ்த்துரை வழங்கினர். விழுப்புரம் அய்யனார் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

11.4.2013 அன்று சேலம் மாவட்டம் தாதகாப் பட்டியில், கொண்டலாம்பட்டி பகுதி கழகம் சார்பாக, மனு சாஸ்திர எரிப்புப் போராட்ட விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சேலம் மாநகரத் தலைவர் மூனாங்கரடு சரவணன் தலைமை யில் நடைபெற்ற இந்தப் பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழக மக்கள் உரிமை இயக்கம் பூமொழி, தமிழக ஒடுக்கப்பட் டோர் விடுதலை இயக்க மாவட்ட செயலாளர் இளமாறன், சார்ப் முரளி, கழகத் தோழர்கள் சேலம் பாலு, ஆத்தூர் மகேந்திரன், சேலம் பிரபு, சிவசக்தி நகர் அம்பிகாபதி முதலானோர் உரையாற்றினர். கொண்டலாம்பட்டி மண்டல பகுதி அமைப்பாளர் ந.விக நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். இறுதியாக இராஜசேகரன் நன்றி கூறினார்.

புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த தினமான 14.4.2013 அன்று காலை 10 மணிக்கு கோவை பவர் அவுஸ் அருகிலுள்ள அம்பேத்கர் சிலைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவித்தார். மாநகரத் தலைவர் வழக்குரைஞர் பன்னீர் செல்வம், மாவட்டத் தலைவர் வெள்ளமடை நாகராசன், மாவட்ட காப்பாளர் மேட்டுப்பாளையம் இராமச் சந்திரன் உள்பட கழகத் தோழர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

21-04-2013 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11-00 மணியளவில், வேலூர் மாவட்டம் ஒச்சேரி எஸ்.ஆர்.ஆர் திருமண மண்டபத்தில், ந.சாந்த குமார்-பா.மீனா ஆகியோரது வாழ்க்கை இணை ஏற்பு விழா நடைபெற்றது. கர்நாடக தமிழர் மக்கள் இயக்க தலைவர் பன்முகன் தலைமையில் நடை பெற்ற இந்த விழாவில், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வழக்குரைஞர் அங்கையற்கண்ணி முதலானோர் வாழ்த்துரை வழங்கினர்.

DATE OF PUBLICATION 01.05.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# விடுதலைப் புலிகள் நடத்திய மதச்சார்பற்ற ஆட்சி: கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்கம்

17-04-2013 அன்று மாலை 6-00 மணியளவில், விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி மந்தைவெளி அருகே அறிஞர் அண்ணா பொதுக்கூட்ட மேடையில், "தமிழர்கள் தமிழீழம் கேட்பதேன்?" விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தேசிய தமிழீழத்திற்கான மாணவர்கள் கூட்டமைப்பு சார்பாக நடைபெற்ற இந்த பொதுக்கூட்டத்திற்கு, அவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தா.ல.உதயகுமார் தலைமை ஏற்றார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். தமிழீழ வரலாறு, விடுதலைப் போராட்டம் ஆகியவற்றைப் பற்றி விரிவாக பேசிய கழகத் தலைவர் . ஒரே மொழி பேசுகின்ற ஒரு பாரம்பரிய தாயகத்தைக் கொண்ட, ஒத்த பண்பாட்டு சூழலில் இருக்கின்ற மக்களை தேசிய இனம் என்று சொல்வார்கள்; இதோடு இன்னும் இரண்டு சேர்த்து, விடுதலை வேட்கையும், அதை வென்றெடுக்கும் திறனும் இருக்கவேண்டும் என்று சர்வதேச சட்ட நிபுணர்கள் சொல்வார்கள். தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு சுதந்திர வேட்கையும் இல்லை; அதை வென்றெடுக்கும் ஆற்றல் மிக்க குழுவும் இங்கு இல்லை. ஆனால் ஈழத்திலுள்ள மக்களின் விடுதலை வேட்கை எப்படிப்பட்டது என்றெல்லாம் விரிவாக விளக்கினார்கள். அங்கு கனகரத்தினம் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் இருந்தார். தமிழர்கள் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் வெற்றி பெற்றவுடன் சிங்கள கட்சியில் சேர்ந்து துணை அமைச்சராகிவிடுகின்றார். இது துரோக நடவடிக்கை என புலிகள் அமைப்பு அறிவித்து, அவருக்கு மரண தண்டனை அறிவிக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டு இறுதியில் சுட்டும் கொன்றார்கள். 1982 ஆம் ஆண்டு அவருடைய மகன் இரஞ்சன் புலிகள் அமைப்பில் உறுப்பினராக வந்து சேர்ந்தார். பின்னர் ஒரு பெரிய தாக்குதல் நடத்தி அதில் அவர் இறந்தும் போனார். ஒரு அமைச்சரின் மகன்; தன்னுடைய அப்பாவை சுட்டுக்கொன்ற இயக்கத்தில் சேரும் விடுதலை வேட்கை அங்கு இருந்தது. தமிழீழ தேச வழமைச் சட்டம், சட்டக்கோவை. மோட்டார் ஊர்தி பதிவுச் சட்டம், திரைப்பட தணிக்கை சட்டம் கொண்டுவந்தார்கள். தமிழீழ உணவுச் சட்டம், மணக்கொடை தடுப்புச்சட்டம், தமிழீழ சான்றுரை சட்டம், தமிழீழ சீட்டுச்சட்டம், தமிழீழ சட்டக்கோவையின் திருத்தச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம் என்று பல சட்டங்களை அவர்கள் இயற்றினார்கள். தமிழீழ வைப்பகங்கள் வைத்திருந்தார்கள். தமிழ்ப் பெயர்களை வைக்க வேண்டும் என்று அவர்கள் பரிந்துரைத்தார்கள். தனித் தமிழ் பெயர் சூட்டப்படும் குழந்தைகளுக்கு, குழந்தையின் பெயரில் புலிகள் அமைப்பே ஐநூறு ரூபாய் வைப்புத் தொகையை செலுத்திவிடும். நாற்பத்தி ஆறாயிரம் தமிழ்ப் பெயர்களைக் கொண்ட புத்தகத்தை வெளியிட்டார்கள். தங்களுக்கான வரலாறுகளை எழுதினார்கள். புலிகள் இயக்கத்தில் மதச்சடங்கோ, மதச் சின்னங்களோ அணிவதற்கு தடை விதிக்கப்பட்டது. திருமணங்களில் தாலிகள் அணிவிக்கும் பழக்கத்தை அவர்கள் அனுமதிக்கவில்லை. விரும்பினால் புலிச் சின்னத்தை இருவரும் அணிந்து கொள்ளலாம் என்று வைத்திருந்தார்கள். தாலி அணிந்ததற்காக இயக்கத்தில் இருந்து நீக்கப்பட்ட நிகழ்வுகள் உண்டு. தமிழீழ அரசு அலுவலகங்களில் - வாகனங்களில் கடவுள் படங்கள் வைக்கக் கூடாது என்றெல்லாம் சட்டம் கொண்டுவந்தார்கள். இன்னும் சிறப்பான செய்தி என்னவென்றால் இவர்களின் உரிமையியல் நீதிமன்றத்தில், சொத்துக்களுக்காக நடக்கும் வழக்குகளில் இவர்கள் தீர்க்கும் நேர்மையைப் பார்த்த சிங்களவர்கள் தங்கள் வழக்குகளை தீர்த்துக்கொள்ள, சிறப்பு அனுமதி கேட்டு தங்கள் பிரச்சனைகளை தீர்த்துக்கொண்டார்கள். இப்படிப்பட்ட திறமை மிக்கவர்களாக ஈழத் தமிழர்கள் இருந்தார்கள் என்று தனது உரையில் குறிப்பிட்டார். கள்ளக்குறிச்சி கழகத் தோழர் சி.ஆசைத்தம்பி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்திருந்தார். ம.தி.மு.க, விடுதலை சிறுத்தைகள், நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட ஈழ ஆதரவாளர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

# ஒரே நாளில் பக்தி மடமைக்கு பலியான உயிர்கள்

கடவுள் என்ற நம்பிக்கையினால் எத்தனையோ விளையாட்டுகள் பக்தி பரவசத்துடன் அரங்கேறி வருகின்றன. "கீழ் ஜாதிக்காரர்கள்" கோயிலுக்குள் வராமல் வெளியிலிருந்து தரிசிக்க "கோபுரங்கள்" கட்டப்பட்டன. அதேபோல் 'வீதி உலா' வருவதற்காக 'உற்சவர்' என்ற பெயரில் கடவுள் சிலைகளை வீதி வீதியாகக் கண்டு வருவதும், தேரில் வைத்து தெருத் தெருவாக இழுத்து போவதும் கூட கோயிலுக்குள் நுழைய அனுமதி மறுத்த ஒடுக்கப்பட்ட மக்களிடம் பக்தி மூடநம்பிக்கையை தக்க வைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள்தான். இந்தத் தேர்கள் ஆங்காங்கே குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகி, தேர் இழுத்தவர்களே மரணமடையும் செய்திகள் அவ்வப்போது வந்து கொண்டுதான் இருக்கின்றன. கடந்த ஏப்.25 ஆம் தேதி இதழில் மட்டும் இத்தகைய இரண்டு விபத்து செய்திகள் வந்துள்ளன. புதுக்கோட்டை மாவட்டம் நற்பவளக்குடி எனும் ஊரில் அய்யனார் கோயில் தேர் ஓடத் தொடங்கிய 10 நிமிடத்தில் குடை சாய்ந்து விட்டது. "அதிர்ஷ்டவசமாக" பக்தர்கள் காயமின்றி உயிர் தப்பியதாக பக்தர்கள் 'நிம்மதி பெருமூச்சு' விட்டனர் - என்கிறது செய்தி.

'அய்யனார்' தன்னை நம்பி தேர் இழுக்கும் பக்தர்களை காப்பாற்றாமல் எப்படி விபத்துக்குள்ளாக்கலாம்? என்று பகுத்தறிவாளர்கள் கேள்வி எழுப்பினால் அப்படி பேசாதே அது 'தெய்வ குற்றம்' என்று கூறி விடுவார்கள். 'தெய்வமே குற்றமிழைக்கிறதே' என்று சிந்திக்க மாட்டார்கள். பக்தர்கள் உயிர் பிழைத்ததற்குக் காரணம், அவர்களுக்கு அப்படி 'அதிர்ஷ்டம்' இருக்கிறது என்று அய்யனாரைக் கை கழுவிவிட்டு, 'சோதிடத்துக்குள்' புகுந்து விடுகிறார்கள்.

மற்றொரு துயரமான நெஞ்சு பதைக்கும் சேதி, 5 வயது பெண் குழந்தை கல்பிதா, தேர் சக்கரத்தில் சிக்கி இறந்ததாகும். இது நடந்தது காஞ்சிபுரத்தில், காஞ்சிபுரம் கச்சபேஸ்வரர் கோயில் 'சாமி' தேர் உலா வந்தபோது இந்த விபந்து நடந்துள்ளது. தேரை இழுத்தவர்கள் அவசர அவசரமாக இழுத்து வந்திருக்கிறார்கள். சிறுமியின் வீட்டு வாசல் அருகே தேர் வந்தபோது விளையாடிக் கொண்டிருந்த சிறுமி ஓடிப் போய் பார்த்தபோது, கால் இடறி கீழே விழுந்து விட்டார். தேரை இழுத்தவர்கள் சிறுமியின் மீது சக்கரத்தை ஏற்றிவிட்டார்கள். சிறுமி கதறுவதைப் பார்த்தவுடன் பெரும்பாலான பக்தர்கள் கூட்டம் சிறுமியைக் காப்பாற்ற முன் வராமல் பயந்துபோய் சிதறி ஓடிப் போய் விட்டதாம். இதுதான் பக்தி காட்டும் சமூகப் பார்வை போலும்! ஒரு சிலரே சிறுமியைத் தூக்க முன் வந்திருக்கிறார்கள். ஆனால், சிறுமி பரிதாபமாக இறந்து விட்டார். 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு இந்த செய்தியை விரிவாக வெளியிட்டுள்ளது.

பார்ப்பனர்கள் இப்படி ஒரு பிஞ்சுக் குழந்தை உயிர்ப் பலியாகிவிட்டதே என்பது குறித்து கவலைப்படவில்லை. உடனே கோயிலுக்கு 'தீங்கு' நேர்ந்து விட்டதே என்பதைப் பற்றித்தான் கவலைப்பட்டிருக்கிறார்கள். "உடனடியாக கோயில் நடை சாத்தப்பட்டு, அர்ச்சகர் மூலம் பரிகார பூஜை நடத்தப்பட்டு நடை திறக்கப்பட்டது" என்ற சேதியை 'தினமலர்' ஏடு வெளியிட்டுள்ளது. 'அவாளிடம்' எல்லாவற்றுக்கும் "பரிகாரம்" இருக்கிறது. இறந்து போனது 'சூத்திர' குழந்தை தானே! ஆனால், பார்ப்பானின் கவலை எல்லாம் 'தெய்வ வீதி' உலாவில் இப்படி ஒரு சம்பவம் நடந்து தொலைந்து விட்டதே என்ற கவலை! மனிதாபிமானம், மனித நேயம் உள்ள பக்தர்கள் இதை எல்லாம் மான உணர்ச்சியோடு சிந்தித்துப் பார்த்தால் நல்லது.


# மடமையைப் போற்றும் விஞ்ஞானிகள்

'ஹிக்ஸ் போரான்', 'கடவுள் துகள்' என்ற பெயர்கள் ஏடுகளில் அண்மைக்காலமாக வெளி வந்து கொண்டிருக்கின்றன. இவை எல்லாம் விண்வெளியிலிருந்து வெளியேறும் 'கதிர்கள்' பற்றிய புதிய கண்டுபிடிப்புகள்தான். 'ஹிக்ஸ் போரான்' என்ற புதிய கதிர்வீச்சுக்கு சில நம்பிக்கையாளர்கள் கொடுத்த பெயர்தான் 'கடவுள் துகள்'. மற்றபடி கடவுள் என்ற கற்பனைக்கும் அதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இப்போது அண்மையில் 'கருந்துகள்' பற்றிய செய்தி வெளிவந்துள்ளது. விண்வெளியில் பல்லாயிரக் கணக்கான 'விண்மீன்கள்' கோடிக் கணக்கான கிலோ மீட்டர் தூரங்களில் ஒளியையோ அல்லது கதிர்களையோ வீசிக் கொண்டிருக்கும் போது பெரும்பாலான விண்மீன்கள், எவ்விதக் கதிர்களையும் வீசாமல், 'அமைதி'யாகவே இருக்கின்றன. இது பற்றி 'தினமணி'யில் (17.4.2013) வெளிவந்த ஒரு கட்டுரையில் "இந்த கருந்துகள்கள் கடவுளாக இருக்கலாம்; கண்டவர் விண்டதில்லை; விண்டவர் கண்டதில்லை, கடவுளைக் 'கரிய மால்' என்று அழைப்பது உண்டு. இந்த கருந்துகள் 'கரிய மால்' என்று நம்பப்படுகிறது" என்று அந்தக் கட்டுரை கூறுகிறது. விஞ்ஞானம் விடை கண்டுபிடிக்காத 'விண்வெளி' மர்மங்களுக்கு கடவுள் முத்திரை குத்தி கடவுளைக் காப்பாற்றுவது சில "அறிவியலாளர்களின்" வழமையாக இருந்து வருகிறது. இது குறித்து 'ஜன சக்தி' நாளேட்டில் (ஏப்.25) ஒரு மறுப்புக் கட்டுரை வெளிவந்துள்ளது. கட்டுரையாளர் கலை இலக்கியப் பெருமன்றத்தைச் சார்ந்த தோழர் எஸ்.தோதாத்ரி, 'கருந்துகள்' என்பது ஒரு பொருள். அப்படியானால் கடவுளும் - ஒரு பொருளா? என்ற கேள்வியை எழுப்புகிறது அக் கட்டுரை. இப்படித்தான் சிவனும் சக்தியும், எல்க்ட்ரான் (எதிர் மின் சக்தி), புரோட்டான் (நேர் மின் சக்தி) என்று கூறி, தில்லை 'நடராசனை' 'போகான்' துகள்களோடு சில 'ஆன்மிக திலகங்கள்' ஒப்பிட்டுக் கொண்டார்கள். பார்ப்பன எழுத்தாளர் சுஜாதா 'எலக்ட்ரான்கள்' பற்றி நாலாயிர திவ்யபிரபந்தத்திலேயே கூறப்பட்டிருக்கிறது என்றார். சர்.சி.வி.ராமன், புவிஈர்ப்பு விசையைக் கண்டறிந்த சர். அய்சக் நியூட்டன் உள்பட பல விஞ்ஞானி களிடம் இந்த 'கடவுள்' குழப்பம் இருந்தது. அவர்களின் உலகம் பற்றிய கண்ணோட்டம், பொருளைச் சார்ந்தது அல்ல. அது ஏதோ எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட பொருளுடன் தொடர்பில்லாத ஒரு சக்தி என்ற 'கருத்து முதல்வாத'ப் பார்வையில் எழுந்த கோளாறுதான் இதற்கு அடிப்படையான காரணம். உயிர் என்பது எப்படி தோன்றியது? உயிரே இல்லாத திடப்பொருள்களிலிருந்து தோன்றியது என்பது தான் விஞ்ஞானம் தரும் விடை. கார்பன், ஹைட்ரஜன், நைட்ரஜன், ஆக்சிஜன் இவை நான்கும் கலந்து உருவான 'புரோட்டோ பிளாசம்' தான் முதலில் உருவான உயிர். இந்த புரோட்டோ பிளாசம் தான் 'செல்'களாக மாறி, அதிலிருந்து வேறு வேறு செல்கள் பிரிந்து பல உயிர்கள் உருவாயின. ஒரு மெழுகுவர்த்தியின் ஒளியைக் கொண்டு பல மெழுகுவர்த் தியை கொளுத்துவதுபோல் தான் இது நடந்தது. ஜே.பி.எஸ். ஹால் டேன், ஏ.அய்.ஒப்பாரின் என்ற விஞ்ஞானிகள் இந்த விஞ்ஞான உண்மைகளை விரிவாக எழுதியுள்ளனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 2nd May 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மே 9, 2013 | புரட்சி 12 | முழக்கம் 17 | விலை: ரூ.3.00


## ‘ஜாதி வெறி’ வன்முறைகள்

மருத்துவர் ராமதாசை விடுதலை செய்யக் கோரி நாடு முழுதும் அரசுப் பேருந்துகள் தீக்கிரையாக்கப்படுவது வன்மையான கண்டனத்துக்கு உரியது. தமிழகம் முழுதும் 5 நாட்களில் 513 பேருந்துகள் தீ வைப்புக்கும் கல்வீச்சுக்கும் உள்ளாகியுள்ளன. மருத்துவர் ‘பெரிய அய்யா’ கைதாவதற்கு முன் அளித்த பேட்டியில், மரக்காணத்தில் தலித் மக்களே தங்கள் வீடுகளைக் கொளுத்திக் கொண்டு பா.ம.கவினர் மீது பழி போட்டு வருவதாகக் கூறியுள்ளார். ‘சின்ன அய்யா’வும் இதே கருத்தை வழி மொழிந்துள்ளார். பேருந்துகளை எரிப்பதுகூட விடுதலை சிறுத்தைகள் தானாம். இராமதாஸ் கைது செய்வதற்கு நாடு முழுதும் எதிர்ப்பு கொந்தளிக்கிறது என்று விடுதலை சிறுத்தைகளே வெளிப்படுத்த விரும்புகிறார்களா, என்ன! இப்படியா அபாண்டமாக பொய் கூறுவது?

பேருந்துகள் ஓட முடியாமல் முடக்கப்படுவதால் பொது மக்கள் கடும்பாதிப்புக்குள்ளாகி வருகிறார்கள். இதனால் பா.ம.க. மக்களின் வெறுப்புக்குள்ளாவதை அக்கட்சித் தலைமை உணர்ந்து தொண்டர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். தொல்பொருள் துறை கட்டுப்பாட்டிலுள்ள மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் உச்சியில் வன்னியக் கொடி ஏற்றியது, தங்கள் கட்சியினர்தான் என்பதை ‘சின்ன அய்யா’ ஒப்புக் கொண்டு வருத்தம் தெரிவித்துள்ளார். இதையும் விடுதலை சிறுத்தைகள் தான் செய்தார்கள் என்று பழி போடாமல் விட்டார்களே!

‘பெரிய அய்யா’ சிறையில் படிப்பதற்கு காந்தியார் நூல்களை எடுத்துச் சென்றதாக ஒரு செய்தி கூறுகிறது. அவர் காந்தியார் நூல்களை உடன் எடுத்துச் சென்றது படிப்பதற்காகவா? அல்லது காந்தியாரின் ‘அகிம்சை’ கருத்துகளையும் சிறைபடுத்துவதற்காகவா என்பது நமக்குப் புரியவில்லை.

ஜாதி அடிப்படையில் நடக்கும் வன்முறைகள் மனிதநேயத்தை தொலைத்துவிடும்; மக்கள் நலனையும் புதைத்து விடும்; வேண்டாம்; இந்த ஆபத்தான விளையாட்டுகள் என்று சமுதாயக் கவலையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்!

## “கருமுட்டை தானம் செய்ய பெண் தேவை”

‘தினத்தந்தி’ (மே 4) நாளேட்டில் ‘கரு முட்டை தானம் செய்ய பெண் தேவை’ என்று ஒரு விளம்பரம் வெளி வந்துள்ளது.

“குழந்தை இல்லாத தம்பதிக்கு கருமுட்டை தானம் செய்ய 30 வயதுக்குக் கீழ் ஒன்றோ, இரண்டோ குழந்தைகளை பெற்ற ஆரோக்கியமான பெண் தேவை. தகுதிக்கேற்ப நல்ல சன்மானம் வழங்கப்படும்” என்று அந்த விளம்பரம் கூறுகிறது. தொடர்பு எண்ணும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- ஜாதியை மீறி நடக்கும் திருமணம் என்றால் சாட்டையை சுழற்றும் வெறியர்கள்
- ‘அக்னியில் பிறந்தவர்கள்’ என்று வீரம் பேசுபவர்கள்

இந்த விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கு என்ன பதிலை கூறுவார்கள்? ‘கரு மூட்டை’ வழங்கும் பெண்ணுக்கும் ஜாதி பார்க்க வேண்டும்; இல்லாவிட்டால், கையை வெட்டுவோம் என்று முழங்குவார்களா?

கரு முட்டைக்கு ஜாதி இல்லை; அது எந்த கருப்பையிலும் வளரும்!

மனிதக் குருதிக்கு ஜாதி இல்லை; அந்த எந்த ஜாதி மனிதனுக்கும் பொருந்தும்!

அக்னிக்கும் ஜாதி இல்லை; அது யார் தொட்டாலும் சுடும்!

# பத்ரி நினைவுநாளில் 75 பேர் குருதிக்கொடை; மரணதண்டனை எதிர்ப்பு பரப்புரை இயக்கம்





சென்னையில் திருவல்லிக்கேணி பகுதியை கழகத்தின் கோட்டையாக்கி, ஏராளமான இளைஞர்களை பெரியார் கொள்கை வழியில் இணைத்து, களப்பணியாற்றிய கொள்கைத் தோழர் செ. பத்ரிநாராயணன் 9 ஆம் ஆண்டு நினைவு நாளான ஏப்.30 அன்று காலை முதல் நிகழ்வுகள் நடந்தன. 9 மணிக்கு பத்ரிநாராயணன் படிப்பகம் அருகே கழகத் தோழர்கள் திரண்டனர். தோழர் பத்ரி நாராயண னின் தன்முனைப்பற்ற உறுதியான கொள்கைப் பணிகளையும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அவர் உதவியதற்காக எதிர்கொண்ட காவல்துறை அடக்குமுறைகள் வழக்குகளையும் நினைவுகூர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் திரண்டிருந்த தோழர்களிடையே உரையாற்றினர். மண்டல செயலாளர் அன்பு தனசேகரன் அறிமுக உரையாற்றினார். அங்கிருந்து பத்ரி நாராயணன் நினைவிடம் நோக்கி தோழர்கள் வாகனங்களில் சென்றனர். நினைவிடத்தில் கழகத் தலைவர், பொதுச் செயலாளர் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். மாவட்ட செயலாளர் உமாபதி உறுதிமொழியை படிக்க, தோழர்கள் வழிமொழிந்தனர். “செயல் ஒன்றே சிறந்த பேச்சு; தன்னை முன்னிலைப்படுத்தாமல் கொள்கையை முன்னெடுத்துச் செல்” என்று பத்ரிநாராயணன் காட்டிய வழியில் பெரியார் கொள்கையை முன்னெடுப்போம் என்று தோழர்கள் உறுதி எடுத்த காட்சி உணர்ச்சிபூர்வமாக இருந்தது.

தொடர்ந்து, இராயப்பேட்டை முருகேசன் திருமணமண்டபத்தில் குருதிக் கொடை வழங்கப்பட்டது. இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் குருதிக் கொடைப் பிரிவு பெண் மருத்துவர் தமிழ் மணியம்மை தலைமையில் குருதிக் கொடை சேகரிக்கும் பிரிவினர் வந்திருந்தனர். 75 தோழர்கள் குருதிக் கொடை வழங்கினர். தோழர்கள் அனைவருக்கும் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது.

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 23 பேருக்கும் மரணதண்டனை வழங்கி, ‘தடா’ நீதிமன்றம் தீர்ப்பளித்தபோது அதை எதிர்த்து 1996 இல் நடந்த மரணதண்டனை எதிர்ப்பு இயக்கம் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையில் பழ. நெடுமாறன் தலைமையில் நடந்தது. இந்த இயக்கத்தில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்களோடு முழுமையாக பத்ரிநாராயணன் பங்கேற்றார். எனவே பத்ரி நாராயணன் நினைவு நாளில், அவர் தீவிரமாக களமிறங்கி செயல்பட்ட மரண தண்டனை எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுக்கும் வகையில் 7 நாள் பரப்புரை இயக்கத்தை சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் தொடங்கினர்.

ஏப்.30 ஆம் தேதி இரவு சென்னை தியாகராயர் நகர் முத்துரங்கன் சாலையில் மூவர் உயிர்காப்புக் குழு சார்பில் நடந்த மரணதண்டனைக்கு எதிரான கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ




இந்தப் பயணத்தைத் தொடங்கி வைத்தார்.

மே 1 - மாலை - திருவல்லிக்கேணி பகுதியில் 3 இடங்களிலும்; மே 2 - புரசைப்பகுதியில் 3 இடங்களிலும்; மே 3 - மயிலைப் பகுதியில் 3 இடங்களிலும்; மே 4 - புதுவண்ணைப் பகுதியில் 3 இடங்களிலும் பரப்புரைக் கூட்டங்கள் நடந்தன.

4 ஆம் பக்கம்

## திருப்பூரில் கழக மாநில செயற்குழு கூடுகிறது

திராவிடர் விடுதலைக் கழக மாநில செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 26.5.2013 அன்று காலை 10 மணிக்கு திருப்பூரில் கூடுகிறது. செயற்குழு உறுப்பினர்கள் தவறாது பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இடம் : திருப்பூர் அன்னபூர்ணா அரங்கம் (தொடர்வண்டி நிலையம் - பெரியார்-அண்ணா சிலை அருகில்)

**பொருள் :**

1. நடந்து முடிந்த மனுசாஸ்திர எரிப்புப் போராட்டம் குறித்த ஆய்வு
2. தமிழகத்தில் தலைதூக்கும் சாதியப் பிரச்சினைகள்
3. கழகத்தின் அடுத்த வேலைத் திட்டங்கள்.

தோழமையுடன்,
கொளத்தூர் மணி
(தலைவர்)
விடுதலை இராசேந்திரன்
(பொதுச் செயலாளர்)

**தலையங்கம்**

# அதிகார அரசியலுக்கு பலியாகும் மனித உயிர்கள்

பேராசிரியர் புல்லார் வழக்கில் தூக்குத் தண்டனையை உறுதி செய்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜி.எஸ்.கிங்வி, எஸ்.கே. முகோபாத்யா ஆகியோர் அசாமைச் சார்ந்த மகேந்திரநாத் தாஸ் என்பவருக்கு தூக்குத் தண்டனையை ரத்து செய்துள்ளனர். புல்லார் கருணை மனு நீண்டகாலம் கிடப்பில் போடப்பட்டிருந்ததால் அவருக்கு கருணை காட்ட முடியாது என்று கூறிய உச்சநீதிமன்றம், பயங்கரவாத தடை சட்டங்களின் கீழான வழக்குக்கு இந்த ‘காலதாமதம்’ என்ற வாதம் பொருந்தாது என்று கூறிவிட்டது.

இந்தத் தீர்ப்பு – ஏற்கனவே 1980 இல் அய்ந்து நீதிபதிகள் அடங்கிய அரசியல் சட்ட அமர்வு தூக்குத் தண்டனைகளுக்கு முன் நிபந்தனையாக வரையறுத்த ‘அரிதிலும் அரிதான வழக்கு’ என்ற வரையறுப்புக்கு மாறானது. அதில் சொல்லப்படாத ஒரு கருத்தை இந்த இரண்டு நீதிபதிகளும் ‘பயங்கரவாத தடை’ சட்டத்தில் கீழான வழக்குக்கு தூக்குத் தண்டனை தான் என்று அறிவித்து விட்டனர். இதே நீதிபதிகள், அடுத்த சில வாரங்களில், மகேந்திரதாஸ் என்பவர் வழக்கில் கருணை மனு தாக்கல் செய்து, 12 ஆண்டுகள் கழிந்துவிட்டது என்ற காரணத்தைக் காட்டி, அவரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்துவிட்டனர்.

அரிதிலும் அரிதான வழக்குகளை தீர்மானிப்பதற்கு அய்ந்து வழி காட்டுதல்களை உச்சநீதிமன்றத்தின் அரசியல் சட்ட அமர்வு 1980 ம் ஆண்டு வழங்கியது. 16 ஆண்டுகளுக்குப் பிறகு 1986 ஆம் ஆண்டிலும், 1987 ஆம் ஆண்டிலும் 5 நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புக்கு நேர் எதிராக இரண்டு நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். அதாவது, அரிதிலும் அரிதான வழக்கை தீர்மானிக்கும்போது குற்றத்தை மட்டும் பார்க்காமல் அதற்கு இணையாக குற்றவாளியின் பின்னணியையும் பார்க்க வேண்டும் என்ற உச்சநீதிமன்ற அரசியல் சட்ட அமர்வு வழங்கிய தீர்ப்புக்கு எதிராக குற்றவாளி பின்னணியை பார்க்க வேண்டிய அவசியமில்லை என்று இரண்டு நீதிபதிகள், 1996 ஆம் ஆண்டிலும், 1977 ஆம் ஆண்டிலும் தீர்ப்பளித்து தூக்குத் தண்டனையை வழங்கிவிட்டனர். இந்தத் தவறான தீர்ப்பை முன்னுதாரணமாகக் கொண்டு அதற்குப் பிறகு 6 வழக்குகளில் 7 பேருக்கு தூக்குத் தண்டனைகள் வழங்கப்பட்டுவிட்டன. 2009 ஆம் ஆண்டில்தான் உச்சநீதிமன்றமே அந்தத் தவறை உணர்ந்தது. மராட்டிய மாநிலத்தைச் சார்ந்த 3 தூக்குத் தண்டனை வழக்குகள் உச்சநீதிமன்றத்தின் மேல்முறையீட்டுக்கு வந்தபோதுதான் 9 ஆண்டுகளாக “பிழையாலும் அறியாமையினாலும் தூக்குத் தண்டனை விதிக்கும் தீர்ப்புகள் வழங்கப் பட்டுள்ளன (per incurion) என்பதை ஒப்புக் கொள்கிறோம்” என்று உச்சநீதிமன்றமே ஏற்றுக் கொண்டது. மனித உயிர்களோடு விளையாடும் உச்சநீதிமன்றத்தின் குளறுபடிகள் இப்படி என்றால், குடியரசுத் தலைவர் பரிசீலனைக்கு வரும் கருணை மனுக்களிலும் குளறுபடிகள் நடந்து வருகின்றன.

மகேந்திரதாஸ் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜி.எஸ்.சிங்வி, எஸ்.கே. முகோபாத்யாயா ஆகியோர் தங்கள் தீர்ப்பில் உள்துறை அமைச்சகம் நடத்தும் ‘தில்லுமுல்லு’களை சுட்டிக் காட்டியுள்ளனர். 2009 ஆம் ஆண்டில் மகேந்திரதாசை தூக்கிலிடுவதற்கு உள்துறை அமைச்சகம் பரிந்துரைத்து, அன்றைய குடியரசுத் தலைவர் அப்துல்கலாமுக்கு அனுப்பியபோது, அப்துல்கலாம் பரிந்துரையை ஏற்கவில்லை. ஆயுள் தண்டனையாக குறைக்க பரிந்துரைத்தார். கலாமைத் தொடர்ந்து பிரதிபாபாட்டீல், குடியரசு தலைவராக வந்தபோது அதே மகேந்திரதாசுவின் கருணை மனுவை நிராகரித்து உள்துறை அமைச்சகம் மீண்டும் பரிந்துரைத்தது. அப்போது ஏற்கனவே கலாம் ஆயுள் தண்டனையாக குறைத்து முன் வைத்த குறிப்பை பிரதிபாபாட்டீல் பார்வைக்கு அனுப்பாமலே உள்துறை அமைச்சகம் மறைத்துவிட்டது. இதன் மூலம் தனக்கு முன்னாள் இருந்த குடியரசுத் தலைவர் எடுத்த முடிவு தெரிவிக்கப்படாமல், பிரதிபாபாட்டீல், உள்துறை அமைச்சகத்தால் இருளில் ஆழ்த்தப்பட்டார் என்று நீதிபதிகள் தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உள்துறை அமைச்சகம் கருணை மனுக்களை நிராகரித்து அனுப்பிய 15 பேர் பட்டியலை பிரதிபாபாட்டீல் கிடப்பில் வைத்துவிட்டார். தூக்குத் தண்டனை வழங்கிடக்கூடாது என்ற நோக்கத்தில் அவர் மேற்கொண்ட நல்ல நடவடிக்கை இது. அப்சல் குருவுக்கு கருணை மனுவை நிராகரித்து, உள்துறை அமைச்சகம் பிரதிபா பாட்டிலுக்கு அனுப்பியபோது (2011, ஆகஸ்ட் 4), பாட்டீல் உள்துறை அமைச்சகத்தின் முடிவை ஏற்கவில்லை. தனது பதவிக்காலம் முடியும் வரை பாட்டீல் கிடப்பிலேயே வைத்திருந்தார். 2012 ஜுலையில் பிரணாப் முகர்ஜி, குடியரசுத் தலைவராக வந்தவுடன், பிரதிபாபாட்டீல் கிடப்பில் போட்ட 15 பேரின் கருணை மனு பட்டியலை மீண்டும் உள்துறை அமைச்சகம் புதிய குடியரசுத் தலைவருக்கு அனுப்பி தூக்கிலிட பரிந்துரைத்தது. உடனே பிரணாப் முகர்ஜியும் ஏற்பு வழங்கிவிட்டார். குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர்.நாராயணன், இராதாகிருட்டிணன் போன்றவர்கள் தங்கள் பதவி காலத்தில் ஒருவருக்குக்கூட தூக்குத் தண்டனை வழங்க அனுமதிக்கவில்லை. அப்துல்கலாம் மேற்கு வங்கத்தைச் சார்ந்த சாட்டர்ஜி என்ற ஒருவருக்கு மட்டுமே கருணை மனுவை நிராகரித்தார். பேரறிவாளன், சாந்தன், முருகன் உள்ளிட்ட பல கருணை மனுக்களை மறுபரிசீலனைக்கு உள்துறை அமைச்சகத்துக்கு கலாம் திருப்பி அனுப்பி தூக்குத் தண்டனை வேண்டாம் என்றே பரிந்துரைத்தார்.

மீண்டும் உள்துறை அமைச்சராக இருந்தபோது ப.சிதம்பரம், இதே கருணை மனுக்களை தள்ளுபடி செய்து, குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார்.

ஆக, உச்சநீதிமன்றங்கள் ஆனாலும் சரி, குடியரசுத் தலைவரிடம் வரும் கருணை மனுக்கள் ஆனாலும் சரி, விருப்பு வெறுப்புக்கேற்றபடியே நகர்த்தப்படுகின்றன. ஒரே சீரான நெறிமுறைகள் பின்பற்றப்படுவது இல்லை. அரசியல் சட்டம் வழங்கும் அதிகாரத்தையும் நடைமுறைகளையும் மனித உயிர்களுக்கு எதிராக சதுரங்கத்தில் நகர்த்தப்படும் பகடைக்காய்களாக்கி வருகிறார்கள். தூக்குத் தண்டனையை சட்டப் புத்தகத்திலிருந்து நீக்குவதுதான் இதற்கு ஒரே வழி!

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற நிகழ்வுகள்

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அருகே உள்ள திருப்பனந்தாளில் 28.4.2013 அன்று திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் த.சு. கார்த்திகேயன்-ச.மனோன்மணி ஆகியோரது வாழ்க்கை இணை ஏற்பு விழா நடைபெற்றது.

4.5.2013 சனிக்கிழமை அன்று தஞ்சை மாவட்டம் காவிரி நகர் சுந்தர் மகாலில், மீத்தேன் மற்றும் நிலக்கரி எடுப்பிற்கு எதிரான கருத்தரங்கம் மற்றும் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இதில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார், அரங்க. குண சேகரன் முதலானோர் கலந்து கொண்டனர்.

5.5.2013 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் புதுச்சேரி எல்லைப் பிள்ளைச் சாவடி என்.டி.மகாலில், புதுவை மாநில கழக இளைஞரணிச் செயலாளர் வெ.இராசா-வே.க.அம்பிகா ஆகியோருடைய வாழ்க்கை துணையேற்பு விழா நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடை பெற்ற இவ்விழாவில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிறுவனத் தலைவர் தி.வேல்முருகன், புதுவை மாநில தி.வி.க. தலைவர் லோகு. அய்யப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஒவ்வொருவரும் தனது பெயருக்கு முன்னால், தந்தை பெயரின் முன் எழுத்தை மட்டும் போட்டுக் கொள்ளும் வழக்கிற்கு மாறாக, தந்தை மற்றும் தாய் இருவர் பெயர்களின் முதல் எழுத்தை போட்டுக் கொள்ளும் வழக்கத்தை கடைபிடித்து வரும் மணமகளை பாராட்டுவதோடு, இதை முன் மாதிரியாக எடுத்துக் கொண்டு அனைவரும் கடைபிடிக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் கொளத்தூர் மணி முன் வைத்தார். மணவிழா மகிழ்வாக கழக ஏட்டிற்கு மணமக்கள் சார்பாக ரூ.5000 நன்கொடை வழங்கப்பட்டது.




சென்னை திருவொற்றியூரில் 5.5.2013 அன்று ஈழத் தமிழர் பிரச்சினைக்காக எம்.ஆர்.எப். தொழிலாளர்கள் ஒரு நாள் உண்ணாநிலை போராட்டம் நடத்தினர். மாலையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் முதலானோர் கலந்து கொண்டு போராட்டத்தை முடித்து வைத்தனர்.

# மரக்காணத்தில் நேரில் சென்று நடத்திய ஆய்வு

காஞ்சிபுரம் மாவட்டம், மகாபலிபுரத்தில் நடைபெற்ற கோடி வன்னியர்கள் கூடும் **‘சித்திரை முழு நிலவு வன்னிய இளைஞர் பெருவிழா’**வையொட்டி 25.4.2013 அன்று கிழக்குக் கடற்கரைச் சாலை மரக்காணம் காலனி (தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு) கட்டையன் தெரு, இடை கழியூர், கூனிமேடு ஆகிய இடங்களில் தலித் மக்கள் தாக்கப்பட்டது மற்றும் குடியிருப்புகள் கொளுத்தப்பட்டது குறித்த உண்மைகளை அறிய மக்கள் சிவில் உரிமைக் கழகம் (ம.சி.உ.கழகம்), தமிழ்நாடு -பாண்டிச்சேரி, ஒரு குழுவினை அமைத்தது.

பேராசிரியர் சரசுவதி-தலைவர் (ம.சி.உ.க.), பா. செயப்பிரகாசம், எழுத்தாளர், த. முகேஷ், பொறியாளர் - ம.சி.உ. கழக மாநில பொதுக் குழு உறுப்பினர், ராகவராஜ் - ம.சி.உ. கழக மாநில பொதுக் குழு உறுப்பினர், கௌதம் பாஸ்கர் - புதுவை சட்டக் கல்லூரி மாணவர் ஆகியோர் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

உண்மை அறியும் குழுவினர் 29.4.2013 திங்களன்று தாக்குதலுக்குள்ளான பகுதிகளையும் வீடுகளையும் தலித் மக்களையும் நேரில் சென்று பார்த்தனர். மக்களைச் சந்தித்தனர்.

பாண்டிச்சேரியிலிருந்து / பாண்டிச்சேரி வழியாக விழாவிற்கு வந்தவர்கள், பாண்டிச்சேரியில் ஏராளமான காலி மது பாட்டில்களையும் சேகரித்திருக் கிறார்கள். தாங்கள் பயணம் செய்த வாகனங்களிலேயே தாக்குதல்களுக்கான ஆயுதங்களையும் எடுத்து வந்திருக்கிறார்கள். தாக்குதலை நடத்தியவர்கள் வெளியூர்காரர்கள்தான் என்றாலும், அவர்களுக்குத் தேவையான தகவல்களைத் தந்து உதவியிருப்பவர்கள் உள்ளூர்க்காரர்களே. பிற சாதியினர் வீடுகள் எதுவும் தாக்கப்படவில்லை. உதாரணமாக, கழியூர் குப்பத்தில் பிற சாதியினர் வீடுகளைத் தாண்டி இருக்கும் தலித் வீடுகளை, உள்ளூர்காரர்கள் தான் அடையாளம் காட்டியிருக்க வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது. அதைப் போலவே மரக்காணம் கி.க. சாலையிலிருந்து பார்க்கும்போது, காடுகள் அடர்த்தியாக இருப்பதன் காரணமாக, காலனி இருப்பதே கண்களுக்குத் தெரியாது. உள்ளூர்க்காரர்கள் காட்டியிருக்காவிட்டால், வெளியூர்க்காரர்கள் அறிய வாய்ப்பில்லை.

2002 ஆம் ஆண்டிலிருந்தே சமுதாய மோதல் வரலாறு கொண்ட பகுதி என்பதாலும், அண்மையில் தருமபுரி தாக்குதல் நடந்திருப்பதைக் கருத்தில் கொண்டும் காவல்துறை கூடுதல் கவனம் செலுத்தி, தாக்குதல்களும் மோதல்களும் நிகழாமல் செயல்பட்டிருக்க வேண்டும். அன்று அந்தப் பகுதியில் போதுமான காவலர்கள் இல்லை என்பது, காவல் துறையின் மெத்தனப் போக்கையும், அலட்சிய அணுகுமுறையையும் காட்டுகிறது.

## 1930 இல் சேலம் வன்னியர் மாநாட்டில் பெரியார் பேச்சு

# க்ஷத்திரிய ஜாதிப் பெருமை பேசாதீர்கள்!

***1930 ஆம் ஆண்டு சேலத்தில் நடந்த வன்னிய குல க்ஷத்திரியர் மாநாட்டில் பெரியார் நிகழ்த்திய இந்த உரை காலத்தின் தேவை கருதி வெளியிடப்படுகிறது.***

சகோதரர்களே!

உங்கள் சமூகமானது தென்னிந்தியாவில் ஒரு பெரிய சமூகமாக இருக்கிறது. உங்கள் சமூகம் பொதுவாக நாட்டிற்கு பெரிதும் பிரயோஜனமுள்ள விவசாயத் தொழில் முதலிய வேலைகளைச் செய்யக் கூடியதாகவும் இருக்கிறது. உங்கள் சமூகத்தில் அனேக பெரியார்களும் இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட ஒரு பெரிய சமூக மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டதற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சந்தர்ப்பத்தை எனக்கு ஒரு பெருமையாகவும் கருதிக் கொள்ளுகிறேன். ஆனால், இதைத் திறந்து வைக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் நான் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். அதாவது புராணக் குப்பைகளிலிருந்து ஆதாரம் தேடி நான் உங்கள் குலப் பெருமையைப் புகழ்ந்து கூறி ஆகாயமளாவ உங்களை மகிழ்வித்து ஏமாற்றிவிட்டுப் போக நான் இங்கு வரவில்லை. மற்றபடி நான் எந்தத் துறையில் ஈடுபட்டு வேலை செய்து கொண்டு இருக்கிறேனோ எந்தக் கொள்கைகள் நாட்டின் முன்னேற்றத்திற்குச் சாதகம் ஆனவைகள் எனக் கருதி தொண்டாற்றுகின்றேனோ அதைப் பற்றியேதான் இப்பொழுதும் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லப் போகிறேன். நான் சொல்லுவனவற்றில் பல உங்கள் மனதிற்குச் சங்கடத்தைக் கொடுத்தாலும் கொடுக்கலாம். பல உங்களுக்குப் பிடிக்காமலிருந்தாலுமிருக்கலாம். எப்படி இருந்த போதிலும் என் சொற்கள் முழுவதையும் அப்படியே ஒப்புக் கொள்ள வேண்டுமென்று நான் கூறப் போவதில்லை. நான் கூறுவனவற்றை நீங்கள் நன்றாக ஆராய்ந்து பார்த்து உங்கள் புத்திக்குச் சரியெனப்பட்டால் ஒப்புக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் தள்ளி விடுங்கள் என்ற முறையில்தான் சில சொல்லுகிறேன்.

சகோதரர்களே,

பொதுவாக இதுபோன்ற ஜாதி மகாநாடுகள் இனி கூட்டுவதாயிருந்தால் தங்கள் ஜாதிப் பெருமையைப் பற்றி பாட்டிக் கதைகள் பேசி அர்த்தமற்றதுமான பெருமைப் பாராட்டிக் கொள்ளுவதற்காகக் கூட்டுவதாய் இருக்கக் கூடாது என்றும் தங்கள் ஜாதியோ சமூகமோ இன்னும் தனியாகவே பிரிந்திருக்கும்படி வெறும் தங்கள் ஜாதி உயர்வையே பேசிக் கொண்டிருக்கக் கூட்டப் படக் கூடாது என்றும் முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இம் மகாநாட்டின் பயனாகவாவது நீங்கள் உங்களுக்கு மேல்ஜாதி ஒன்று இருக்கின்றது என்று எண்ணிக் கொண்டிருப்பதையும் நீங்கள் சில ஜாதிக்கு மேலானவர்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பதையும் அடியோடு ஒழித்துவிட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஏனெனில் நீங்கள் சில ஜாதிக்குப் பெரியார்கள் ஆக வேண்டுமென்றும் ஆசையால் செய்யும் முயற்சியானது மற்றொரு ஜாதியைவிட நீங்கள் கீழ் ஜாதியென்று நீங்களாகவே ஒப்புக் கொண்டவராகிறீர்கள். இதனால் உங்களாலேயே உங்களுக்கு கீழ் ஜாதி பட்டம் நிலைத்து விடுவதோடு நீங்கள் மேல் ஜாதி என்கின்ற தத்துவம் தகராறில் இருந்து விடுகின்றது.

உதாரணமாக இப்பொழுது நீங்கள் உங்களை வன்னியகுல க்ஷத்திரியரென்றும் சொல்லிக் கொள்ளுகிறீர்கள். இதனால் நீங்கள் தங்களை பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு கூட்டத்தாராகிய பார்ப்பனர்களுக்கு கீழ்பட்ட ஜாதியார் என்பதை சிறிதும் எதிர்வாதமில்லாமல் ஒப்புக் கொண்டவர்களாகிவிட்டீர்கள். ஆனால் உங்கள் க்ஷத்திரியத் தன்மையாலோ தகராறுகளுக்கு குறைவில்லை. நீங்கள் வன்னியர் குல க்ஷத்திரியரென்றால் நாடார்கள் தங்களை அக்கினி குல க்ஷத்திரியர்களென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய பூணூல் கயிறும் உங்கள் பூணூல் கயிற்றைவிட கொஞ்சமும் இளைத்ததல்ல. ஆனால் நாடார்களை க்ஷத்திரியர்கள் என்று ஒப்புக் கொள்ளாமல் இழி வார்த்தை என்று நீங்கள் கருதும் ஒரு பெயரை சொல்லி உங்களை கூப்பிடுகிறார்கள். நீங்களும் அதுபோலவே நாடார்களை க்ஷத்திரியர்கள் என்று ஒப்புக் கொள்ளாமல் இழி வார்த்தை என்று அவர்கள் கருதும் ஒரு பேரைச் சொல்லி அவர்களை நீங்கள் கூப்பிடுகிறீர்கள். கடைசியில் கேசு ஏற்பட்டு பணச்செலவு செய்து யாராவது ஒருவர் தண்டனையும் அடைய நேருகின்றது. நாயுடு ஜாதி என்றும் எங்கள் ஜாதிக்காரர்கள் உங்கள் இரண்டு பேரையும் க்ஷத்திரியர்கள் அல்ல என்று சொல்லிவிட்டு தாங்கள் தான் க்ஷத்திரியர்கள் என்கிறார்கள். ராஜா என்கின்ற மற்றொரு ஜாதிக்காரர்கள் நீங்கள் மூன்று பேரும் க்ஷத்திரியர்கள் அல்ல. நாங்கள் தான் க்ஷத்திரியர்கள் என்கின்றார்கள். சிங்கு மராட்டியர் ஆகியவர்கள் நீங்கள் நால்வரும் க்ஷத்திரியர்கள் அல்ல; நாங்கள் தான் சரியான க்ஷத்திரியர்கள் என்கிறார்கள். இதுபோல் இன்னமும் குடகு க்ஷத்திரியர்கள் எத்தனையோ பேர் க்ஷத்திரியப் பட்டத்திற்கு இத்தனைப் பேர்கள் ஒருவருக்கு ஒருவர் போட்டியும், சண்டையும் போட்டுக் கொள்ளுகின்றார்களே ஒழிய இதன் பலனாய் எச்சில் கிண்ணம் கழுவுபவனுக்கும், பிச்சை எடுத்து வாழுபவனுக்கும் தரகு வேலை செய்பவனுக்கும் நோகாமல் பிராமணப் பட்டம் கிடைத்துவிட்டது. அப்படி கிடைக்கப்பெற்ற அந்தப் பிச்சைத் தொழில் பார்ப்பான் உங்களிடம் பணமும் வாங்கிக் கொண்டு மகாநாடு கூட்டி, க்ஷத்திரியன் உலகத்திலேயே கிடையாது என்று விளம்பரப்படுத்தி சொல்லி விடுகிறான். அப்படி இருந்தும்கூட அவனிடம் உங்கள் ஒருவருக்கும் சிறிதும் தகராறு கிடையாது. அன்றியும் அவர்களுக்கு முத்தமிட்டு காலைக் கழுவி தண்ணீரைக் குடிக்கப் போட்டி போடுவதில் குறைச்சலுமில்லை. உங்கள் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் அனேகமாய் அவன் குருவாக இருக்கிறான். ஆகவே இந்த மாதிரி ஒரு இழிவானதும் முட்டாள்தனமானதும் அர்த்தமற்றதுமான காரியங்களுக்கு இம் மாதிரி மகாநாடுகள் இனியும் கூட்டுவதாயிருந்தாலும் இம்மகாநாடுகள் அழிந்து போவதே மேல் என்று மிக்க வருத்தத்துடன் சொல்லிக் கொள்ளுகிறேன். தங்கள் ஜாதி உயர்ந்த ஜாதி என்று சொல்லிக் கொள்ளுவதற்கு மாத்திரமே நாட்டில் இப்போது எங்கும் ஜாதி மகாநாடுகள் கூட்டப்படுவதும், அதோடு பிற ஜாதிகளை சாடையாயும் வெளிப்படையாயும் இகழ்வதும் சாதி மகாநாடுகளின் சுபாவமாய்விட்டது. இதன் பலனாகவே சக்கிலியர்கள் என்பவர்கள் தங்களை அருந்ததியர்கள் என்பதும், பள்ளர்கள் என்பவர்கள் தங்களை தேவேந்திரகுல வேளாளர்கள் என்பதும், ஆசாரிகள் என்பவர்கள் தங்களை விஸ்வப் பிராமணர்கள் என்பதும், சௌராஷ்டிரர்கள் என்பவர்கள் தங்களை சௌராஷ்டிரப் பிராமணர்கள் என்பதும், தேவாங்கர்கள் என்பவர்கள் தங்களை தேவாங்கப் பிராமணர்கள் என்பதும், குயவர்கள் தங்களை குலால விஸ்வ பிராமணர்கள் என்பதும், சாலியர்கள் என்பவர்கள் தங்களை சாலிய பிராமணர்கள் என்பதும், இவ்வளவு சமூகத்தார்களும் தங்கள் தங்கள் உடலினால் கஷ்டப்பட்டு தொழில் செய்து பிற ஜனங்களுக்கு உதவியும் செய்து நியாயமான வழியில் வாழ்க்கை நடத்திக் கொண்டு தங்களை பிராமணன், இந்திரன், அருந்ததி, சந்திரன் என்று பல ஒழுக்கமற்ற சோம்பேறிப் பட்டங்களை வைத்துக் கொள்ள முயற்சிக்கின்றதை பார்க்கின்றோம்.

ஆனால், பார்ப்பான் பிச்சை எடுத்து சாப்பிட்டும் நோகாமல் மற்றொருவன் உழைப்பில் சாப்பிட்டுக் கொண்டும் இருந்துகொண்டு நீங்கள் யாரும் பிராமணர்கள் அல்ல க்ஷத்திரியர்கள் கூட அல்ல பேசப் போனால் வைசியர்கூட அல்ல. நாங்கள்தான் பிராமணர்கள். நீங்கள் எல்லோரும் எங்களுக்குத் தொண்டு செய்ய எங்கள் வைப்பாட்டி மக்களாய் இருக்க கடவுளால் பிறப்புவிக்கப்பட்ட சூத்திரர்கள் என்று தைரியமாய் சொல்லி சிவில் கிரிமினல் சட்ட புஸ்தகத்திலும் அதை ஸ்தாபித்து விட்டு மற்றும் சில உரிமைகளையும் தனக்கு வைத்துக் கொண்டு சௌகரியமாய் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். அந்த சோம்பேறி சௌக்கிய நிலை நிலைப்பதற்கேதான் இப்பேர்ப்பட்ட நமது ஜாதி மகாநாடுகள் பெரிதும் உபயோகப்படத்தக்கதாய் இருக்கின்றன என்பதே எனது முடிவான அபிப்பிராயம். ஆகையால் சகோதரர்களே இனி இந்த மாதிரியான சமூக மகாநாடுகளில் இம்மாதிரியான சாதி உயர்வு தாழ்வுகளைப் பற்றிய பேச்சே இருக்கக் கூடாது என்றும் மற்ற சாதியார் என்பவர்களுடன் நாம் எப்படி கலப்பது? நாம் எவருக்கும் கீழ் ஜாதி அல்ல என்கின்ற தன்மை எப்படி அடைவது? நமக்குக் கீழும் நமது நாட்டில் எந்த சாதியும் இல்லை. நாம் எல்லோரும் சமமே என்கின்றதான சமதர்ம நிலையை எப்படி உண்டாக்குவது என்கின்ற காரியத்திற்கே பாடுபட வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

**– பெரியார் (1.6.1930 ‘குடிஅரசு)**

## கழிப்பறைகளுக்கு தடை போடும் ‘வாஸ்து’

‘வாஸ்து’ நம்பிக்கை – மத மூடநம்பிக்கைகளால் கழிப்பறை கட்டுவதற்கு மறுக்கும் மக்கள் இருக்கிறார்கள். கழிப்பறை கட்டாமல் பொதுவிடங்களில் மலம் கழிக்கும் பழக்கம் – இந்த மூடநம்பிக்கைகளால் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. நாமக்கல் மாவட்டம் பரலி பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதியில் அருணா (42), பெரியசாமி (45) தம்பதியினர் வீட்டுக்கு கழிப்பறைக் கட்டுவதற்கு குழிதோண்டி முடித்த பிறகு, சோதிடர் வீட்டுக்கு அருகே குழி தோண்டினால் 5 வயது மகனுக்கு ஆபத்து வரும் என்று கூறினாராம். உடனே கழிப்பறைக் கட்டுவதை கைவிட்டுவிட்டனர். அனியாபுரம் பஞ்சாயத்தில் ரூ.6000 செலவிட்டு கழிப்பறையைக் கட்டி முடித்த தச்சுத் தொழிலாளி சிவசக்தி (30), ‘வாஸ்து’ சோதிடர் ஒருவர் பேச்சைக் கேட்டு கட்டிய கழிப்பறையை இடித்துத் தள்ளியுள்ளார். கோயில் விழாக்கள் நடக்கும் காலத்தில் கழிப்பறை கட்டுவது கெட்ட சகுனம் என்று நம்பி, கிராம மக்கள் கழிப்பறை கட்டுவதையே நிறுத்தி வருகிறார்கள்.

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நாமக்கல் மாவட்டத்தில் 43.8 சதவீத மக்கள் பொதுவிடங்களிலேயே மலம்–சிறுநீர் கழிக்கிறார்கள். கிணறுகள், ஆழ்குழாய்கள் அருகே கழிப்பறை அமைப்பது சுகாதாரக் கேடு என்றாலும், பல வீடுகளில் ‘வாஸ்து’ சோதிடர் கருத்துப்படி கிணற்றுக்கு அருகிலேயே கழிப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன என்கிறார் தொண்டு நிறுவனம் நடத்தும் பால் அருண். கழிப்பறைகளை ஊக்குவிக்கும் தொண்டு நிறுவனங்களை நடத்திவரும் எஸ்.எஸ்.சத்தியநேசன் என்பவர், மக்கள் மூடநம்பிக்கையில் தீவிரமாக இருக்கும் வரை அவர்களிடம் கழிப்பறை கட்டக் கோரும் இயக்கம் வெற்றிப் பெற முடியாது என்று கூறுகிறார்.

நாமக்கல் மாவட்டத்திலுள்ள கிராமங்களில் இது குறித்து ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. ஆண்டு ஒன்றுக்கு மதப் பண்டிகைகளுக்கு ரூ.8000 வரை செலவிடும் பல குடும்பங்கள், அதே செலவில் ஒரு கழிப்பறை கட்டிக் கொள்ள தயாராக இல்லை என்று அந்த ஆய்வு கூறுகிறது. வீட்டுக்கு கழிப்பறை கட்டாயத் தேவை என்றாலும், பலரும் வீட்டுக்குள்ளே கழிப்பறை கட்டுவதில்லை. வீட்டுக்குள் கெட்ட வாடை வீசும் என்று அஞ்சுகிறார்கள். வீட்டுக்குள்ளே கழிப்பறை கட்டுவதால் செலவு குறையும். ஆனால், வீட்டைவிட்டு வெகுதொலைவில் கழிப்பறை கட்டுகிறார்கள். இரவு நேரங்களில் பெண்கள் பயன்படுத்துவதில் சங்கடம் ஏற்படுகிறது என்கிறார், இத்திட்டத்துக்கான பெண் அதிகாரி வனிதா தெய்வமணி.

‘இந்து’ நாளேடு (மே 6) முதல் பக்கத்தில் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. மனிதர்கள் மலம் கழிப்பதே குடும்பத்துக்கு கேடு என்று ‘வாஸ்து’ பண்டிதர்கள் கூறினாலும் அதை நம்பும் கூட்டம் இங்கே இருக்கிறது!

இதையெல்லாம் மக்களிடம் விளக்கிட – பகுத்தறிவுப் பரப்புரை வேண்டாமா?

DATE OF PUBLICATION 08.05.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# கோவை மாவட்டத்தில் இரட்டை தம்ளர் தீண்டாமை: கழகம் களமிறங்குகிறது

கோவை மாவட்டம் கிணத்துக்கடவு வட்டத்தில் தீண்டாமைக் கொடுமைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தீண்டாமை ஒழிப்புக்காக செயல்படும் காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் குறட்டைவிட்டு உறங்கிக் கொண்டிருக்கிறது. மக்களிடையே தீண்டாமைக்கு எதிராக விழிப் புணர்வை உருவாக்குவதற்காக வழங்கப்பட்ட அரசு வாகனங்கள் பயன்படுத்தப் படாமல் தூசி படிந்து முடங்கிப் போய் கிடப்பதை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு (ஏப்.30) படம் பிடித்து வெளியிட்டுள்ளது.

கிணத்துக்கடவு வட்டத்தில் தேனீர்க் கடைகளில் இரட்டைக்குவளை முறை கீழ்க்கண்ட கிராமங்களில் தொடர்ந்து வருகிறது. கொண்டம்பட்டி, ஓமலூர், மாம்பள்ளி, பகவதிபாளையம், சொலவம்பாளையம், மயிலேறிபாளையம், பனப்பட்டி, மெட்டுவாவி, பெரும்பதி, மீனாட்சிபுரம், வழுக்குப் பாறை, வீரப்ப பவுண்டன் புதூர், சின்னேரி பாளையம், மூட்டாம்பாளையம், கோதவாடி, காரச்சேரி, சிங்காரம்பாளையம், குருநல்லி பாளையம், மேலும், தாழ்த்தப்பட் டோருக்கு, வடசித்தூர், முத்துக்கவுண்டன்பாளையம், அரசம்பாளையம் ஆகிய கிராமங்களில் முடிவெட்ட மறுக்கப்படுகிறது. முதல்கட்டமாக அரசின் கவனத்தை ஈர்ப்பதற்கு திராவிடர் விடுதலைக் கழகம் கிணத்துக்கடவுவில் மே 11 ஆம் தேதி மாலை 3 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துகிறது. கழக வெளியீட்டுச் செயலாளர் நா.தமிழ்ச்செல்வி தலைமையில் இராமகிருட்டிணன், கார்க்கி முன்னிலையில் நடக்கும் ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட தலைவர் திருப்பூர் துரைசாமி, கோவை மாநகர மாவட்ட தலைவர் வழக்கறிஞர் பன்னீர்செல்வம், மண்டல செயலாளர் விஜயன், மாவட்ட தலைவர் வெள்ளமடை நாகராசன், மாவட்ட செயலாளர் பாலமுரளி, திருப்பூர் மாவட்ட செயலாளர் அகிலன், கோவை மாவட்ட துணைத் தலைவர் நா.வேநிர்மல், ஆதித் தமிழர் பேரவை மாவட்ட தலைவர் கோபால், வழக்கறிஞர் வெண்மணி, சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி அமைப்பாளர் கணபதி உள்ளிட்ட பலரும் கண்டன உரையாற்றுகிறார்கள்.

**எம்பி.ஏ. படித்த சோனியா**

கிராமங்களில் தீண்டாமைக் கொடுமைகள் தலைவிரித்தாடுவது குறித்து ஒவ்வொரு நாளும் ஏடுகளில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ளது காருகாகுறிச்சி தெற்குத் தெரு என்ற கிராமம். இந்த கிராமத்திலிருந்து சோனியாகாந்தி என்ற தலித் பெண், சென்னைக்கு அருகே உள்ள கல்லூரி ஒன்றில் 'எம்.பி.ஏ.' பட்டம் படிப்பு முடித்துவிட்டு சொந்த கிராமத்துக்கு வந்திருந்தார். 'குடல்வால்' (அப்பென்டிசைட்டிஸ்) அறுவை சிகிச்சைக்குள்ளாகி, வீட்டு வாயிலில் கட்டிலில் படுத்திருந்த அந்தப் பெண்ணை சாலை வழியே மோட்டார் சைக்கிளில் சென்ற உள்ளூர் ஆதிக்க ஜாதி பஞ்சாயத்து தலைவர் பழனிவேலு என்பவர் அடித்து உதைத்துள்ளார். அக்கம்பக்கத்திலிருந்தவர்கள் 'அறுவை சிகிச்சைக்குள்ளான பெண்ணை ஏன் அடித்து உதைக்கிறீர்கள்' என்று கேட்டதற்கு, 'நான் மோட்டார் சைக்கிளில் போகும்போது இந்த கீழ்ஜாதிக்காரி எழுந்து நிற்காமல் திமிரோடு படுத்திருப்பதா?' என்று ஜாதி ஆணவத்தோடு கேட்டிருக்கிறார். அறுவை சிகிச்சை செய்துள்ள பெண் என்று கூறிய பிறகும், அதற்காக கவலைப்படாத பஞ்சாயத்து தலைவர் நிற்க முடியவில்லையென்றால் படுக்காமல், எழுந்தாவது உட்கார்ந்திருக்கக் கூடாதா? என்று திமிரோடு கேட்டுள்ளார். சோனியாகாந்தி என்ற தலித் பெண்ணின் தலைவர், ஒரு காங்கிரஸ்காரரர். பெண்ணின் உடல்நிலை இதனால் மோசமடைந்துள்ளது என்று வடக்கு காவல்நிலையத்தில் இது பற்றி புகார் தரப்பட்டது. ஆனால், காவல்துறை வழக்கு பதிவு செய்ய மறுத்துள்ளது. மனம் உடைந்த பெண்ணின் தந்தை, மாவட்ட காவல்துறை அதிகாரியிடம் புகார் கூறியும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' (ஏப்.30) முதல் பக்கத்தில் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

## தீண்டாமை தடுப்புச் சுவர்: கழகம் எதிர்ப்பு

பெரியநாயக்கன் பாளையத்தில் புதிதாக வீட்டுமனைகள் விற்கப்பட்டு வருகின்றன. இந்த மனைக்கு அருகே வாழும் தலித் மக்கள் குடியிருப்பிலிருந்து பிரிக்க நீண்ட தீண்டாமை தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இதை அகற்றக் கோரி கழக ஒன்றியத் தலைவர் பிரசன்னா, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் கூறியுள்ளதாவது:

"பெரியநாயக்கன்பாளையம், விவேகானந்தபுரத்திலுள்ள சீனிவாசன் வீதியில் 300 குடியிருப்புகளில் 1500க்கும் மேற்பட்ட தலித் மக்கள் வசித்து வரு கின்றனர். அப்பகுதிக்கு மிக அருகில் சுமார் மூன்றரை ஏக்கர் பரப்பில் காலியாக இருந்த இடத்தில் புதிதாக வீட்டுமனைகள் பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப் பட்டு வருகிறது. அந்த இடம் தலித் மக்கள் குடியிருப்பினை ஒட்டியிருப்பதால், அம்மக்கள் மீது தீண்டாமை கடைபிடிக்கும் வகையில் அக் குடியிருப்பை யொட்டி குடியிருப்புகள் இருக்கும் நீளம் வரை ஒரு நீளமான தீண்டாமைச் சுவர் கட்டப்பட்டிருக்கிறது. இது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரான செயலாகும். தலித் மக்கள் மீது தீண்டாமை கடைபிடிக்கும் வகையிலும் ஊர், சேரி என மக்களை பிரித்து சமத்துவத்திற்கு எதிராகவும் இச்சுவர் கட்டப்பட்டிருப்பதால் அச் சுவற்றை விரைந்து அகற்றி மக்களுக்கிடையே ஏற்படும் பிரிவினையை தடுத்து இச் சுவர் கட்ட காரணமானவர்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

முதல் பக்கத் தொடர்ச்சி

மே 7 ஆம் தேதி வரை பரப்புரைக் கூட்டங்கள் நடக்கின்றன. தோழர்கள் அன்பு தனசேகரன், அய்யனார், வழக்கறிஞர் துரை, அருண், உமாபதி ஆகியோர் உரையாற்றி வருகிறார்கள். நிகழ்வின் தொடக்கத்தில் தோழர் அருண் மறை இசைக்க அருள்தாசு, செந்தில் மரணதண்டனைக்கு எதிரான பாடல்களை பாடி வருகிறார்கள்.

'எவருக்கும் வேண்டாம் தூக்கு; மரணதண்டனையை நீக்கு" என்ற முழக்கத்தை முன் வைத்து நடைபெறும் இந்த பரப்புரை இயக்கத்தில் தூக்குத் தண்டனைக்கு எதிரான துண்டறிக்கைகளும் பல்லாயிரக்கணக்கில் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மரண தண்டனை வேண்டாம் என்பதற்கு தோழர்கள் தரும் விளக்கங்கள், மக்களை சிந்திக்க வைக்கின்றன. பயண நிறைவுப் பொதுக் கூட்டம் மே 7 ஆம் தேதி மாங்காட்டில் நடக்கிறது. கழகத் தலைவர் பொதுச் செயலாளர் மல்லை சத்யா (ம.தி.மு.க.), வேல்முருகன் (தமிழக வாழ்வுரிமைக் கட்சி), அப்துல் சமது (த.மு.மு.ச.), பார்வேந்தன் (விடுதலை சிறுத்தைகள்) உரையாற்றுகிறார்கள்.


# சரப்ஜித்சிங்-இந்திய உளவு நிறுவனத்தால் அனுப்பப்பட்டவர்

பாகிஸ்தான் சிறையில் தூக்குத் தண்டனையை எதிர்நோக்கி சிறைக் குள்ளே அடித்துக் கொல்லப்பட்ட சரப்ஜித் சிங் இந்திய உளவுத் துறையால் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 'உளவாளி'; அதன் காரணமாகவே இப்போது அவருக்கு அரசு மரியாதையுடன் உடல் அடக்கம் நடந்திருக்கிறது போலும்! சரப்ஜித்சிங் மட்டுமல்ல; பாகிஸ்தான் எல்லையோர இந்திய கிராமப் பகுதிகளில் வறுமையில் வாடும் ஏழை எளிய மக்கள் இந்திய உளவுத் துறையால் விலை பேசப்பட்டு உளவாளியாக பாகிஸ்தானுக்கு அனுப்பப்படுகிறார்கள். ஒரு வேளை அவர்கள் பாகிஸ்தானில் போலீசிடமோ ராணுவத்திடமோ பிடி பட்டால், உளவு பார்க்க வந்தவர் என்ற உண்மையைக் கூறக் கூடாது என்று உளவுத் துறை கட்டளையிட்டு அவர்களை அனுப்புகிறது. பிடிபட்டுவிட்டால், பிறகு அனுப்பி வைத்த உளவுத் துறை கண்டு கொள்வதே இல்லை. பஞ்சாப் - அரியானா மாநிலங்களைச் சார்ந்த 40 பேர் இப்படி பிடிபட்டு ஆண்டுக் கணக்கில் பாகிஸ்தான் சிறைகளில் 'அடையாளம்' தெரியாமல் வாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இரஞ்சன் இலக்கன் பால் என்ற சண்டிகாரைச் சார்ந்த வழக்கறிஞர் இப்படி 40 பேரின் விவரங்களைச் சேகரித்து, பஞ்சாப் அரியானா உயர்நீதிமன்றத்தில் இவர்களுக்கு உரிய இழப்பீடு தரக் கோரி மனுதாக்கல் செய்துள்ளார். அதேபோல் பாகிஸ்தான் நாட்டைச் சார்ந்தவர்களையும் பிடித்து இந்திய உளவுத்துறை உளவு பார்க்கச் சொல்கிறது. கரமத்ஹாதி என்ற பாகிஸ்தானியர், இந்தியாவின் 'ரா' உளவு நிறுவனத்துக்காக தாம் உளவு பார்த்ததோடு, பல பாகிஸ்தானியர்களை இந்த வேலைக்கு சேர்த்துள்ளதாகவும், 'இந்து' நாளேட்டின் செய்தியாளரிடம் கூறியுள்ளார். இவர் லாகூரில் பிடிபட்டு, 18 ஆண்டுகள் சிறையில் இருந்தார். உளவுத் துறை இந்த பாகிஸ்தான் குடிமகனுக்கு இந்திய குடிமகனாக குருதாஸ்பூரில் வாழ ஏற்பாடுகளை செய்து தந்தது. கைதான பிறகு அவரது குடும்பத்துக்கு உளவுத் துறை மாதந்தோறும் தந்த தொகை ரூ.300 மட்டுமே.

2005 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் சென்ற அன்றைய பஞ்சாப் முதல்வர் அம்ரிந்தர்சிங் முயற்சியால் அவர் பாகிஸ்தான் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். நாடு திரும்பிய அவர், தனது குடும்பத்துக்கு நிவாரணம் கேட்டு, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றம், நீதிமன்ற நேரத்தை வீணடித்து விட்டதாகக் கூறி அவருக்கு அபராதம் விதித்தது. உச்சநீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்தார். உச்சநீதிமன்றம், உளவு பார்த்தார் என்பதற்கு ஆதாரம் கேட்டது. தமக்கு பெரும் தொகையும் தங்கமும் தருவதாக ஆசை காட்டிய உளவுத் துறை, பிடிபட்டவுடன் கைவிட்டது என்று நீதிமன்றத்தில் கூறினார் அவர். 2 லட்சம் பணம் வாங்கிக் கொண்டு அமைதி காக்குமாறு தன்னிடம் கூறப்பட்ட போதிலும், எனது வாழ்க்கையே சிறையில் தொலைந்த பிறகு நான் ஏன் உண்மைகளை மறைக்க வேண்டும் என்கிறார் அவர். இப்படி இந்திய உளவுத் துறைக்கு பலியாகிய வேறு சிலரின் பேட்டியையும் 'இந்து' ஏடு அம்பலப்படுத்தியுள்ளது.

**பயிற்சியாளர்களுக்கு பயிற்சி**



ஏப். 27, 28 இல் கழகத்தின் பயிற்சி முகாமில் பாடம் எடுக்கும் 18 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் முறை குறித்து ஷியாம் சுந்தர், மரிய சூசை ஆகியோர் கொடைக்கானலில் பயிற்சியளித்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 9th May 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மே 16, 2013 | புரட்சி 12 | முழக்கம் 18 | விலை: ரூ.3.00

## சதிஷ் நம்பியார் நீக்கம்

பிரதமருக்கான தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என்ற பதவி "வானளாவிய" அதிகாரங்களைக் கொண்டதாகும். எம்.கே. நாராயணன் இப்பதவியில் இருந்தபோதுதான் ஈழத் தமிழர் இனப் படுகொலைக்கான சதித் திட்டங்கள் சிங்கள அரசுடன் இணைந்து திட்டமிடப்பட்டது. தேசியப் பாதுகாப்பு ஆலோசனை வாரியம் என்ற அமைப்பிலுள்ள பார்ப்பனர்கள், மலையாளிகள் தலையிடாத துறைகளே கிடையாது. ஊடகங்களில் சுதந்திரமாக கருத்துகளை வெளியிடுவார்கள்.

இந்த தேசிய பாதுகாப்பு ஆலோசனை வாரிய செயல்பாடுகள் குறித்தோ, பிரதமர் அலுவலக செயல்பாடுகள் குறித்தோ அதற்கான இணைய தளங்களில் எந்த செய்தியும் வெளியிடுவதில்லை. மிகவும் கமுக்கமாகவே வைக்கப்பட்டிருக்கும். அண்மையில் தேசிய பாதுகாப்பு ஆலோசனை வாரியத்தில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த முக்கிய அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால், இந்த செய்திகள் ரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன. ஈழத் தமிழர் இனப் படுகொலைக்கு துணை நின்ற சதிஷ் நம்பியார், அய்.நா.வில் முக்கிய பொறுப்பில் இருந்தார். இவரைப் பற்றி பல குற்றச்சாட்டுகள் வெளி வந்தன. அவர் இப்போது பதவிக் காலம் முடிவதற்கு முன்பே பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். சதீஷ் சந்திரா என்ற மற்றொரு அதிகாரிக்கு பதவி நீட்டிப்பு மறுக்கப்பட்டுள்ளது. அலோக் பிரசாத் என்ற மற்றொரு அதிகாரி வாரியத்தில் தொடர அனுமதிக்கப்படாமல், ஜப்பான் நாட்டுக்கான இந்திய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய பாதுகாப்புக் குழு, தேசிய பாதுகாப்பு ஆலோசனை வாரியம் என்ற இரண்டு அமைப்புகளும் வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது, கார்கில் போருக்குப் பிறகு உருவாக்கப்பட்டதாகும். அயல் உறவு, ராணுவம் மற்றும் அரசியல் ஆய்வாளர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட இந்த அமைப்பு, பிறகு 'அதிகாரக் குழுவாக' மாறி, 'விருப்பு வெறுப்பு'களை செயல்படுத்தும் அமைப்பாக தடம் புரண்டு போனது. ('இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏட்டில் இந்த செய்தி வெளிவந்தது)

## பேரறிவாளன் காணொளி வழியாக தகவல் தொடர்பு அதிகாரியுடன் பேசினார்

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு மரண தண்டனையை எதிர் நோக்கியுள்ள பேரறிவாளன், வேலூர் சிறையிலிருந்து 'காணொளி' வழியாக தலைமை தகவல் அதிகாரி சுஷ்மாசிங், உள்துறை கூடுதல் செயலாளர் ஜெ.எல்.சுக் ஆகியோரிடம் தனது கருணை மனு நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை கேட்டார். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர், தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் இப்படி தகவல் கேட்பது, இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஏப்.16 அன்று நடைபெற இருந்த உரையாடல், சில தொழில்நுட்பக் காரணங்களால் தள்ளி வைக்கப்பட்டு, மே 10 ஆம் தேதி நடந்தது. 30 நிமிடம் நிகழ்ந்த இந்த உரையாடலில் தனது தரப்பு நியாயங்களை பேரறிவாளன் எடுத்துரைத்ததுடன், தனது கருணை மனு நிராகரிப்பு தொடர்பாக, குடியரசுத் தலைவர் உள்துறை அமைச்சகத்துக்கான தகவல் பரிமாற்றங்களைத் தரும்படி கோரினார். சிறையில் ஒரு கைதியாக தாம் பெற்ற கல்வித் தகுதிகள், நன்னடத்தை தனிப் பண்புகள் குறித்து, கருணை மனு நிராகரிக்கும்போது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதா என்றும் கேட்டார். பேரறிவாளன் கூற விரும்பும் செய்திகளை தனி மனுவாக எழுதியனுப்புமாறு தலைமை தகவல் அதிகாரி யோசனை கூறினார்.

ராஜீவ் காந்தி இறப்பதற்குக் காரணமான 'பெல்ட் வெடிகுண்டு' இயங்குவதற்கு பேரறிவாளன் பேட்டரி வாங்கித் தந்தார் என்பது அவர் மீதான குற்றச்சாட்டு. ஆனால், ஏற்கனவே தகவல் உரிமை சட்டத்தின்படி பெறப்பட்ட தகவலில் அந்த 'பெல்ட் வெடிகுண்டு' துகள்கள், தடய அறிவியல் சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இது குறித்து பேரறிவாளன் தனது தகவல் உரிமை கோரும் விண்ணப்பத்தில் விளக்கம் கேட்டிருந்தார். ஆனால், இது குறித்து தங்களால் எதையும் கூறவியலாது என்று உள்துறை இணை செயலாளர் கூறினார். ஆனாலும், இது குறித்து விரிவாக எழுத்துப் பூர்வமாக தருமாறு தலைமை தகவல் தொடர்பு அதிகாரி கூறியது பேரறிவாளனுக்கு நம்பிக்கையை தந்துள்ளதாக அவரது வழக்கறிஞர் சுரேந்தர் கூறினார். அதிகாரிகள் பேரறிவாளன் கருத்துக்களை பொறுமையுடன் கேட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

### கிணத்துக்கடவு பகுதியில் 'இரட்டைக் குவளை' தீண்டாமைக்கு எதிராக கழகத்தின் முதல் எதிர்ப்புக் குரல்

# தடையை மீறி தோழர்கள் கைது!




கோவை மாவட்டம் கிணத்துக்கடவு பகுதியில் தொடர்ந்து வரும் 'இரட்டைக் குவளை' தீண்டாமைகளை எதிர்த்து தடை மீறி ஆர்ப்பாட்டம் நடத்திய கழகத் தோழர்கள் கைதானார்கள். கிணத்துக் கடவு பகுதியில் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக நடத்தப்படும் முதல் போராட்டம் இதுவேயாகும். இதனால், காவல்துறையினர் என்ன செய்வது என்று குழம்பிய நிலையில் ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி மறுத்தனர். அரசியல் சட்டப்படி குற்றமான தீண்டாமைக்கு எதிராக போராட முன் வந்த தோழர்களை அனுமதிக்காமல், சென்னையில் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடப்பதால், கிணத்துக்கடவு பகுதியில் 31 ஆவது பிரிவின் கீழ் ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் தடை செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை அதிகாரிகள் கூறினர்.

கிணத்துக்கடவு 'ஆட்டோ ஸ்டேண்ட்' பகுதியில் மாலை 4 மணியளவில், கழக வெளியீட்டுப் பிரிவு செயலாளர் சூலூர் தமிழ்ச்செல்வி தலைமையில் இரண்டு அணிகளாக ஆர்ப்பாட்டம் நடந்தது. இரட்டை தம்ளர் முறை உட்பட பல்வேறு தீண்டாமைக் கொடுமைகள் நிகழ்வது தெரிந்தும் அதைத் தடுக்காமல், ஆதிக்க சாதியினருக்கு ஆதரவாகச் செயல்படும் காவல்துறையைக் கண்டித்து, முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

9 பெண்கள் உட்பட 65 தோழர்கள் கைது செய்யப்பட்டு, சிங்காரம்பாளையம் எஸ்.எம்.ஆர். திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டனர்.

மண்டபத்தில் சாதி-தீண்டாமை ஒழிப்பின் அவசியம் குறித்தும், இதற்கான போராட்டத்தை முன்னெடுப்பது குறித்தும் தோழர்கள் விரிவாகப் பேசினர்.

கைதான தோழர்களை தி.மு.க. பேச்சாளர் தமிழ்ப் பித்தன், தே.மு.தி.க. தோழர் ஜெகன் ஆகியோர் சந்தித்து, தேனீர், பழங்களை வாங்கித் தந்து, தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். மண்டல செயலாளர் விஜயன், திருப்பூர் மாவட்ட தலைவர் துரைசாமி, மாவட்ட செயலாளர் அகிலன், மாவட்ட மாநகர தலைவர் வழக்கறிஞர் பன்னீர் செல்வம், கோவை மாவட்ட தலைவர் வெள்ளமடை நாகராசு, மாவட்ட காப்பாளர் மேட்டுப் பாளையம் இராமச்சந்திரன், மத்தியக் குழு உறுப்பினர் பொள்ளாச்சி விஜயராகவன், மாவட்ட செயலாளர் பால முரளி, மாவட்ட துணைத் தலைவர் நிர்மல் குமார் மற்றும் மடத்துக் குளம் உடுமலை கழகத் தோழர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர்.

கழகத் தோழர்களைத் தவிர, காரல் மார்க்ஸ் (சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி), சுப்ரமணி, வானுதன் (ஆதித் தமிழர் பேரவை), சுப்ரமணி (விடுதலை சிறுத்தைகள்), அன்னை தெரசா மகளிர் மனித உரிமை மய்யத்தைச் சார்ந்த தோழர் சிவகாமி, வெளிச்சம் மக்கள் மய்யம் கவி. மணிமாறன் ஆகி யோரும் பங்கேற்றனர்.

இதுவரை, "கேள்வி கேட்பாரின்றி" கிணத்துக்கடவு பகுதியில் தீண்டாமைக் கொடுமைகள் தலைவிரித்தாடிய நிலையில் முதன்முதலாக கழக சார்பில் எதிர்ப்புக் குரல் ஒலிக்கத் தொடங்கியவுடன் பல இளைஞர்கள் ஆர்வம் காட்டினர். சேதி அறிந்து கொல்லம்பட்டியைச் சார்ந்த 3 தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

கழகத் தோழர்கள் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. தமிழர் விடுதலை இயக்கத்தைச் சார்ந்த வழக்கறிஞர்கள் தோழர்கள் பிணைக்கு ஏற்பாடுகள் செய்தனர். 7மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர். ✦

### சட்டம ற உறுப்னுனர்க கண்ணெருரிலேயே நுரட்டைக் குவளைக

- கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் தே.மு.தி.க.வைச் சார்ந்த தினகரன் வீடு பனப்பட்டி எனும் கிராமத்தில் உள்ளது. இவரது வீட்டுக்கு எதிரே உள்ள 'இளங்கோ பேக்கரி' என்ற கடையில் தலித் மக்களுக்கு தனிக் குவளையில் தேனீர் வழங்கப்படுகிறது.
- பொள்ளாச்சி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் முத்துக் கருப்பண்ணசாமியின் வீடு மெட்டுவாவி எனும் கிராமத்தில் உள்ளது. இவரது வீட்டுக்கு அருகே உள்ள ஆறுச்சாமி தேநீர்க் கடையில் 'இரட்டைக் குவளை' பின்பற்றப்பட்டு வருகிறது.

தட்டிக் கேட்க இவர்கள் தயாராக இல்லை!

# இவர்களே உண்மைச் சாதனையாளர்கள்

'பிளஸ் டூ' தேர்வில் இந்த ஆண்டும் மாணவர்களைவிட மாணவியர்களே சாதனை படைத்துள்ளனர். 88.1 சதவீத மாணவர்களும், 91 சதவீத மாணவியர்களும் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். 'பெண்களை படிக்க வைக்காதே; அவளை அடிமையாகவே வைத்திரு' என்ற 'மனு சாஸ்திர' கட்டமைப்பு சமூகத்தில், மனு சாஸ்திரங்களை மரணக் குழிக்கு தள்ளி விட்டார்கள் மாணவிகள்.

வழக்கம்போல் முதலிடத்தை நாமக்கல் மாவட்டம் பிடித்திருக்கிறது. உண்மையில் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த மாணவ மாணவிகள் நாமக்கல் "கல்வித் தொழிற் சாலை"க்கு பல லட்சம் ரூபாய் தந்து படிக்க வந்தவர்கள். சாட்டையை கையில் எடுத்துக் கொண்டு சுழற்றும் இந்தத் தொழிற் சாலைகள், தங்களது தொழிற்சாலையில் மாணவர்களை புடம் போட்டு வார்த்தெடுத்து மதிப்பெண் பெறும் மனிதர்களாக தயாரிக்கிறது. அதிலும்கூட, 'பிளஸ்-1' வகுப்புக்கான பாடத் திட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றன.


உண்மையில் நடந்து முடிந்த பிளஸ்-2 தேர்வில், சாதனை படைத்தவர்களாகக் கூற வேண்டும் என்றால், அரசு பள்ளிகளிலும் மாநகராட்சி பள்ளிகளிலும் படித்து அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் தான்.


குறிப்பாக, சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் படித்த மாணவிகளைக் குறிப்பிட விரும்புகிறோம். புல்லா அவன்யூ மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் படித்த வீரச் செல்வி என்ற மாற்றுத் திறனாளியின் மகள் 1,145 மதிப்பெண் பெற்றுள்ளார்.

சைதாப்பேட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி பிரியா, 1,138 மதிப்பெண்களைப் பெற்றுள்ளார். இவரது தந்தை சிட்டிபாபு, வீடு வீடாகச் சென்று ஊதுபத்தி விற்பனை செய்கிறவர். இதே மதிப்பெண்ணைப் பெற்றிருப்பவர் நித்யா. வேளச்சேரி மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி மாணவி. இவரது தந்தை பாபு, மாவு மில்லில் கூலி வேலை செய்பவர்.


வீரசெல்வி


பிரியா


நித்யா


ஆயிஷா சித்திகா

திருவொற்றியூர் புத்தர் தெரு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் படித்த ஆயிஷா சித்திகா, 1,138 மதிப்பெண் பெற்று, சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார். இவரது தந்தை தையல் தொழிலாளி.

புவியியலில் மாநில அளவில் முதலிடம் பெற்ற செல்வ ஜோதியின் தந்தை, நடை பாதையில் கடை போட்டிருப்பவர்.

இதேபோல் சென்னைக்கு அருகே பீர்க்கன்காரணை அரசு மேல்நிலைப் பள்ளியில் படித்த சகோதரிகள் ரஞ்சிதா, ஜெயந்தி இருவரும் முறையே 1,105, 1083 மதிப்பெண்களைப் பெற்று, பள்ளியில் முதல் இரண்டு இடங்களைப் பிடித்துள்ளனர். இவர்களின் தந்தை ஜெயக்குமார், ஒரு ஆட்டோ ஓட்டுனர். அய்.ஏ.எஸ். தேர்வில் வெற்றிப் பெற வேண்டும் என்பதே தனது ஆசை என்கிறார் ஜெயந்தி. பொறியியல் பட்டதாரியாவது தனது விருப்பம் என்கிறார், ரஞ்சிதா.

மதுரை மாவட்டம், மேலூர் அருகே நொன்டி கோவில்பட்டியைச் சார்ந்த ஜெயபிரபா, தனது தாய் மாமனுக்கு சிறுமியாக இருக்கும்போதே 14 வயதில் பால்ய விவாகத்தில் தள்ளப்பட்டார். குடிகார கணவரிடமிருந்து தப்பி, திருமண ரத்துப் பெற்று, அரசுப் பள்ளியில் படித்து பிளஸ் டூ தேர்வில் 1,136 மதிப்பெண்கள் குவித்து பள்ளியில் முதலிடம் பெற்றுள்ளார்.

சமூகத்தின் உழைக்கும் பிரிவிலிருந்து மாநகராட்சி, அரசுப் பள்ளிகளில் வசதி வாய்ப்பற்ற சூழ்நிலைகளைப் புறம் கண்டு சாதனைப் படைத்துள்ள இவர்கள் அனைவருமே பெண்கள் என்பது பெருமைக்குரியது. இவை, நாமக்கல் கல்வி தொழிற்சாலைகளில் புடம் போட்டவர்களைவிட, இவர்கள்தான் உண்மையான சாதனையாளர்கள்!

## கருநாடக புதிய முதல்வர் ஒரு பகுத்தறிவாளர்; சமூக நீதியாளர்



கருநாடகாவில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்துள்ளது. அந்தக் கட்சியின் மீது நமக்கு கடும் விமர்சனம் உண்டு என்றாலும், முதல்வர் பதவியேற்றுள்ள சித்தாராமய்யா, ஆடு மேய்ப்பதை குலத் தொழிலாகக் கொண்ட 'குருபா' என்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலிருந்து வந்தவர். கருநாடகத்தில் ஒக்கலிகா லிங்காலத்து அல்லது பார்ப்பன சமூகத்தினரிடையே ஆட்சி அதிகாரம் இருந்த நிலை மாறியிருக்கிறது. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் உரிமைக்கு குரல் கொடுத்துப் போராடி வருபவர் சித்தாராமய்யா. பிற்படுத்தப்பட்டோர், மைனாரிட்டிகள், தலித் ஆகியோரை இணைத்து இயக்கம் நடத்தியவர். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் ஒரு பகுத்தறிவாளர். கோயில் பக்கம் திரும்பிப் பார்க்காதவர்.

சித்தாரமய்யாவின் பிறந்த தேதியைக் கேட்டு அவரது எதிர்கால ஜோதிடத்தைப் பார்க்க விரும்புகிறவர்களிடம், தனது சரியான பிறந்த தேதியை தனது தந்தை குறித்து வைத்து வைக்கவில்லை என்று பதில் கூறுவார். இவரது சமூகம், கருநாடக மக்கள் தொகையில் 6 சதவீதம் தான். சித்தாராமய்யாவே சிறு வயதில் ஆடு மேய்த்தவர் தான். மைசூரிலிருந்து 23 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மேன்ஹூன்டி எனும் கிராமம் இவரது சொந்த ஊர். இந்த கிராமத்தில் பிறந்தவர்கள் தங்கள் பிள்ளைகளில் ஒருவரை சித்தரமேசுவரா என்ற சிவன் கோயிலுக்கு ஒப்படைத்து விடுவது வழக்கம். அப்படி ஒப்படைக்கப் பட்டவர்தான் சித்தராமய்யா.

இரண்டு ஆண்டுகள் கோயில் பணி செய்து, கிராமக் கலைகளைக் கற்றுத் தேர்ந்தார். முறையாக பள்ளிக் கல்வி பயிலவில்லை. இரண்டு ஆண்டு கோயில் சேவைக்குப் பிறகு தானாகவே எழுதப் படிக்கக் கற்று, வயது கடந்த நிலையில் உயர்நிலைப் பள்ளியில் அடியெடுத்து வைத்த அவர், அரசுப் பள்ளித் தேர்வில் முதல் மாணவனாகத் தேர்ச்சிப் பெற்று, பிறகு சட்டம் படித்தவர். 'சோஷலிஸ்ட்' தலைவர் லோகியா சிந்தனைகளை ஏற்றுக் கொண்டவர். ஜனதா தளம் தான் அவரது அரசியல் கட்சி. காங்கிரசில் சேர்ந்து 7 ஆண்டுகள் தான் ஆகிறது. துணை முதல்வராக எதிர்க் கட்சித் தலைவராக இருந்து முதல்வராகியுள்ளார்.

பதவியேற்றவுடன் வழக்கமாக மதத் தலைவர்களை சந்தித்து ஆசி வழங்கும் வழக்கத்தை தூக்கி எறிந்து, கருநாடக மூத்த எழுத்தாளர்களை சந்தித்து, அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுள்ளார் சித்தாராமய்யா.

உட்கட்சி மோதல்கள் நிறைந்த காங்கிரஸ் கப்பலில் பயணிக்கப் புறப்பட்டிருக்கும் இந்த சமூக நீதியாளர், பத்திரமாக கரை சேருவாரா என்பது போகப் போகத்தான் தெரியும்.

## பதவி பறி போகாமல் இருப்பதற்கு பன்சால் நடத்திய 'வெள்ளாடு' பூஜை

மத்திய தொடர்வண்டித் துறை அமைச்சர் பவன்குமார் பன்சால் தொடர்வண்டி வாரியத்தில் முக்கிய பதவி பெறுவதற்காக தனது மைத்துனர் விஜய்சிங்லா என்பவர் வழியாக ரூ.10 கோடி பேரம் பேசி, முன் பணமாக ரூ.90 லட்சம் வாங்கியதாக எழுந்த குற்றச்சாட்டில் அமைச்சர் பதவி விலகியுள்ளார். இதேபோல் மத்திய சட்ட அமைச்சராக இருந்தவர் அஷ்வினி குமார். மன்மோகன் நிலக்கரித் துறை அமைச்சராக இருந்த காலத்தில் நிலக்கரி சுரங்கம் எடுப்பதற்கு 'டெண்டர்' கோராமல், நேரடியாக அனுமதித்ததற்கு அரசுக்கு 1 கோடியே 80 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இது தொடர்பாக உச்சநீதிமன்றம் விசாரணைக்கு உத்தரவிட்டது. மத்திய புலனாய்வுத் துறை, உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்ய வேண்டியிருந்தது. உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வதற்கு முன்பு, சட்ட அமைச்சர் அஷ்வினிகுமார், சி.பி.அய். தாக்கல் செய்விருந்த மனுவை பார்வையிட்டு திருத்தம் செய்தார். இதை சி.பி.அய். அதிகாரிகளே உச்சநீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டனர்.




கருநாடகத்தில் பா.ஜ.க. ஊழலை முன் வைத்து பரப்புரை செய்த காங்கிரஸ், தேர்தலில் வெற்றிப் பெற்று ஆட்சி அமைக்கும் நிலை வந்தவுடன், காங்கிரஸ் தன் மீதான ஊழல் பிம்பம் தொடருவது நாடாளுமன்ற தேர்தலில் பாதிக்கும் என்ற கருத்தில் இரண்டு அமைச்சர்களையும் பதவி விலக சோனியா உத்தரவிட்டார்.

இதில் சட்ட அமைச்சர் பன்சால், தனது பதவி பறிபோகாமல் இருப்பதற்காக தனது அதிகாரப்பூர்வ இல்லத்தில் மனைவியுடன் பார்ப்பனர்கள் புரோகித மந்திரங்கள் ஓத, வெள்ளாடு ஒன்றுக்கு பால் ஊட்டியுள்ளார். தனக்கு நேர்ந்த "கெட்ட சகுனங்களை" போக்கிட, கடவுளை திருப்திப்படுத்தவே இந்த யாகமாம். அமாவாசை நாளில் அந்த ஆட்டை பலி கொடுப்பதற்கு ஏற்பாடுகள் நடந்தன. சில தொலைக்காட்சிகள் இந்த நிகழ்ச்சியை ஒளிபரப்பி, அது குறித்து சோதிடர்களை அழைத்து விவாதங்களை நடத்தின.

அமாவாசை காலத்தில் வெள்ளாட்டுக்கு, பால் ஊட்டி பரிகாரம் செய்தால் நல்லதே நடக்கும்; கடவுள் மகிழ்ச்சி அடைவார் என்று சில சோதிடர்கள் தொலைக்காட்சியில் வாதம் செய்து கொண்டிருந்தனர். அந்த 'பரிகார பூஜை' நடந்து, ஒரு நாள் கழித்து, பன்சால் பதவி பறி போய்விட்டது. ஆட்டுக்கு பூஜை போட்டால், அதிகாரத்தில் தொடரலாம் என்று நம்பக்கூடிய மனிதர்கள் தான் இந்த நாட்டின் அமைச்சர்களாக வருகிறார்கள்!

இந்த 'பூசைக்கு நல்ல பலன் கிடைக்கும்' என்று தொலைக்காட்சியில் வாதிட்ட சோதிடர்கள், இப்போது முகத்தை எங்கே வைத்துக் கொள்வார்கள்? இவர்கள் மீது நுகர்வோர் நீதிமன்றத்தில் இழப்பீடு கேட்டு வழக்கு தொடரும் சட்டம் இந்த நாட்டில் வராதா என்பதே பகுத்தறிவாளர்களின் கேள்வி!

# சரணடைந்த போராளிகளை தாக்குதலுக்கு பயன்படுத்தும் இந்திய ராணுவம்: அதிர்ச்சித் தகவல்கள்

அப்சல் குருவை இந்திய தேசிய பார்ப்பனிய ஆட்சி தூக்கில் போட்டு, காஷ்மீரில் கடும் கொந்தளிப்பை உருவாக்கியுள்ளது. காஷ்மீரி மக்களின் உணர்வுகளை ராணுவத்தால் அடக்கிடும் முயற்சிகள் தோல்வியையே தழுவி வருகின்றன. இது குறித்து விரிவான கட்டுரை ஒன்றை ஏ.ஜி.நூராணி 'பிரன்ட்லைன்' பத்திரிகையில் தொடராக எழுதி வருகிறார். அதில் முதல் பகுதியில் இடம் பெற்றுள்ள சில முக்கிய கருத்துகள்:

காஷ்மீர் - உளவு நிறுவனங்களின் விளையாட்டு மைதானமாகிவிட்டது. இந்தப் போக்கு நேரு பிரதமராக இருந்த காலத்திலேயே தொடங்கி விட்டது. அப்போதே காஷ்மீர் மக்களின் தலைவராகத் திகழ்ந்த ஷேக் அப்துல்லா, நேருவிடம் எச்சரித்தார். ஆனால் உளவுத் துறையை காஷ்மீரில் விளையாட அனுமதித்தவரே நேரு தான் என்ற உண்மை அவருக்கு தெரியவில்லை. நீதிமன்றங் களும் காஷ்மீர் மக்களின் உணர்வுகளுக்கு எதிராகவே செயல்படுகின்றன. அப்சல் குரு வழக்கை விசாரித்த தடா நீதிமன்றம், டெல்லி உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் எல்லாமுமே, நீதித் துறையின் சார்பற்ற நடுநிலைப் போக்கைக் கைவிட்டு, 'தேச பக்தி', 'தேசத்தின் கூட்டு மன சாட்சி' என்ற பார்வையிலே தீர்ப்புகளை வழங்கின.

இந்த நிலையில் மத்திய கிராம மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் மிகவும் துணிவுடன் உண்மையை ஒரு பேட்டியில் (ஏப்.7, 2013) கூறியுள்ளார். "காஷ்மீரில் கொள்கைகளை வகுக்கவும், அதை கட்டளையிடவும் உளவுத் துறை நிறுவனங்களை அனுமதிக்கவே கூடாது" என்று கூறிய அவர், "காஷ்மீருக்கு தேவை வளர்ச்சியும் அது சார்ந்த அரசியலும் தானே தவிர, ரகசிய உளவு நிறுவனங்கள் அல்ல. காஷ்மீர் வீதிகளில் மக்கள் ராணுவத்தினரைத்தான் பார்த்துக் கொண்டிருக் கிறார்கள்" என்று கூறியுள்ளார்.

காஷ்மீரில் ராணுவம், எல்லைப் பாதுகாப்புப் படை, மத்திய ரிசர்வ் போலீஸ் படை, குற்றத் தடுப்புப் பிரிவு, மாநில சிறப்பு அதிரடிப் பிரிவு ஆகியவைகளே குவிக்கப்பட்டுள்ளன. இதில், மாநில சிறப்பு அதிரடிப் பிரிவில் சரணடைந்த போராளிகளையும் கட்டாயமாக சேர்த்து வைத்துள்ளனர். இந்தப் படைப் பிரிவுகள் காஷ்மீர் மக்களிடையே கடும் எதிர்ப்புகளை உருவாக்கி வருகின்றன. பல அப்பாவி காஷ்மீரிகள் கொல்லப் படுகிறார்கள். பாதிக்கப்பட்ட மக்கள், தங்கள் குரலை ஒலிப்பதற்குக்கூட அனுமதிப்பதில்லை. இராகுல் காந்தி காஷ்மீர் பல்கலையில் பேசப் போகும்போது அங்கே பேச்சைக் கேட்க பாதிக்கப்பட்ட மக்கள் எவரும் வந்துவிடக் கூடாது, அவர்கள் தங்கள் உள்ளக் குமுறலை வெளிப்படுத்தி விடக் கூடாது என்பதில் பல்கலைக்கழக அதிகாரிகளே எச்சரிக்கையுடன் செயல்பட்டனர். ராகுல் பேச்சைக் கேட்கவரும் பார்வையாளர்கள் ஒவ்வொருவரையும் அவர்களே தேர்வு செய்தனர்.

அப்சல் குருவைப்போல பல சரணடைந்த போராளிகள் ராணுவத்தின் பிடிக்குள் சிக்கி, சொல்ல முடியாத துயரங்களை சந்தித்து வரு கிறார்கள். அப்சல் குரு விடுதலையாகியிருப்பா ரானால், ராணுவம் தனக்கிழைத்த கொடுமைகளை எல்லாம் அவர் வெளிப்படுத்தியிருப்பார். நாடாளு மன்ற தாக்குதலின் உண்மைப் பின்னணியை அம்பலப்படுத்தியிருப்பார். எனவேதான் அவரை எப்படியாவது தீர்த்துக் கட்டிவிட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள்.

1993 ஆம் ஆண்டிலேயே ராணுவத்திடம் சரணடைந்த போராளிகளைக் கொண்டு ரகசிய ராணுவப் பிரிவு ஒன்றை உருவாக்கிவிட்டனர். தென் அமெரிக்க நாட்டின் சர்வாதிகாரிகள், இப்படிப் பட்ட ரகசிய ராணுவத்தை உருவாக்கி, அவர்களைத் தாக்குதலுக்குப் பயன்படுத்துவது வழக்கம். (நாடாளுமன்றத் தாக்குதலில் ஈடுபட்ட ஒருவருக்கு டெல்லியில் வீடு பார்த்து தருமாறு சரணடைந்த போராளியான அப்சல் குருவுக்கு கட்டளை யிட்டதே ராணுவ உயர் அதிகாரி என்பதும் - பிறகு, அப்சல்குருவே நாடாளுமன்றத் தாக்குதலுக்கு உதவியதாகக் கூறி குற்றம் சாட்டி, தூக்கிலிடப் பட்டுள்ளதும் நினைவுகூரத் தக்கது. -ஆர்.)

இப்படி சரணடைந்த போராளிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட ரகசிய ராணுவம் பற்றி மனித உரிமை கண்காணிப்பு (Human Rights Watch) அமைப்பு முழுமையாக ஏற்கனவே அம்பலப்படுத்தி யுள்ளது.

ராணுவம் நடத்தும் ரகசிய திரைமறைவு தாக்குதல்கள் படுகொலைகளுக்கு சான்றாக ஒரு நிகழ்வை சுட்டிக் காட்ட முடியும். 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் இந்தியா வந்தார். அப்போது கிளிண்டனுக்கு எதிராக இந்தியாவில் சீக்கிய தீவிரவாதிகள் சதித் திட்டத்தை இந்திய உளவு நிறுவனம் திட்டமிட்டே முறியடித்துவிட்டது என்று கிளிண்டனை மகிழ்விப்பதற்கு டெல்லியில் அதிகார வட்டாரங்கள் ஒரு நாடகத்தை அரங்கேற்ற விரும்பின.

கிளிண்டன் இந்திய வருகையையொட்டி, சதி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் சட்டிசிங்புரா எனுமிடத்தில் 36 சீக்கியர்கள் கொல்லப்பட் டார்கள். அனைவரும் காலிஸ்தான் தீவிரவாதிகள் என்று கூறப்பட்டது. இதில் பார்த்திபால் என்ற இடத்தில் ராணுவத்துடன் மோத வந்தவர்கள் என்று கூறி, அய்ந்து "பயங்கர"வாதிகளை ரிசர்வ் போலீஸ் படை 'என் கவுண்டரில்' சுட்டுக் கொன்றதாக அறிவிக்கப்பட்டது.

இது குறித்து சி.பி.அய். விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. சி.பி.அய். - இது ராணுவ அதிகாரிகளே அப்பாவிகள் மீது நடத்திய கொலை, போலி என் கவுண்டர் என்று கூறி, இதற்காக சதித் திட்டம் தீட்டியதாக 5 ராணுவ அதிகாரிகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

கர்னல் அஜய்சக்சேனா, மேஜர் பிரஜேந்திரா, பிரதாப் சிங், மேஜர் சவுரால் சர்மா, சுபேதார் சித்ரீஸ் கான் ஆகிய அதிகாரிகளும் 7 ரிசர்வ் படை போலீசாரும் குற்றம்சாட்டப்பட்டனர்.

கொல்லப் பட்டவர்கள் அப்பாவிகள் என்று சி.பி.அய். குற்றப்பத்திரிகை கூறியது - இந்த அதிர்ச்சியூட்டும் தகவல்கள் ஏ.ஜி. நூராணி கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.

## தேர்தல் வெற்றிக்கு பசு மாட்டை நம்பிய தலைவர்கள்

"கருநாடக மாநிலம் ஹிமோகா தொகுதியில் நல்ல நேரம் பார்த்து, தனது வாக்கைப் பதிவு செய்த முன்னாள் முதல்வர் எடியூரப்பா, வாக்குச் சாவடியில் மெஷினை வாஸ்து பிரகாரம் வடக்கை நோக்கி நகர்த்தி வைத்தே வாக்களித்தார். முன்னாள் பிரதமர் தேவகவுடா, ஹாசன் வாக்குச் சாவடிக்கு குடும்பத்தினருடன் வந்து 20 நிமிடங்கள் காரிலேயே அமர்ந்து, பகவத் கீதை பாராயணம் செய்துவிட்டே வாக்களித்தார். அவரது மகனும், முன்னாள் முதல்வருமான குமாரசாமி, ராம் நகரில் வாக்களிப்பதற்கு முன்பாக வாக்குச்சாவடி அருகே மூன்று பசு மாடுகளைக் கொண்டுவந்து, "கோ" பூஜையை முடித்துவிட்டு வாக்களித்தார். இவர்களைப் போல, பி.ஜே.பி.யைச் சார்ந்த சில அமைச்சர்களும் துணை முதல்வர் ஈசுவரப்பாவும் மடாதிபதியின் ஆலோசனைப்படி வாக்களித்தனர்." (ஜூனியர் விகடன் - 12.5.2013))

கருநாடக தேர்தலில் நடந்த 'மடமைக் கூத்துகள்' இவை. இப்படி வாஸ்து, 'கோ' பூஜை, 'கீதை பாராயணம்' எல்லாம் பார்த்த கட்சிகள் தேர்தலில் தோல்வியைத்தான் சந்தித்துள்ளன. பசு மாடும் பகவான் கிருஷ்ணனும் தேர்தலில் வெற்றித் தோல்வியை நிர்ணயிப்பவர்களா? இதில் பசு மாட்டு பூஜை நடத்திய தலைவர் இருக்கும் கட்சிக்குப் பெயர் மதச் சார்பற்ற ஜனதாதளம்! கட்சிப் பெயரில்தான் மதச்சார்பான்மை. இவ்வளவுக்கும் பிறகு, தேர்தல் தோல்வியிலிருந்து மீள்வதற்கு 'பரிகார பூஜை' நடத்தக் கிளம்பினாலும் வியப்பில்லை. இப்படித்தான் இருக்கிறது இந்த நாட்டின் தலைவர்கள் யோக்கியதை!

## தூக்குத் தண்டனை: நீதிமன்றங்களின் முரண்பாடு

சர்வதேச பொது மன்னிப்பு சபை, மக்கள் சிவில் உரிமைக் கழகம் ஆகிய மனித உரிமை அமைப்புகள் தூக்குத் தண்டனையை ஒழிக்க வேண்டும் என்று மீண்டும் குரல் கொடுத் துள்ளன. கடந்த மே 10 ஆம் தேதி புதுடில்லியில் பேட்டி அளித்தபோது, நாட்டில் கிரிமினல் குற்றங்களைத் தடுப்பதில் இந்த நாட்டின் நீதியமைப்பு தோல்வி அடைந்து விட்டதால்தான் விரக்தியடைந்தவர்கள் தூக்குத் தண்டனை தந்தால் குற்றங்கள் குறைந்து விடும் என்ற முடிவுக்கு வந்து விடுகிறார்கள் என்றார், சர்வதேச பொது மன்னிப்பு சபையின் பிரதிநிதி சைலேஷ் ராஜ்; 1950-விருந்து 2006 வரை உச்நீதிமன்றம் அளித்த தூக்குத் தண்டனைகள் பற்றிய ஆய்வு ஒன்றை இந்த மனித உரிமை அமைப்புகள் நடத்தியுள்ளன. அதில், தூக்குத் தண்டனைக்கு ஒரே அளவுகோல் சீராகப் பயன்படுத்தப்படவில்லை. விருப்பு வெறுப்புகள், சார்பு போக்குகள் பின்பற்றப்பட்டுள்ளதை கண்டறிந்துள்ளனர்.

1996 இல் மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்ட பெருசிங், மனைவியையும் 5 குழந்தைகளையும் கொன்றதற்காக உச்சநீதி மன்றம் தூக்குத் தண்டனை விதித்தது. அடுத்த இரண்டு ஆண்டில் இதே போல் மனைவியையும் 5 குழந்தைகளையும் கொலை செய்த ஷேக் அயூப் என்பவருக்கு உச்சநீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது.

2000 ஆம் ஆண்டில் ஒன்றரை வயது குழந்தையை பாலுறவு வன்முறை செய்த சுரேசவை உயர்நீதிமன்றம் விடுதலை செய்தது. ஆனால் உச்சநீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது. அடுத்த 5 ஆண்டுகளில் இதேபோல் 6 வயது குழந்தையை பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்கிய சதீச என்பரை உயர்நீதிமன்றம் விடுதலை செய்தது. உச்ச நீதிமன்றமோ தூக்குத் தண்டனை விதித்தது என்று நீதிமன்றத் தீர்ப்புகளின் முரண்பாடுகளை பட்டியலிட் டுள்ளனர்.

## புல்லர் தூக்குக்கு ஜெர்மன் அதிபர் மீண்டும் எதிர்ப்பு

ஜெர்மன் சிறையிலிருந்து இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்ட தேவேந்தர்பால் சிங் புல்லருக்கு உச்சநீதிமன்றம் ஜெர்மன் நாட்டின் எதிர்ப்பையும் மீறி தூக்குத் தண்டனையை உறுதி செய்தது.

இப்போது மீண்டும் ஜெர்மன் அதிபர் ஜோச்சின் கவுச், வெளியுறவுத் துறை அமைச்சர் கிடோ வெஸ்டர்வெல், இருவரும் தூக்குத் தண்டனையை நிறுத்துமாறு வலியுறுத்தியுள்ளனர்.

ஜெர்மன் அதிபர் கடந்த மாதம் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து இதை வலியுறுத்தினார். ஜெர்மன் முன்னாள் அதிபர் கிறிஸ்தியன் உல்ஃப்பும், முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதிபா பட்டீலுக்கு 2011 இல் கருணை மனுவை ஏற்கக் கோரி கடிதம் எழுதினர்.

தூக்குத் தண்டனை கூடாது என்ற ஜெர்மன் நாட்டின் உறுதியான கொள்கையின் அடிப்படை யில் விடுக்கப்படும் வேண்டுகோளே தவிர, இந்தியா வில் தலையிடுவது அல்ல என்று, இந்தியாவுக்கான ஜெர்மன் நாட்டு தூதர் மைக்கேல் ஸ்பெயினர் தெளிவுப்படுத்தியுள்ளார்.

DATE OF PUBLICATION 15.05.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

## பரப்புரைப் பயணக் குழுவினருக்கு பாராட்டு

# மாங்காட்டில் மரணதண்டனை எதிர்ப்பு விளக்கக் கூட்டம்







சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் நடத்திய மரணதண்டனைக்கு எதிரான 7 நாள் பரப்புரைப் பயணம், மாங்காட்டில் நிறைவு பெற்றது. மாங்காட்டில் மரணதண்டனை எதிர்ப்பு விளக்கக் கூட்டம் எழுச்சியுடன் நடந்தது.

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மே 1 முதல் 7 வரை 'யாருக்கும் வேண்டாம்' 'தூக்கு; மரண தண்டனையை நீக்கு' என்ற கோரிக்கையுடன் சென்னையில் பல பகுதிகளில் பரப்புரை நடைபெற்றது. இந்தப் பயணத்தை 30.4.2013 அன்று சென்னை தியாகராயர் நகரில் நடந்த மரண தண்டனைக்கு எதிரான பொதுக் கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ துவக்கி வைத்தார்.

ஏற்கனவே 4 ஆம் தேதி வரை நடந்த பரப்புரை நிகழ்வுகள் கடந்த இதழில் வெளி வந்துள்ளன.

5.5.2013 அன்று வியாபாரிகள் கடையடைப்பு என்பதால் பரப்புரை நடைபெறவில்லை.

6.5.2013 அன்று மாலை 4 மணியளவில் சைதை ஐந்து விளக்கு பகுதியிலும், மாலை 6 மணிக்கு தியாகராயர் நகர், பாண்டிபஜாரிலும், இரவு 8 மணியளவில் தியாகராயர் நகர் தாமஸ் சாலையிலும் பரப்புரை நடைபெற்றது. ம.தி.மு.க.வைச் சார்ந்த மாநில மகளிரணி துணை அமைப்பாளர் மல்லிகா தயாளன் தோழர்களுக்கு உணவு ஏற்பாடு செய்தார்.

7.5.2013 அன்று மாலை 4 மணியளவில் குமரன்சாவடி பேருந்து நிறுத்தம் அருகில் பரப்புரையை முடித்துக் கொண்டு, மாலை மாங்காட்டில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் குழுவினர் பங்கேற்றனர்.

பயணத்தில், தோழர்கள் அருள்தாஸ், செந்தில் ஆகியோர் மரண தண்டனைக்கு எதிரான பாடல்களை பாடினர். அருண் பறை வாசித்தார். சுகுமார் ஒலி பெருக்கி ஏற்பாடு செய்தார். பிரகாசு வாகன உதவி செய்தார். கோவிந்தன் வாகனத்தை ஓட்டி வந்தார். கடை வசூல் மற்றும் துண்டறிக்கை பரப்புரைப் பணிகளை தோழர்கள் இலட்சுமணன், யேசுகுமார், தட்சணாமூர்த்தி, முழக்கம் உமாபதி, நந்தகுமார், வீரா, அசோக், மனோகர், வேழவேந்தன், வேலு, தாமரை, சைதை மனோகர் ஆகியோர் செய்தனர்.

சென்னை மண்டல அமைப்பாளர் கு.அன்பு தனசேகர், வழக்கறிஞர் துரை அருண், இரா. உமாபதி, டேவிட் பெரியார், ந. அய்யனார் ஆகியோர் மரண தண்டனைக்கு எதிரான கருத்துரைகளை வழங்கினர். சென்னை தியாகராயர் நகரில் பரப்புரை நடைபெற்றபோது நடிகர் டி.ராஜேந்தர், தோழர்களிடம் துண்டறிக்கை வாங்கிக் கொண்டு தனது ஆதரவை தெரிவித்தார்.

பயண நிறைவு பொதுக் கூட்டம், மாங்காடு எஸ்.எஸ். கோயில் வீதியில், காஞ்சி மாவட்ட கழகப் பொருளாளர் கா.வே. சேகர் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கீர்த்தி, டேவிட் குழுவினரின் இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடந்த பொதுக் கூட்டத்தில் ம.தி.மு.க. பூவை து. கந்தன் (ம.தி.மு.க.), மல்லை சத்யா (ம.தி.மு.க.), அற்புதம் அம்மாள், வேல் முருகன் (தமிழக வாழ்வுரிமைக் கட்சி), விடுதலை இராசேந்திரன் (தி.வி.க.), அப்துல் சமது (த.மு.மு.க.) ஆகியோர் உரையாற்றினர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி பயணத்தில் பங்கேற்ற தோழர்களுக்கு பேரறிவாளன் எழுதிய நூல் மற்றும் அற்புதம் அம்மாள் உரையடங்கிய குறுந்தகடுகளை வழங்கி நிறைவுரையாற்றினார். ரவி பாரதி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். செங்குட்டுவன் நன்றி கூறினார்.

## சனி — சனியன்

வான மண்டபத்திலுள்ள 'சனி' என்ற கோள் மனிதர்களுக்கு தீங்கானது என்று 'சோதிடர்கள்' நம்ப வைத்து விட்டார்கள். ஆனால், 'சனி' கோளை கடவுளாக்கி, அதற்கு 'திருநள்ளாறு' என்ற ஊரில் ஒரு கோயிலையும் கட்டியிருக்கிறார்கள். தேவ கவுடாவிலிருந்து ஜெயலலிதா, குடியரசுத் தலைவர்கள் வரை வந்து போகும் நட்சத்திர அந்தஸ்து இந்தக் கோயிலுக்கு உண்டு. வீட்டில் குழந்தைகளை திட்டும்போதுகூட 'எங்கிருந்தோ வந்து என் வயிற்றில் பிறந்திருக்கு, சனியன்' என்று திட்டுவது வழக்கமாகிவிட்டது. இந்த 'சனி' என்ற கோள் பூமியிலிருந்து 142.7 கோடி கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. சூரிய குடும்பத்தில் ஒன்றாக இருக்கும் இந்த 'சனி' என்ற கோள், ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதி பூமிக்கு அருகே வந்தது. 28 ஆம் தேதியிலிருந்து 12 நாட்கள் பூமிக்கு அருகில் 132.2 கோடிகிலோ மீட்டர் தூரத்தில் உள்ள 'சனி 'யை தொலைநோக்கி வழியாகப் பார்ப்பதற்கு சென்னை கிண்டியிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மய்யம் ஏற்பாடு செய்திருந்தது. இதே போன்ற நிகழ்வு, அடுத்து 2014 மே 10 ஆம் தேதி நிகழும் என்று வானவியல் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இதிலே முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒரு சேதி, பூமிக்கு வெகு தூரத்திலுள்ள சனி, மனிதர்கள் வாழ்க்கையில் புகுந்து விளையாடி வருவதாக மக்கள் நம்பிக் கொண்டு, 'சனி தோஷம்' தீர்த்துக் கொண்டிருக்கும்போது, அது பூமிக்கு மேலும் நெருங்கி வரும்போது பாதிப்பு, இன்னும் கூடுதலாகத் தானே இருக்கும்? ஆனால், பெரியார் அறிவியல் தொழில் நுட்பத்தின் சார்பில் விஞ்ஞானி அய்யம் பெருமாள் விடுத்துள்ள அறிக்கை என்ன கூறுகிறது தெரியுமா?

"சனிக்கோள் பூமிக்கு அருகில் வருவதால் எவ்வித பாதிப்பும் இருக்காது". என்கிறது அந்த அறிக்கை.

### ஒரு கேள்வி: ஒரு பதில்

**கேள்வி :** பா.ம.க. நிறுவனர் இராமதாஸ் மீது 2004 ஆம் ஆண்டு கிடப்பில் போட்ட வழக்குகளை தோண்டி போடுகிறார்களே, இது நியாயமா?

**பதில் :** 2000 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட ஜாதியை இராமதாஸ் தோண்டி எடுத்துப் பேசுகிறாரே, அது மட்டும் நியாயமா?

## உ.பி.யில் பார்ப்பனர்களுக்கு அடிக்கிறது "யோகம்"

உ.பி.யில் ஆளும் சமாஜ் வாடி கட்சியும், மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியும் பார்ப்பனர் ஆதரவுக்கு போட்டிப் போட்டு மாநாடுகளை நடத்தி வருகின்றன.


சமாஜ்வாதி கட்சி லக்னோவில் 'பரசுராம் ஜெயந்தி சம்மேளனம்' என்ற பெயரிலும், மாயவாதி கட்சி 'பிராமின் சமாஜ்' என்ற பெயரில், உ.பி. நேபாள எல்லையில் உள்ள மகாராஜ் கஞ்ச் என்ற பகுதியிலும் பார்ப்பனர்கள் மாநாட்டை நடத்தியுள்ளனர். முதல்வர் அகிலேஷ் பேசுகையில், "பிராமணர்கள்" கோரிக்கை அனைத்தையும் நிறைவேற்றுவோம் என்று உறுதி தந்ததோடு, பதவி உயர்வில் இடஒதுக்கீடு கொண்டு வரும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் தங்கள் கட்சிதான் முறியடித்தது என்றார். சமூகத்துக்கு நல்வழி காட்டி, அரசியல் கட்சிகளை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்வோர் "பிராமணர்களே" என்று முதல்வர் தமது கட்சி அலுவலகத்தில் 'பரசுராமன் ஜெயந்தி'யைக் கொண்டாடி பாராட்டினார்.

மாயாவதி கட்சி மாநாட்டில், பிராமணர்களுக்கு தங்கள் கட்சிதான் உண்மையான பாதுகாவலன் என்றும் பேசப்பட்டது.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted on: 16th May 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மே 23, 2013 | புரட்சி 12 | முழக்கம் 19 | விலை: ரூ.3.00

# சூதாட்டமாகும் பார்ப்பன கிரிக்கெட்

கிரிக்கெட் பார்ப்பனர்களின் விளையாட்டாக மாற்றப்பட்டுவிட்டதால் அதன் வீச்சு ஊதிப் பெருக்கப்பட்டு ஏதோ தேசத்தின் பிரச்சினையாகவே மாற்றப்பட்டது. பார்ப்பன-பனியாக்களின் சூதாட்டக்களமாக அது மாறிப் போய் நிற்கிறது. இந்திய கிரிக்கெட் அணியின் அதிகார மய்யம், கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.அய்.) இந்திய அரசு தொடர்பை துண்டித்துக் கொண்டு தன்னிச்சையாகவே இயங்குகிறது.

இந்த கிரிக்கெட்டில் பல கோடி ரூபாய் பணம் புரளத் தொடங்கிய நிலையில் போட்டிகளை ஒளிபரப்புவதில் தகவல் தொடர்பு நிறுவனங்களிடையே கடும் போட்டி உருவானது. பி.சி.சி.அய். ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தை அனுமதிக்க முடிவெடுத்தது. அப்போது, பி.சி.சி.அய்க்கு போட்டியாக கபில்தேவை தலைவராகக் கொண்டு, ‘இந்தியன் கிரிக்கெட் லீக்’ (அய்.சி.எல்.) என்ற அமைப்பு உருவானது. இது மாநில அளவில் அணிகளை உருவாக்கி போட்டிகளை நடத்தி, செல்வாக்குப் பெற்ற நிலையில் பி.சி.சி.அய். இதை முறியடிக்க பண முதலைகளின் முதலீட்டு வியாபாரக் களமாக மாற்றியமைக்க இந்தியன் பிரிமீயர் லீக் (அய்.பி.எல்.) என்ற போட்டி அமைப்பை உருவாக்கியது. அணிகளின் தேர்வு ஏலத்தில் விடப்பட்டது. பண முதலைகள் தங்களது கறுப்புப் பணத்தை வெள்ளையாக்க அணிகளை ஏலம் எடுப்பதில் போட்டி போட்டுக் களத்தில் குதித்தனர்.

அதன் பிறகு ஒவ்வொரு முதலாளியும் தங்களுக்குத் தேவையான கிரிக்கெட் ஆட்டக்காரரை விலைகொடுத்து வாங்கினர். இதில் ‘மேட்ச் பிக்கிங்’, ‘ஸ்பாட் பிக்கிங்’ என்ற சூதாட்டங்கள் தலைதூக்கின. ஒரு அணி வெற்றி அல்லது தோல்வியை உறுதி செய்துகொண்டு அதற்கேற்ப ரன்களை எடுப்பது ‘மேட்ச் பிக்கிங்’. இந்த வெற்றி தோல்வியை முன் வைத்து சூதாட்டங்கள் நடந்தன. அதற்குப் பிறகு ‘ஸ்பாட் பிக்கிங்’ என்ற சூதாட்ட முறை வந்தது. இதில் விளையாட்டுக்காரர்களை சரிகட்டிக் கொண்டு எத்தனை ரன் எடுப்பது; எப்படி கோட்டைவிடுவது என்பது முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டுவிடும். இப்படி ‘ஸ்பாட் பிக்கிங்’கில் ஈடுபட்ட ராஜஸ்தான் அணியைச் சார்ந்த ஸ்ரீசாந்த் உள்பட 3 பேர் டெல்லி போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பந்தயம் கட்டி பணம் ஈட்டப்படும் சூதாட்டம் நடத்திய தரகர்களும் கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.

இந்த மோசடியில் விளையாட்டுக்காரர்கள் - தரகர்கள் மட்டும் ஈடுபடுவது இல்லை. அய்.பி.எல். அணி நடத்திய போட்டிகளின் காலத்தில் 160 கோடி வருமானவரி ஏய்ப்பு நடந்துள்ளது. அன்னிய செலாவணி சட்டத்தை மீறி ரூ.1077 கோடி பணம், அய்.பிஎல். அணிகளுக்கு வந்துள்ளது. இது குறித்து அமுலாக்கப் பிரிவு விசாரணை நடத்தி வருவதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், யார் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காரணம் இதில் தொடர்பு கொண்டவர்கள் எல்லோரும் கட்சிகளைக் கடந்து நிற்கிறார்கள். பா.ஜ.க.வைச் சார்ந்த அருண்ஜெட்லி, ரவிசங்கர் பிரசாத், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சசிதரூர், ராஜீவ் சுக்லா, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், லல்லுபிரசாத், தி.மு.க. குடும்பத்தைச் சார்ந்த சன் குழுமம் நடத்தும் கலாநிதி மாறன் என்று எல்லோரும் அரசியல் புள்ளிகள்.

இந்திய கிரிக்கெட் நிறுவனம் முறைகேடுகளைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு பிரிவை வைத்திருக்கிறது. ஆனால், அந்த நிறுவனம் இந்த முறைகேட்டை கண்டு பிடிக்கவில்லை. டெல்லி காவல்துறையின் இணைய தளங்களுக்கான குற்றப் பிரிவுதான், இந்த முறைகேட்டை கண்டுபிடித்துள்ளது.

கிரிக்கெட் வாரிய தலைவராக உள்ள சீனிவாசன் என்ற பார்ப்பனர், சென்னையில் நட்சத்திர ஓட்டல் ஒன்றிலிருந்து அளித்த பேட்டியில், கிரிக்கெட்டில் சூதாட்டத் தரகர்களைக் கட்டுப்படுத்த முடியாது என்று கூறியுள்ளார். தங்களது அமைப்பு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வராது என்று கூறியுள்ள அவர், ஒவ்வொரு கிரிக்கெட் அணிக்கும் தனித் தனியாக ஊழல் தடுப்புப் பிரிவு அமைக்கப் போவதாக கூறுகிறார்.

நாட்டில் எத்தனையோ விளையாட்டுத் துறை கவனிப்பாராற்றுக் கிடக்கிறது. இந்தியாவின் தேசிய விளையாட்டு ஹாக்கி. இதில் பார்ப்பனர்கள் விளையாட வர மாட்டார்கள். அவ்வளவு ஆபத்தானது. அந்த விளையாட்டுக்கு போதிய அதரவு இல்லாமல் நலிந்துவிட்டது. ஏன், மகளிர் கிரிக்கெட் அணிகூட போதிய ஆதரவு கிடைக்காமல் தள்ளாடிப் போய் விட்டது. கால்பந்து போன்ற தமிழர் விளையாட்டுகள் அனாதைகளாகி விட்டன. ‘கேரம்போர்டு’ விளையாட்டில் அர்ஜுனா விருதைப் பெற்ற ஒரே விளையாட்டு வீரர் தமிழ்நாட்டைச் சார்ந்த மரியம் சூசை - ஒரு தலித். அவர் தமிழகத்தில் அடையாளமின்றி வாழ்கிறார்.

பிரிட்டிஷ்காரர்கள் குளிர் காய்வதற்காக நாள் முழுதும் சூரிய ஒளியில் நிற்பதற்குக் கண்டுபிடித்த விளையாட்டு தான் கிரிக்கெட். எனவேதான் 5 நாள் விளையாட்டாக இருந்தது. பிறகு பார்சிகளும் பார்ப்பனர்களும் பிரிட்டிஷாருடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள இதில் ஆர்வம் காட்டினர். ஏனைய விளையாட்டுகளைப் போல அரைக்கால் சட்டை போட வேண்டிய அவசியமோ, ஒருவரையொருவர் தொட்டு விளையாட வேண்டிய அவசியமோ இல்லாததால் பார்ப்பனர்கள் கிரிக்கெட்டை தங்களுக்கான விளையாட்டாக்கிக் கொண்டார்கள். பிறகு 5 நாள் போட்டி ஒரு நாள் போட்டியானது. பிறகு சூதாட்டமாகி பார்வையாளர்களை மடையர்களாக்கி வருகிறது.

மைதானத்தில் அரைகுறை ஆடைகளுடன் பெண்கள் ஆபாசமாக ஆட வைக்கப்படுவதும், அய்ந்து நட்சத்திர ஓட்டல்களில் பாலுறவு கூத்துகள் நடப்பதும் - இப்போது கிரிக்கெட் போட்டியின் பிரிக்க முடியாத அம்சங்களாகி விட்டன. ‘வர்ணாஸ்ரமத்தை’ வாயொழுகப் பேசும் பார்ப்பனர்கள், இந்த விளையாட்டின் ரசிகர்களாக பவனி வருகிறார்கள். ‘துக்ளக்’ சோவாக இருந்தாலும், காஞ்சி ஜுனியர் ‘சங்கராச்சாரி’ ஆனாலும் அத்தனை பேரும் கிரிக்கெட் ரசிகர்கள்தான்.

சமூகத்தை தலைகுனிய வைக்கும் இந்த கிரிக்கெட், வெறுத்து ஒதுக்கப்பட வேண்டும்! மாற்று விளையாட்டுகள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அதற்கான விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்!

## அச்சத்தின் பிடியில் தமிழ் முஸ்லீம்கள்!


# சிங்கள புத்த பிக்குகள் தொடர் தாக்குதல்

தங்களுக்கான தாயக உரிமையை மீட்டெடுக்கப் போராடி வரும் ஈழத் தமிழர்களுக்கு 13 ஆவது சட்டத் திருத்தம் என்ற பொம்மையைக் காட்டி, ‘கிளுகிளுப்பு’ மூட்டும் விளையாட்டுகளில் சிங்கள பேரினவாத ஆட்சியும், இந்திய அரசும் ‘கண்ணாமூச்சி’ காட்டி ஏமாற்றப் பார்க்கிறது. இந்த நிலையில் அந்த 13ஆவது சட்டத் திருத்தத்தையும் முடக்கிப் போடும் முயற்சிகளில் இலங்கை அரசு தீவிரம் காட்டத் தொடங்கியுள்ளது. 13 ஆவது சட்டத் திருத்தத்தில் தமிழ் மாகாண ஆட்சிக்கு அதிகாரம் இல்லாத காவல் துறையை உருவாக்கிக் கொள்ளும் சட்டப் பிரிவுகள் இடம் பெற்றுள்ளன.

அதேபோல் தமிழர்களின் நிலமும் எந்நேரமும் பறித்துக் கொள்ளக்கூடிய நிபந்தனையுடன் அங்கே மாகாண கவுன்சில்கள் ஆட்சி செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இப்போது சொற்பமாக வழங்கப்பட்டுள்ள காவல்துறை, நில உரிமைகளையும் 13 ஆவது சட்டத் திருத்தத்திலிருந்து நீக்கிவிட வேண்டும் என்றும் இதற்கு ராஜபக்சே நாடாளுமன்றத்தில் ‘மனசாட்சி’ அடிப்படையில் வாக்குகளைப் பெற வேண்டும்

4 ஆம் பக்கம்

## இனப்படுகொலை குற்றத்துக்கு 80 ஆண்டு சிறை



இராஃபின் ரியோஸ் மான்ட்

வரலாற்றில் முதன்முறையாக ‘இனப்படுகொலை’ குற்றத்துக்காக 30 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாட்டின் சர்வாதிகாரி 80 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார். மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்றான கவுத்தமேலா என்ற நாட்டின் சர்வாதிகாரியாக 1982 இல் ராணுவப் புரட்சி மூலம் அதிகாரத்தைப் பிடித்தவர் இராஃபின் ரியோஸ் மான்ட். அப்போது இந்த சர்வாதிகாரியை எதிர்த்த இக்சில் மாயான் என்ற பழங்குடி இனப் பிரிவினர்மீது ராணுவத்தை ஏவி இனப்படுகொலை செய்தார். கவுத்தமேலாவில் மாயான் என்ற பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள். அதில் ஒரு பிரிவினர் இக்சில் மாயான்.

6.5. மில்லியன் மக்களில் இரண்டரை லட்சம் இக்சின் மாயான் பழங்குடியினர் இனப் படுகொலைக்கு உள்ளானார்கள். இவரது ஆட்சி 17 மாதங்கள் மட்டுமே நீடித்தது. மனித உரிமை அமைப்புகள் இனப்படுகொலைக் குற்றத்தின் கீழ் விசாரிக்க வற்புறுத்தின. பிறகு நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினராகிவிட்ட இந்த சர்வாதிகாரி, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பயன்படுத்தி குற்றத்திலிருந்து தப்பி வந்தார். அவர் பதவி பறி போனவுடன் கவுத்தமேலா அரசு உள்ளூர் நீதிமன்றத்தில் இனப்படுகொலை குற்றத்தின் கீழ் விசாரணைக்கு உத்தரவிட்டது. பாதிக்கப்பட்ட மக்கள் சாட்சியமளித்தனர். இனப்படுகொலை உறுதியை செய்த நீதிபதி, 80 ஆண்டு சிறைதண்டனை விதித்து தீர்ப்பளித்தார். இனப்படுகொலை குற்றத்தில் தண்டிக்கப்பட்ட முதல் குற்றவாளி இவர்தான்.

**தலையங்கம்**

## தமிழ் வழிக் கல்வியும் தமிழ்த்தாய் சிலையும்

அரசுப் பள்ளிகளை ஆங்கில மொழி வழிப் பள்ளிகளாக மாற்றும் திட்டத்தை தமிழக கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார். தங்கள் வீட்டுக் குழந்தைகள் ஆங்கில வழிக் கல்வியைப் பெற வேண்டும் என்ற 'மோகம்' பெற்றோர்களிடம் மேலோங்கி நிற்கிறது. எனவே இலவசமாக கல்வி வழங்கும் அரசுப் பள்ளிகளை தவிர்த்து விட்டு கடன் வாங்கியாவது ஆங்கில வழியில் கற்பிக்கும் சி.பி.எஸ்.ஈ., மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தங்கள் குழந்தைகளை சேர்க்க விரும்புகின்றனர்.

கடந்த ஆண்டு 320 அரசு பள்ளிகளில் ஒன்று, மற்றும் 6 ஆவது வகுப்பில் தலா 2 ஆங்கில வழிப் பிரிவுகள் என 640 வகுப்புகளைத் தொடங்க தமிழக அரசு அனுமதித்தது. இவ்வாண்டு ஒரு லட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி பெறுவதற்கு அரசு அனுமதித்துள்ளது.

ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாக தனியாகப் பயில வேண்டும் என்பதிலும், அதில் மாணவர்கள் தேர்ச்சிப் பெற்றவர்களாக வேண்டும் என்பதிலும் எந்தக் கருத்து மாறுபாடும் கிடையாது. அதே போழ்து, பயிற்சி மொழியாக தமிழ்மொழி இருப்பதுதான் மாணவர்களின் சிந்தனைத் திறனையும் புரியும் ஆற்றலையும் மேலோங்கச் செய்யும். கூர்மையான மதிநுட்பம் கொண்ட குழந்தைகள், மாணவர்கள்கூட ஆங்கில வழி கல்வி பெறுவதால் தங்களது திறமையை வெளிப்படுத்த முடியாமல் தவிக்கிறார்கள். தடைகளை சந்திக்கிறார்கள். அதுவும் ஒடுக்கப்பட்ட சமூக சூழலிலிருந்து வரும் மாணவர்களுக்கு ஆங்கில வழிக் கல்வி என்பது ஒரு பெரும் தடையாகவே உள்ளது. கல்வியாளர்கள் பலரும் இதையே வலியுறுத்துகிறார்கள்.

தமிழக அரசின் இந்த முடிவு தமிழ் வழிக் கல்வியை முழுமையாக ஒழித்து விடும்.

தமிழ் வழிக் கல்வி பயிலும் மாணவர்களை உருவாக்கி, ஆங்கிலத்தில் நல்ல புலமையாளர்களாக பயிற்றுவித்து, மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் கல்லூரிகளில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கிட முன்வரவேண்டும்.

ஒரு பக்கம் அரசு பள்ளியில் தமிழ் வழிக் கல்விக்கு தடைகளை ஏற்படுத்திக் கொண்டு, மற்றொரு பக்கம் தமிழ்த் தாய்க்கு ரூ.100 கோடி செலவில் சிலை எழுப்பப் போவதாக முதல்வர் அறிவித்துள்ளார். மக்கள் வரிப் பணத்தை வீண் விரயமாக்குவதே இத்திட்டம்.

தமிழ்த் தாய்க்கு ரூ.100 கோடி விரயம் செய்வதைவிட தமிழை அறிவியல் மொழியாக வளர்த்தெடுக்கும் திட்டங்களில் கவனம் செலுத்தி நிதி ஒதுக்கிடுவதே தமிழுக்கான உண்மைத் தொண்டாக இருக்க முடியும். தமிழ் வளர்ச்சி மய்யம், தமிழ் உயராய்வு மய்யம், தமிழ்ப் பல்கலைக்கழகங்கள் எல்லாம் போதிய நிதி ஒதுக்கீடு இன்றி சோம்பிக் கிடக்கின்றன. கணினி தமிழ் வளர்ச்சியில் இன்னும் செய்ய வேண்டிய பயன்பாடுகள் எவ்வளவோ உண்டு.

தி.மு.க. ஆட்சியில் வள்ளுவருக்கு சிலை என்றால், அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ்த் தாய்க்குச் சிலை என்று போட்டி சிலைகள் வருவதால் தமிழ் வளர்ந்து விடாது. தி.மு.க. ஆட்சி நடத்திய உலகத் தமிழ் மாநாடும், தலைவர் புகழ்பாடும் மாநாடாக வீண்விரயத்தில் தான் முடிந்தது. தமிழுக்கு என்ன பயன் கிடைத்தது?

# திருப்பதியில் ஜீன்சுக்குத் தடை

திருப்பதி 'ஏழுமலையான்' எப்போதுமே ஊடகங்களின் கதாநாயகன் தான்! அதாவது கிரிக்கெட் நட்சத்திரங்களைப் போல!

கடந்த வாரம் ஏழுமலையான் கோயிலுக்குள் வடை சுடும் இடத்தில் தீ பிடித்தது. பிறகு கண்காணிப்பு காமிராக்கள் ஆங்காங்கே நிறுவப்படும் சேதி வந்தது. இப்போது மற்றொரு சேதி வந்துள்ளது. இனிமேல் பெருமாள் தரிசனத்துக்கு சேவா டிக்கெட் பெற்று (விசேட தரிசனத்துக்கு) வரும் பக்தர்களுக்கு உடை கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆண் பக்தர்கள், பேண்ட், வேட்டி, அரைக்கை மற்றும் முழுக்கை சட்டை, குர்தா பைஜாமா அணியலாம். ஜீன்ஸ் அணியக் கூடாது. பெண் பக்தர்கள் சேலை, பஞ்சாபி மற்றும் சுரிதார் அணியலாம். கவர்ச்சியான உடைகளை இருபாலரும் தவிர்க்க வேண்டும் என்று கோயில் நிர்வாகம் அறிவித்துள்ளது. கவர்ச்சி உடை அணிந்து வரும்போது கவனம் 'பெருமாள்' மீது திரும்பாமல் திசை திரும்பி விடுகிறது என்ற கவலையால்தான், இப்படி ஒரு அறிவிப்பு வெளி வந்திருக்க வேண்டும்.

பெருமாளை தரிசிக்க வரும் ஆன்மீகப் பெருமக்கள்கூட இப்படி கவனம் சிதைந்து போய் விடுகிறார்களா என்று யாரும் நம்மைப் பார்த்து கேட்கக் கூடாது. 'அப்படித்தான்' என்று கோயில் நிர்வாகமே கூறும்போது நாம் என்னய்யா, செய்ய முடியும்?

இப்படி உடைகளுக்கு மட்டும் அல்லாது, உள்ளத்துக்கும் இதேபோல் தேவஸ்தான நிர்வாகம், சில கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என்பது அடியேனின் தாழ்மையான கருத்து.

பொது ஒழுக்கமில்லாதவர்கள், கிரிமினல் குற்றம் செய்யாதவர்கள், ஊழல் வழக்குகளை சந்திக்காதவர்கள், நில மோசடி செய்யாதவர்கள், புகை-குடிப் பழக்கம் இல்லாதவர்கள், பல பெண்களை ஏமாற்றாதவர்கள், கறுப்புப் பணக்காரர்கள், வருமான வரியை ஏய்ப்பவர்கள் - போன்றவர்கள் எல்லாம் பெருமாளை தரிசிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று ஏன் அறிவிக்கக் கூடாது?

"நல்லா இருக்குதே, உம் பேச்சு. இப்படி சொல்லிவிட்டாலே, எவனாவது குற்றத்தை ஒப்புக்கொண்டு வராமல் போய் விடுவானா, என்ன? நான் எந்தக் குற்றமும் செய்யாதவன் என்று - பெருமாள் மீதே சத்தியம் செய்யச் சொன்னாலும் சத்தியம் செய்துவிட்டு தாராளமாக தரிசனத்துக்கு வருவார்கள். அவர்களுக்கு நன்றாகவே தெரியும்! குற்றவாளிகளை பெருமாளால் கண்டுபிடிக்கவே முடியாது. பெருமாளுக்கு அந்த சக்தியும் கிடையாது என்று! கொள்ளையடித்த பணத்திலேயே ஒரு பங்கை பெருமாள் உண்டியலுக்கு காணிக்கை யாக்குவேன் என்று பயபக்தியுடன் வேண்டிக் கொள்ளும் பக்தித் திருடர்கள் கூட உண்டே! எனவே இது எல்லாம் உருப்படாத யோசனை" என்று அடித்துக் கூறுகிறார் நண்பர் ஒருவர்!

சரி, அது தொலையட்டும். பெருமாள் அருகே போய் வேதமந்திரம் ஓதி, கர்ப்பகிரகத்தை தமக்காகவே 'ரிசர்வ்' செய்து வைத்துள்ள அர்ச்சகர்கள் போலவே பக்தர்களும் திறந்தமேனியோடு குடுமி வைத்துக் கொண்டு முதுகில் பூணூலை மாட்டிக் கொண்டுவரும் சீருடையை அறிவிக்கலாமே! பக்தர்களுக்குள் வேறுபாடின்றி அனைவரும் அப்படியே ஒய்யாரமாக குடுமியை ஆட்டிக் கொண்டு நெற்றி நாமத்துடன் தரிசனத்துக்கு கியூவில் வரிசை வரிசையாக நின்றால், எப்படி கண்கொள்ளாத காட்சியாக இருக்கும்? ஆண் பக்தர்களுக்கு மட்டும் இப்படி ஒரு ஏற்பாட்டை செய்தால், 'பெருமாள்' மகிழ்ச்சியில் கூத்தாடுவாரே என்று அடியேனுக்கு மற்றொரு யோசனை தோன்றுகிறது! வேண்டாம் வேண்டாம்! யாராவது கேட்டு விடாதீர்கள். உடனே கோயில் நிர்வாகம் பதில் கூறிவிடும்.

***"பிராமணர்கள் சட்டையே போடாவிட்டாலும் அது புனிதம்! பக்தர்கள் ஜீன்ஸ் போட்டாலும் ஆபாசம்!"***

**- கோடங்குடி மாரிமுத்து**

# கோவை மண்டலப் பொறுப்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பு

கோவை மண்டலப் பொறுப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்பு மே 17, 18, 19 ஆகிய நாட்களில் திண்டுக்கல்லில் நடைபெற்றது. கழகப் பரப்புரைச் செயலாளர் தோழர் பால்.பிரபாகரன் வகுப்புகளைத் தொடங்கிவைத்து உரையாற்றினார்.

மே 17 வெள்ளியன்று 'தீண்டாமை ஒழிப்புத் திட்டங்களும் செயல்படுத்தும் முறைகளும்' என்ற தலைப்பில் மேட்டூர் ஜஸ்டின் ராஜ், 'பாலின சமத்துவம்: திட்டங்களும் செயல்படுத்தும் முறைகளும்' என்ற தலைப்பில் முனைவர் மணிமாறன் வகுப்புகளை ஒருங்கிணைத்தனர். தோழர்களின் விவாதங்களை அதிகமாக்கி, தோழர்களின் முழுமையான பங்கேற்பு என்ற முறையில் வகுப்புகள் நடத்தப்பட்டன.

மே 18 சனிக்கிழமை வேத எதிர்ப்பு அமைப்புகளின் எழுச்சியும், வீழ்ச்சியும் என்ற தலைப்பிலும், பெரியாரின் மக்கள் விடுதலை அமைப்பு என்ற தலைப்பிலும் தோழர் தி.தாமரைக்கண்ணன் வகுப்பு நடத்தினார். மே 18 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவுநாள் என்பதால் தலைவர் கொளத்தூர் மணி 'செந்நெருப்புநாள்' என்ற தலைப்பில் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றை விளக்கினார். மீண்டும் பிற்பகலில் இருந்து இரவு 8.00 வரை 'திராவிடர் விடுதலைக் கழகமும் அமைப்பு முறைகளும்' என்ற தலைப்பில் தோழர்களின் விவாத அரங்கம் நடைபெற்றது.

மே 19 ஞாயிறு காலை 'பெரியார் பார்வையில் இந்திய தேசியம்' என்ற தலைப்பிலும், 'மார்க்சியமா? பெரியாரியமா?' என்ற தலைப்பிலும் பழனி தோழர் மௌ.அர.ஜவஹர் வகுப்புகளை நடத்தினார். மாலை 5.30 மணிக்கு வகுப்புகள் நிறைவடைந்தன. கோவை மண்டல அமைப்புச்செயலாளர் தோழர் பல்லடம் விஜயன் கோவை வகுப்புகளுக்கான அனைத்து ஏற்பாடு களையும் சிறப்பாகச் செய்திருந்தார்.

மூன்று நாட்களும் மூத்த பெரியார் தொண்டர் தோழர் ஆசிட் தியாகராசன் தோழர்களோடு விவாதித்தார், பங்கேற்றார். மூன்று நாட்களுக்கான செலவுத் தொகைகளை வகுப்பில் பங்கேற்ற தோழர்களே, ஒவ்வொருவரும் 1000 ரூபாய் கட்டணமாகச் செலுத்தி, வகுப்பு நடத்தும் சுமையை முற்றிலுமாகக் குறைத்துவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரை மண்டலச் செயலாளர் இராவணன், திண்டுக்கல் மாவட்டத்தலைவர் பெரியார்நம்பி, மாவட்டச்செயலாளர் நல்லதம்பி, கடத்தூர் காந்தி, செம்பட்டி ஆல்பர்ட், இராஜா ஆகியோர் முன் ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டனர்.



## ‘அறிவுக் குடில்’ திறப்பு

தமிழ்நாடு அறிவியல் மன்ற மாநில அமைப்பாளர் ஆசிரியர் ப.சிவக்குமார், ஈரோட்டில் புதிதாக கட்டியுள்ள அறிவுக்குடில் இல்லத் திறப்பு விழா 12.5.2013 ஞாயிறு மாலை 6 மணி யளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தி.வி.க. மாநில பொரு ளாளர் ஈரோடு ப.இரத்தினசாமி, மாநில அமைப்புச் செயலாளர் தி.தாமரைக்கண்ணன், மாநில வெளியீட்டுச் செயலாளர் சூலூர் தமிழ்ச்செல்வி, ஈரோடு மண்டல அமைப்புச் செயலாளர் கோபி இராம. இளங்கோவன், சேலம் மண்டல அமைப்புச் செயலாளர் மேட்டூர் அ.சக்திவேல் மற்றும் மாவட்ட ஒன்றிய கழகப் பொருப்பாளர்கள், தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

## முள்ளிவாய்க்கால் நினைவுக் கூட்டம்

17.5.2013 வெள்ளி மாலை 6 மணி அளவில் புரசைவாக்கம் தானா தெருவில் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பழ. நெடுமாறன் (உலகத் தமிழர் பாதுகாப்பு பேரவை), ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ., வீர சந்தானம், புகழேந்தி தங்கராசு, மே.17 இயக்கம் திருமுருகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

18.5.2013 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் மதுரை ஜான்சிராணி பூங்கா அருகில் முள்ளிவாய்க்கால் நினைவு நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அனைத்துக் கல்லூரி மாணவர்கள் தமிழீழ ஆதரவாளர் கூட்டமைப்பு வழக்கறிஞர்கள் சார்பாக நடைபெற்ற இந்தப் பொதுக் கூட்டத் தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் (மா.லெ.) மக்கள் விடுதலை பொதுச் செயலாளர் மீ.த. பாண்டியன் முதலா னோர் உரையாற்றினர். நிகழ்ச்சிக்கு முன்பாக மெழுகுவர்த்தியேற்றி நினைவு அனுசரிக்கப்பட்டது.

19.5.2013 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் புதுக் கோட்டை புல்வயல் பகுதியில் இளம் சிங்கங்கள் அமைப்பின் சார்பாக ‘தமிழீழம் மலரும்’ விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் (மா.லெ.) மக்கள் விடுதலை பொதுச் செய லாளர் மீ.த. பாண்டியன் முதலானோர் உரையாற்றினர்.

# கேரளாவிலும் உணரப்படும் திராவிடம்

**அழகிய சங்கரபாண்டியன்**

தமிழர்களும் பெருவாரியாக வாழும் மலையாளப் பகுதிகளுள் ஒன்று, கேரளாவில் இன்று அமைந்துள்ள பாலக்காடு பகுதியாகும். இப்பகுதி மொழிவாரி மாகாணப் பிரிவினைக்கு முன்னர் சென்னை மாகாணத்தோடு இணைந்திருந்ததாகும். வருணாசிரம - சாதிய அமைப்பின் தாக்கம் மேலோங்கி நின்ற அந்நாளில், அப்பகுதியில் இருக்கும் கல்பாத்தி எனும் பார்ப்பன அக்கிரகாரப் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் நடமாடுவதற்கு இருந்த தடையை எதிர்த்து 1920 களின் பிற்பகுதியில் நடத்தப் பெற்ற மனித உரிமைக்கான போர்களும், அவற்றுக்கு சுயமரியாதை இயக்கம் அளித்து வந்த ஆதரவும் வரலாற்றுச் சிறப் புடையன.

கேரளாவில் ‘இந்துக்கள்’ எனப்படும் மக்கள் தொகுதிக்குள் ஆகப் பெரும்பான்மை எண்ணிக்கை யுடைய சாதியான ஈழவர்களின் சமூக சீர்திருத்த தலைவரான நாராயண குருவின் இறுதி - வைக்கப் போரின் உச்சம் தொடங்கி, அதாவது சுமார் 1924-25 ஆம் ஆண்டு தொடங்கி 1936-37 வரை, அதாவது திருவாங்கூர் தனி அரசின் திவானாக சி.பி.ராமசாமி அய்யரும், சென்னை மாகாணத்தின் காங்கிரஸ் முதலமைச்சராக சி.ராஜகோபலாச்சாரியாரும் பதவி ஏற்கும் வரை சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஈழவர் சமுதாயம் நாராயண குருவின் இடத்தை பெரியாரைக் கொண்டே நிரப்பி வந்தது என்றால் அது மிகையல்ல. ஈழவ சமூக மாநாடுகள் பலவற்றிற்கு பெரியாரை தலைமை தாங்கச் செய்தது; ஈழவர்கள் தங்களை ‘மதமற்றவர்கள்’ என அறிவித்தது; என்றவாறாக சுயமரியாதை - திராவிடம் சார்ந்த இயக்கம் மற்றும் கருத்தியலின் மீது அச்சமூகம் கொண்ட ஈடுபாடே 1936 இல் அவர்களுக்கு ‘கோயில் நுழைவு உரிமை’ வழங்கப் படுவதற்கு ஓர் முக்கியமான காரணமாக அமைந்தது.

‘திராவிடர் கருத்தியல்’ அங்கு தொடர்ந்து வேரூன்றிப் பரவி இருந்தால் ‘சங்ககால சேர நாட்டுத் தமிழர்களே நாம்’ என்ற வரலாற்று உணர்வு ஈழவர்கள் உள்ளிட்ட கேரள மக்களின் ஆழ்மனப் புதைவிலிருந்து விடுபட்டு நனவாக ஆகியிருக்கும். மேலும், தம் பெயரிலேயே ஈழத்தோடு வரலாற்று உறவைக் கொண்டுள்ள அம் மக்களிடையே இன்று ஈழத்தின் விடியலுக்கான பேராதரவும் திரண்டிருக்கும். ஆனால், பன்னெடுங்காலத்தின் பின்னர் மேற்கண்டவாறு மீள்துளிர்த்தெழுந்த திராவிட - ஈழவர் (மலையாள) நல்லுறவு தொடரவில்லை. 1930களின் இறுதிப் பகுதியில் அங்கு பெருவளர்ச்சிப் பெற்ற காங்கிரசின் ‘தேசியமும்’ அதனைத் தொடர்ந்த ‘இந்திய வயமான’ கம்யூனிசமும் - “பரசுராமன்” கோடாரியின் இருபுறக் கூர்முனை களாகத் தொழிற்பட்டு - அவ்வுறவைத் துண்டித்து எறிந்து விட்டன. (இது எவ்வாறு திகழ்ந்தேறியது? என்பது குறித்து விரிவான தனி ஆய்வுகள் தேவை.)

மொழிவாரி மாகாணப் பிரிவினையின் பின்னர் கேரள மக்களிடையே இந்திய ‘தேசிய’த்திற்கும், இந்திய ‘கம்யூனிச’த்திற்கும் இடையே நடைபெற்று வரும் தொடர்ச்சியான ‘முரண்’ இயக்கமானது, அம்மக்களின் ஒரு பகுதியினரை தவிர்க்க இயலாதவாறு மத்திய பார்ப்பன அரசதிகாரத்தின் தென்னிந்திய முகவர்களாக ஆக்கியிருக்கின்றது. மேலும் கேரளாவின் தனித்த பூகோளம் சார்ந்த வாழ்க்கைக் கூறுகளின் நெருக்கடியால் அம்மாநிலத்திற்கு வெளியே வாழும் சூழலுக்கு உள்ளாகியுள்ள ‘மறுநாட்டு மலையாளி’களின் வாழ்வுத் தேட்டமும் இதற்கொரு முக்கியக் காரணமாகும்.

கேரள மக்களிடையே பெருவாரியாகக் காண லாகும் இப்போக்கின் காரணமாகவே தமிழ்நாட்டு மக்களின் ஒரு பகுதியினரிடையே எழுந்துள்ள ‘திராவிடக் கருத்தியலின்’ மீதான அவ நம்பிக்கையைக் காண வேண்டியுள்ளது. இரு பகுதி (நாடு)களுக்கும் இடையே எழும் எல்லைச் சிக்கல்கள், ஆற்று நீர் பகிர்வுச் சிக்கல்கள் ஆகியன, மேற்குறித்த அவ நம்பிக்கையை மேலும் கூர்மையாக்கியுள்ளன.

இந்நிலையில், பாலக்காடு பகுதியில் நடைபெற்ற ஒரு சிறு நிகழ்வு, கேரளாவிலும் ஏதோ ஒரு வகையில் திராவிடக் கருத்தியல் தொடர்ந்து இயங்கி வருவதை உணர்த்துவதாக அமைந்துள்ளது. அது வருமாறு:

பாலக்காடு நகரின் அருகே அமைந்துள்ள தமிழர்கள் கணிசமாக வாழும் ஓர் ஊர் தத்தமங்கலம் என்பதாகும். இவ்வூரில் அமைந்துள்ள குருசாமியார் மடம் எனப்படும் ஒரு மடத்தில் 25 ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்கும் விழா ஒன்று நடந்தது. ஓணம் பண்டிகையையொட்டி, 1.9.2012 அன்று நடந்த இவ்விழாவை ‘ஆசியமம்’ என்ற அமைப்பு நடத்தியது. மலையாளிகளும் தமிழர்களும் கலந்து பணியாற்றும் இவ்வமைப்பின் சார்பில் இவ்விழாவினை முன்னின்று நடத்தியவர் திரு. குருவா யூரப்பன் என்பவர் ஆவார். நாராயண குருவின் மரபில் தோன்றிய அரசியல் இயக்கமான எஸ்.என்.டி.பி.ஐச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினரான திரு.அச்சுதன் போன்றோர்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் பேராசிரியர் ராஜன் என்பார் உரையாற்றினார். மலையாளியான இவர் கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றப் பின்னர் தனிப் பயிற்சி மாணவர்களுக்கு வகுப்பு எடுத்து வருபவர் ஆவார். பேராசிரியர் ராஜன் தனது உரையில், கூடியிருந்த மக்களைப் பார்த்து பகுத்தறிவுக் கேள்விக் கணைகளைத் தொடுத்தார். ‘வாமணன், மாவலியைக் கொன்ற தொன்மக் கதையை நினைவு கூறும் ‘ஓணம் பண்டிகையை’ நாம் ஏன் கொண்டாட வேண்டும்?’ என்று கேட்டார். தொடர்ந்து ‘மாவலி ஒரு திராவிடக் குறியீடு ஆவான்’ என்று சொன்ன அவர், ‘எல்லோருக்கும் நன்மை செய்த அவன், உண்மையான கம்யூனிஸ்டு போல பொருளுடமை அனைத்தையும் பொது வாக்கியவன்’ என்றார். மேலும், ‘எந்தத் தவறும் செய்யாத அவன், வாமணன் என்ற “பிராமணனால்” அநியாயமாகக் கொல்லப்பட்டான்’ என்று கூறிய அவர், ‘நம்மை இழிவுபடுத்தும் விழாவை நாமே கொண்டாடலாமா?’ என்று பெரியார் பாணியில் கேட்டு முடித்தார்.

திராவிடர் (திராவிடம்) என்ற மரபினம் சார்ந்த பண்பாட்டு அடித்தளத்திலிருந்து தமிழர், மலையாளிகள் என்ற இரு தேசிய இனங்களின் நல்லுறவு வளர முடியும் என்பதற்கு மேற்குறித்த சிறு நிகழ்வு ஒரு காட்டாகும். இதே போன்று தற்காலத்தில் கேரளாவின் வெவ்வேறு பகுதிகளில் நிலைகளில் உணரப்படும் திராவிடக கருத்தியலின் தாக்கத்தை அவ்வப்போது இனம் கண்டு பதிவு செய்து அதன் வழி இரு தேசிய இனங்களின் நல்லுறவைப் பல்கிப் பெருகிடச் செய்வது நம் கடமையாகும்.

ஆரியப் பண்பாட்டின் சதிகாரப் பிரதிநிதியாக இருந்து வருவதும், தேசிய இனங்களிடையே மோதலை வளர்த்து, அதன் மீதே தனது ஆதிக்கத்தின் இருப்பை உறுதி செய்து வருவதுமான மத்திய அரசை அம்பலப்படுத்த அதுவே ஒரு முக்கிய வழியாகும்.

* இது குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு, பேராசிரியர் ராஜனின் உரை குறித்த தகவல்களை அளித்தவர் தத்தமங்கலத்தில் வசித்து வரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ச.கவுதமன் ஆவார்.

## மேட்டூர் குமரப்பா–சுபத்ரா மணவிழா



சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே உள்ள குமரன் நகர் பகுதி கழகத் தோழரும், சுவரெழுத்து பரப்புரை யாளரும், மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் தபேலா கலைஞருமான சு.குமரப்பா–சீ.சுபத்ரா ஆகியோரது வாழ்க்கை இணையேற்பு விழாவை 16.5.2013 வியாழக்கிழமை காலை 11 மணியளவில் மேட்டூர் ஸ்ரீ ராமலிங்க சௌடேஷ்வரி அம்மன் சமூக நலச் சங்க மண்டபத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடத்தி வைத்தார். கழகப் பொருப்பாளர்களும் தோழர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.


“புரட்சிப் பெரியார் முழக்கம்”

ஆண்டுக்கட்டணம்

ரூ.200

தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

DATE OF PUBLICATION 22.05.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# தம்புல்லாவில் மசூதி இடிப்பு

(முதல் பக்கத் தொடர்ச்சி)

என்றும், ஆளும் கட்சிகளில் ஒரு அங்கமாக உள்ள ‘ஜதிகா ஹேலா உருமயா’ (ஜெ.செ.யூ) என்ற கட்சி ராஜபக்சேவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இராஜபக்சே இதற்கு ஒப்புதல் வழங்கி விட்டாதாகவே தெரிகிறது. தமிழர்களுக்கு நிலம் மற்றும் போலீசு அதிகாரங்கள் வழங்கப்படு மானால் இலங்கையில் ‘ஒருமைப் பாட்டுக்கு’ ஆபத்து வந்துவிடும் என்று சிங்கள ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள். இந்த நிலையில் தான் இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜி.எல். பெரிஸ் என்பவரிடம் இந்த முயற்சிக்கு இந்தியா ஆதரவு வழங்காது என்று முதன்முதலாக தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

இதற்கிடையே சிங்கள பவுத்த வெறியமைப்புகள் இஸ்லாமியர்களுக்கு எதிராக தங்கள் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளன. கொழும்பில் உள்ள பிரபலமான துணி வணிக நிறுவனமான ‘பேஷன் பக்’. ஒரு மாதத்துக்கு முன்பு ‘புத்த பூர்ணிமா’ தினத்தன்று நல்ல வியாபாரம் நடந்து கொண்டிருந்தபோது, கடையில் புகுந்து, சிங்களர்கள் கடைகளை சூறையாடினர். கடைசியில் துணிகள் வைக்கப் பட்டிருந்த சேமிப்புக் கிடங்கையும் தீ வைத்து எரித்தனர். புத்த பிக்குகள் நடத்திய இந்த வன்முறை வெறியாட்டத்தை தொலைக்காட்சிகள் ஒளிபரப்பின. கடந்த மார்ச் 28 ஆம் தேதி நடந்த இந்த தாக்குதல் கொழும்பு நகரத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

‘பொது பாலசேனா’ (புத்த அதிகார சக்தி) என்ற புதிய சிங்கள அமைப்பு இஸ்லாமியர்களுக்கு எதிரான இத்தகைய தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகிறது. இஸ்லாமியக் கடைகளில் விற்பனையாகும் உணவுப் பொருள்களுக்கு ‘ஹலால்’ சான்றிதழ்கள் வழங்குவதை நிறுத்த வேண்டும் என்று கூறும் இந்த அமைப்பு, ‘ஹலால்’ முத்திரைப் பெற்ற இஸ்லாமிய வணிக நிறுவனங்களில் தாக்குதலை நடத்துகிறது. தம்புல்லா என்ற இடத்திலுள்ள மசூதியைத் தாக்கியுள்ளனர். புத்தர்களின் புனிதப் பகுதியை மசூதி மாசுபடுத்துகிறது என்று காரணம் கூறுகிறார்கள்.

இலங்கைப் போலீஸ் இந்தத் தாக்குதலை தடுக்காமல் வேடிக்கைப் பார்க்கிறது என்கிறார், முஸ்லீம் தமிழ் தேசிய கூட்டணித் தலைவரும், கொழும்பு மாநகராட்சி முன்னாள் துணை மேயருமான அசாத் சல்லே. இவரை இலங்கை ரகசிய போலீசார் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து, பிறகு கடும் எதிர்ப்புக்குப் பிறகு விடுவித்தனர். சிங்கள புத்த வெறியர்களின் எதிர்ப்பினால் ‘ஹலால்’ சான்றிதழ் வழங்கி வந்த ‘ஜமிலி பாத்துங் உலேமா’ என்ற அமைப்பு நிறுத்தி விட்டது. ‘ஹலால்’ சான்றிதழ் பெற்றுள்ள கடைகளை புறக்கணிக்க சிங்கள பவுத்த வெறி அமைப்பு சிங்களர்களுக்கு வேண்டுகோள் விடுத்து வருகிறது.

அடுத்த கட்டமாக இஸ்லாமிய பெண்கள் முக்காடு போடுவதை ‘பொது பாலசேனா’ அமைப்பு எதிர்க்கத் தொடங்கியுள்ளது. இலங்கை ராணுவத் துறை செயலாளரும் ராஜபக்சே சகோதரருமான கோத்த பய ராஜபக்சே, இந்த அமைப்பின் தலைவர்களுக்கான பயிற்சி மய்யத்தைத் தொடங்கி வைத்துள்ளார். இஸ்லாமியர்கள் ஒவ்வொரு நாளும் அச்சுறுத்தலை சந்திக்க வேண்டியிருக்கிறது என்று பத்திரிகையாளராக பணி புரியும் சோனா பார்னஸ் என்ற இஸ்லாமிய பெண் கூறுகிறார். அமைதி காக்குமாறும் எதிர் நடவடிக்கை களில் ஈடுபட வேண்டாம் என்றும், தொழுகை கூட்டங்களில் இஸ்லாமியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். தமிழர்களின் தமிழ் தேசிய கூட்டணியும் அமைதி காக்குமாறு வேண்டுகோள் விடுத்து வருகிறது.

இலங்கை அரசு முஸ்லீம்களுக்கு எதிரான தாக்குதல்களை பெயரளவுக்கு கண்டிக்கிறது. ஆனால், ஒவ்வொரு நாளும் அச்சத்தின் பிடியிலேயே முஸ்லீம்கள் வாழ்கிறார்கள். கொழும்பிலுள்ள இஸ்லாமிய நாடுகளின் தூதரக அதிகாரிகளிடம் முஸ்லீம்கள் மீது தாக்குதல் நடக்காமல் பாதுகாப்பு தருவோம் என்று ராஜபக்சே உறுதியளித்து வருகிறார் என்றாலும், ஒவ்வொரு நாளும் முஸ்லிம்கள் பாதுகாப்பற்ற சூழலிலேயே வாழ்கிறார்கள்.

இத் தகவல்களை ‘இந்து’ ஏடு கட்டுரை ஒன்றில் வெளியிட்டுள்ளது. ✦

## மணமகன் தேவை

மத்திய அரசுப் பணியில் அதிகாரிகளாகப் பணியாற்றும் பெரியார் கொள்கைக் குடும்பத்தைச் சார்ந்த இணையரின் மகளான 23 வயதுடைய பொறியியல் (எலக்ட்ரானிக்ஸ் அண்ட் எலக்ட்ரிக்கல்ஸ்) பட்டதாரிப் பெண்ணுக்கு பெரியாரிய கொள்கை ஏற்புடைய மணமகன் தேவை. சாதி தடையில்லை.

தொடர்புக்கு: 9444156678

## ஒரு கேள்வி: ஒரு பதில்

**கேள்வி :** ‘அட்சயதிருதை’ நாளில் குண்டுமணியாவது நகை வாங்கினால் ஆண்டு முழுதும் நகை குவியும் என்று நகைக் கடைக்காரர்கள் விளம்பரம் செய்கிறார்களே!

**பதில் :** வாங்கினால் நகை குவியும் என்றால், வெளிநாட்டு சந்தையில் நகை வாங்கும் கடைக்காரர்கள் அதை விற்காமல் தங்கள் கடைகளிலேயே வைத்துக் கொள்ளலாமே! மேலும் சரக்கு குவியுமே!

# பதுங்கு குழியில் ஒரு நாட்குறிப்பு

பங்குனி 10-2009
கிழக்கில் தம்புல்லாவிலிருந்து
வடக்கு கிளிநொச்சி செல்ல
வேண்டும்.
வணிகத்தின் பொருட்டு
ஒருவரைப் பார்த்துவர
என் ‘வாப்பா’ பணித்திருந்தார்.
சைக்கிள் மோட்டாரில்
சுதந்திரபுரம் வந்துவிட்டேன்.
பழுதானது வண்டி!
தள்ளிக்கொண்டு வந்தேன்.
சடசட வென்று எதிரிலிருந்து
ஓசை கேட்டுக் கொண்டே வந்தது!
“ஓடி வாங்கோ... வந்திருங்கோ....!”
எங்கிருந்தோ அவசரமாக
அழைக்கும் அச்சக் குரல்!
“ராணுவ கெலிக்காப்டர்
குண்டுவீசுது... இங்கால
வந்திருங்கோ”
வண்டியை விடுத்து ஓடினேன்.

தரைக்குக் கீழே இரண்டு கண்கள்
மட்டும் தெரிந்தன!
ஓ... இது பதுங்குகுழி!
பயத்தில் குதித்துவிட்டேன்.
குழிக்குள் கண்கள் தெளிவில்லை!
மூடித் திறந்தேன்
முதியவர்கள் குழந்தைகள்
இளையவர் பெண்கள் எனப் பலர்!
குழந்தைகள்கூட ஊமைமொழியில்!
செய்கையில் பேசிக்
கொண்டார்கள்!
“இந்தாங்கோ... குழியிலிருந்து ஒரு
நேசக் குரல்;
என்மார்புக்கு அண்மையில்
ரொட்டி! சிறிது தண்ணீர்
பாட்டிலுடன்....
அந்தக் குரலுக்குரியவரின் கைகளில்!
அந்த பதுங்கு குழிக்குள்ளே
நாட்கள் ஓடின....

அவ்வப்போது மூத்தக் குடிகளின்
“முருகா முருகா” எனும்
முனுமுனுப்பு!
நான் முழந்தாளிட்டு அல்லாவை
வேண்டுவேன்....
இவ்வாறே நாட்கள் ஊர்ந்தன.
இரவும் பகலும் தெரியவில்லை!
நாளும் கிழமையும் கணக்கில்லை!

கண்கள் இப்போது
இருட்டுக்குப் பழகிக் கொண்டன.
இவளும் நானும் விழிமொழியாலும்
செய்கையாலும் பேசிக்
கொண்டோம்.
வாய்மொழிக்குத் துணிவில்லை!
உள்ளங்களின் அன்பு துளிர்த்தது!

முதியவர்கள் கூடிக் கூடி
கமுக்கமாக ஏதோ பேசினர்.

ஒருநாள் அதிகாலை
போருடையில் ஒரு பெண்புலி
பதுங்குக் குழிக்கு வந்தார்.
அவரின் ஒருகையில் துப்பாக்கி
மறுகையிலோ கார்த்திகை
மலர்களால்
தொடுக்கப்பட்ட இரண்டு சிறிய
மாலைகள்!
அச்சச் சூழலில் அன்பான அதிர்ச்சி!
ஆளுக்கொரு கார்த்திகையை தந்தார்
முதியவர் ஒருவரும் மூதாட்டி
ஒருவரும்
இணையாக நின்றனர் –
இவளின் பெற்றோர்கள்.

புலிமகள் –
“அவர்களின் திருவடி தொழுக!”
என்றார்.
பெற்றோரைத் தொழ குனிந்தோம்.
“தமிழர் தாகம் தமிழீழத் தாயகம்”
என்றார்.
தொழுதெழுந்தோம்.
வந்த புலித் தமிழச்சி சட்டென
விரைந்தார்.

நடுப்பகல்
கீழால பறந்துவந்தன சில
விமானங்கள்
வெடித்துச் சிதறின செல்கள்!
முடிந்து வீழ்ந்தனர் நால்வர்!
வாய்விட்டு அழுதிட அஞ்சினோம்!
விழி சிந்த நெஞ்சம் குமுறினோம்!
குழிக்குள்ளே குழி பறித்து
மறைத்தோம்!
காயமடைந்த இருவருக்கு இவள்
கட்டுப்போட்டு ஆற்றுப் படுத்தினாள்.

மாலைப் பொழுது
இரவை அழைத்துக் கொண்டு
வந்தது.
இரவு! எங்களுக்கு முதலிரவு!
**இனப்போர்க்களம் எங்களைத்**
**தமிழராய் ஒன்றாக்கிற்று.**
மின்னல் மின்னியது
பார்த்துக் கொண்டோம்.
மழை பொழிந்தது
**சாதிமதத்தை**
**கழுவிக் கொண்டோம்!**
இனப்பகையின் இடியினால்
இனம் பிரியோம்...
சிங்கள குண்டு வீச்சின்
இடி ஓசை கேட்கிறதே....!


– **அற்புதன்**

## திருச்சியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

திருச்சி மாவட்ட கழகத்தின் சார்பில் 17.5.2013 மாலை 6 மணிக்கு திருச்சி காந்தி மார்க்கெட் கீரைக்கடை பஜாரில் முள்ளி வாய்க்கால் படுகொலை நினைவேந்தல் மற்றும் வீரவணக்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்டத் தலைவர் மி.இ.ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். முன்னாள் மாவட்டத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.முத்து முன்னிலையில் வீரவணக்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. மெழுகுவர்த்தி ஏற்றி ஈழத்தில் உயிர் நீத்த மக்களுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் மண்டல அமைப்புச் செயலாளர் புதியவன், மாவட்ட செயலாளர் கந்தவேல் குமார், மாவட்ட அமைப்பாளர் குணராஜ், மாவட்ட பொருளாளர் மனோகரன், தோழர்கள் பழனி, மணி, பேராசிரியர் வேலு, பாரத், மிதுன், தேனப்பன், ஜெகன் மற்றும் ஊர் பொது மக்கள், மாணவர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 23rd May 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.


புரட்சிப் **பெரியார் முழக்கம்**
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மே 30, 2013 | புரட்சி 12 | முழக்கம் 20 | விலை: ரூ.3.00

## கிரிமிலேயரை நீக்குக • ஆசிரியர் நியமனத்தில் நிகழ்ந்துள்ள சமூக அநீதியைக் களைக • மக்களை சுரண்டும் உலகமயம் • ஜாதிவெறி சக்திகளை ஒடுக்கிய முதல்வருக்கு பாராட்டு!

# ஜாதி-தீண்டாமைக்கு எதிராக பரப்புரைப் பயணங்கள்

## திருப்பூரில் கூடிய கழக மாநில செயலவைக் கூட்ட முடிவுகள்



திராவிடர் விடுதலைக் கழக மாநில செயலவைக் கூட்டம் 26.5.2013 அன்று திருப்பூரில் அன்னபூரணா அரங்கத்தில் காலை 10.30 மணியளவில் கூடியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்றார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஈரோடு சிவக்குமார் - கடவுள், ஆத்மா மறுப்பு கூற, திருப்பூர் மாவட்டக் கழகத் தலைவர் சு. துரைசாமி வரவேற்புரையாற்றினார்.

தொடக்கத்தில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், திராவிடர் விடுதலைக் கழகம் தொடங்கிய 2012 ஆகஸ்டு 12 தேதியிலிருந்து கழகம் மேற்கொண்ட அடுக்கடுக்கான செயல்பாடுகளை பட்டியலிட்டார். ஜாதி-தீண்டாமைக்கு எதிராக கழகம் தொடங்கிய இயக்கம், தமிழகத்தின் மய்ய நீரோட்டத்துக்கு முன் நகர்ந்து, ஜாதிய சக்திகள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதை சுட்டிக் காட்டினார். தொடர்ந்து மண்டல அணி செயலாளர்கள், மாவட்ட பொறுப்பாளர்கள், மாநில பொறுப்பாளர்கள் மற்றும் கருத்து தெரிவிக்க விரும்பிய தோழர்கள் உரையாற்றினர். தொடர்ந்து மாலை 6 மணி வரை கூட்டம் நீடித்தது. கழக ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தின் வளர்ச்சி, பரப்புரை இயக்கங்கள், பயிற்சி வகுப்புகள், கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து தோழர்கள் தங்கள் கருத்துகளை முன் வைத்தனர். பொருளாளர் இரத்தினசாமி, கட்டமைப்பு நிதி திரட்டல் குறித்து வலியுறுத்தினார்.

பெரியார் பெரும் தொண்டரும், திராவிடர் கழகத்தில் தனது சொந்த பொருட்செலவில் கிராமம் கிராமமாக பகுத்தறிவு கொள்கைகளை பரப்பி, பல பேச்சாளர்களை உருவாக்கியவருமான மூத்த தோழர் சதாசிவம் என்ற வளவன் ஆற்றிய உரை தோழர்களுக்கு உணர்ச்சியூட்டியது. நடமாடும் பரப்புரை வாகனம் ஒன்றை அவர் வடிவமைத்துள்ளார். மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடத்துவதற்கான பொருள்களும், ஒலி, ஒளி வசதிகளும் அதில் பொருத்தப்பட்டுள்ளன. தோழர்கள் இதைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

நிறைவாக கழத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றி, கீழ்க்கண்ட தீர்மானங்களை முன் மொழிந்தார். பலத்த கரவொலியுடன் தீர்மானங்களை தோழர்கள் வழி மொழிந்தனர்.

### ஜாதியைக் காக்கும் அரசியல்

சமுதாயத்தில் ஜாதியத்தை நிலைநிறுத்தும் கட்டமைப்புகளாக இந்து மதம், பார்ப்பனியம், கடவுள், பண்டிகைகள் இயங்கிக் கொண்டிருந்தாலும் இவற்றோடு ஜாதியம், அரசியல் என்ற புதிய வடிவத்தோடு, புத்தாக்கம் பெற்றுவருகிறது. ஜாதி அடிப்படையில் அரசியல் கட்சிகள் அணி திரட்டிக் கொண்டு - பெயரில் மட்டும் அரசியல் அடையாளத்தை வெளிப்படுத்தும் முகமூடிகளை அணிந்து நிற்கின்றன. வேட்பாளர்கள் தேர்விலும், கட்சிகளின் பொறுப்பாளர்கள் தேர்வு / நியமனங்களிலும் ஆதிக்க ஜாதிப் பார்வையே மேலோங்கி நிற்கின்றன. ஜாதித் தலைவர்கள் தங்கள் அரசியல் நலன்களுக்கும் - ஜாதி ஆதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் - சமுதாயத்தை பின்னோக்கி இழுத்துச் செல்லும் இந்த ஆபத்தான போக்கை - ஜாதி எதிர்ப்பு இயக்கங்கள், மதச் சார்பற்ற சக்திகள், இடதுசாரிகள் எதிர்க்க முற்படுவதோடு, மக்கள் மன்றத்தில் இவர்களை அம்பலப்படுத்த வேண்டும் என்று கவலையுடன் திராவிடர் விடுதலைக் கழகம் சுட்டிக்காட்டுகிறது; தேர்தல் ஆணையம் - அரசியல் பெயரோடு - தேர்தல் களத்திற்கு வரும் - இந்த ஜாதி ஆதிக்கச் சக்திகளை கட்டுப்படுத்தவும் - கண்காணிக்கவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

### கிரிமிலேயர் வேண்டாம்

மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களிலும், அரசுப் பணிகளிலும் - பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இட ஒதுக்கீடு - மண்டல் பரிந்துரை அமுலாகி சுமார் இருபது ஆண்டுகளுக்குப் பிறகும் பாதியளவு கூட முழுமை பெறாத அவல நிலையே தொடர்ந்து கொண்டிருக்கிறது. ‘கிரீமிலேயர்’ என்ற சமூக நீதிக்கு எதிரான வடிகட்டும் முறையே - இதற்கு முக்கிய காரணம். எனவே பிற்படுத்தப்பட்டோருக்கு சட்டரீதியாக கிடைக்கவேண்டிய இட ஒதுக்கீட்டு உரிமைகளைப் பறிக்கும் ‘கிரீமிலேயர்’ முறையை அறவே நீக்கிட வேண்டும் என்று இச் செயலவை வற்புறுத்துகிறது. நடைமுறையில் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கிரீமிலேயருக்கான உச்சவரம்பு மாற்றப்படவேண்டும் என்று உச்சநீதிமன்றம் வரையறுத்துள்ளது . ஆனால் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை ஐந்து ஆண்டுகள் இதில் எந்த மாற்றமும் கொண்டு வராமல் கிடப்பில் போட்டிருந்த இந்திய நடுவண் அரசு இப்போது ஆண்டு வருமான வரம்பை ரூ 4.5 இலட்சத்திலிருந்து 6 இலட்சமாக உயர்த்தியுள்ளது. கண்துடைப்புக்காக - மாற்றியமைக்கப்பட்டுள்ள இந்த உச்ச வரம்பால் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு முழுமை பெறப்போவதே

4 ஆம் பக்கம்

# உயர் மட்டத்தில் உலவும் ஊழல் பார்ப்பனர்கள்

பார்ப்பனர்கள் ஆதிக்கம்தான் நாட்டை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது என்பதை உறுதிப்படுத்தும் செய்திகள் அவ்வப்போது வந்து கொண்டிருக்கின்றன. ஊழலுக்கு காரணமாக இருப்பவர்கள் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டவர்கள்தான் என்று அஜீஸ் நந்தி என்ற எழுத்தாளர் வெளிப்படையாக பேசினார். ஆனால், உண்மை அதுவல்ல. பார்ப்பனர்கள் ஊழல் இப்போது அதிர்ச்சியூட்டும் வகையில் வெளிவந்து கொண்டிருக்கிறது.

கிரிக்கெட் வாரியத்தின் தலைவராக இருப்பவர் சீனிவாசன் என்ற பார்ப்பனர். 'இந்தியா சிமெண்ட்' என்ற தொழில் நிறுவனத்தின் உரிமையாளர். இவரது மருமகன் செட்டியார் சமூகத்தைச் சார்ந்த குருநாத் மெய்யப்பன். (ஏ.வி.எம். குடும்பத்தைச் சார்ந்தவர்) மெய்யப்பன் கிரிக்கெட் சூதாட்டத்தில் தொடர்புள்ளவர் என்பது கண்டுபிடிக்கப்பட்டு, இப்போது கைது செய்யப்பட்டுள்ளார். சீனிவாசன், சென்னை சூப்பர்கிங்க்ஸ் அணியின் உரிமையாளராகவும் உள்ளார். இந்த அணியின் தலைமை நிர்வாகியாக இருக்கும் குருநாத் மெய்யப்பன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பல்வேறு சந்தேகங்கள் எழும்பியுள்ளன. அவசர அவசரமாக சீனிவாசன் தனது மருமகனைக் காப்பாற்றுவதற்காக சூப்பர் கிங்ஸ் அணியில் தனது மருமகனுக்கு பொறுப்பு ஏதும் இல்லை என்று உண்மையை மறைக்க முயலுகிறார். சீனிவாசன் கிரிக்கெட் வாரிய தலைவரான பிறகு, சர்வாதிகாரியாக செயல்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

தனது இந்தியா சிமெண்ட் நிறுவனத்தை அய்.பி.எல். போட்டியில் பங்கெடுப்பதற்காக கிரிக்கெட் வாரியத்தின் விதிகளையே திருத்தியவர், இந்தப் பார்ப்பனர். அவர் பதவி விலக வேண்டும், அப்போதுதான் மருமகன் மீதான ஊழல் பற்றி நேர்மையான விசாரணை நடக்கும் என்று மத்திய நாடாளுமன்ற அமைச்சர் கமல்நாத் வலியுறுத்தியுள்ளார். ஆனால், பதவி விலக முடியாது என்கிறார் சீனிவாசன்.

'அய்கேட்' என்ற அய்.டி. நிறுவனத்தில் தலைமை அதிகாரியாக இருந்தவர் பன்னீஷ் மூர்த்தி எனும் கருநாடகப் பார்ப்பனர். அய்.அய்.டி.யில் படித்தவர். இப்போது தனது நிறுவனத்தில் தனக்குக் கீழே பணியாற்றிய பெண் ஒருவருடன் பாலியல் உறவு கொண்டிருந்தார் என்பதற்காக நிர்வாகத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். கர்ப்பம் அடைந்த அந்தப் பெண்ணை கருக்கலைப்பு செய்யுமாறு வற்புறுத்தினாராம். இதே பார்ப்பனர் ஏற்கனவே 'இன்ஃபோசிஸ்' என்ற அய்.டி. நிறுவனத்தில் தலைமை அதிகாரியாக இருந்தபோது இதேபோல் 'பாலுறவு' குற்றத்துக்காக பதவி நீக்கம் செய்யப்பட்டவர். அப்போது அவரது செயலாளராக இருந்த பல்கேரியாவில் பிறந்து, அமெரிக்க குடியுரிமை பெற்றிருந்த ஒரு பெண், இவர் மீது பாலியல் குற்றச்சாட்டுகளைக் கூறினார். 'இன்போசிஸ்' நிர்வாகம், பிரச்சனை நீதிமன்றத்துக்குப் போனால், நிறுவனத்தின் பெயர் கெட்டுவிடும் என்பதால் அந்தப் பெண்ணுக்கு மூன்று மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கி நீதிமன்றத்துக்கு வெளியே சமரசம் செய்து கொண்டு மூர்த்தியை பதவி நீக்கம் செய்தது.

1999 ஆம் ஆண்டு டெல்லியில் நட்சத்திர ஓட்டல் ஒன்றில் மது ஊற்றிக் கொடுக்கும் ஜெசிக்காலால் என்ற பெண்ணை குடிபோதையில் மனுசர்மா என்ற பார்ப்பன இளைஞன் சுட்டுக் கொன்றான். இவன் ஒரு காங்கிரஸ் தலைவரின் மகன். அதிகார பலம், பணபலம் கொண்ட இந்த பார்ப்பனர், தனக்கு எதிரான சாட்சிகளை பிறழ் சாட்சிகளாக மாற்றி விட்டதால், நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டனர். மக்கள் மன்றத்திலிருந்தும் பெண்கள் அமைப்புகளிடமிருந்தும் கடும் எதிர்ப்புகள் உருவான நிலையில், டெல்லி உயர்நீதிமன்றம், தீர்ப்பை மாற்றி ஆயுள் தண்டனை வழங்கியது. இப்போது இந்த வழக்கில் பிறழ்சாட்சிகளாக மாறிய இரண்டு பேரை கைது செய்து நடவடிக்கை எடுக்க டெல்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஒருவர் ஷியாம் முன்ஷி என்ற இந்தி நடிகர், மற்றொருவர் வெடி மருந்து ஆய்வாளர் பி.எஸ்.மனோச்சா. வழக்கு முடிந்து 6 ஆண்டுகளுக்குப் பிறகு, டெல்லி உயர்நீதி மன்றம் இப்படி ஒரு நடவடிக்கை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

காஞ்சி ஜெயேந்திரன் மீதான கொலை வழக்கில் இப்படித்தான் அரசு சாட்சிகள் கடந்தகால தி.மு.க. ஆட்சியில் பிறழ் சாட்சிகளாகிவிட்டனர். அதிகாரம் படைத்த பார்ப்பனர்கள் கிரிமினல் குற்றம் செய்தால் கூட அவர்கள் காப்பாற்றப்பட்டு விடுகிறார்கள் என்பதற்காகவே இதை சுட்டிக் காட்டுகிறோம்.

# சுடுகாட்டுக்கு போராடிய தலித் மக்கள் கைது: ஈரோடு கழகம் களமிறங்கியது

ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகே உள்ள வடுகபாளையத்தில் உள்ள 'தலித்' மக்கள் கடந்த 60 வருடங்களாக ஊரிலிருந்து 4 கி.மீ தொலைவில் உள்ள வாய்க்கால் புறம்போக்கில் இறந்தவர்களை அடக்கம் செய்து வந்தனர். மழைக்காலத்திலும் வாய்க்காலில் தண்ணீர் செல்லும் காலங்களிலும் சுடுகாட்டில் தண்ணீர் தேங்கி விடுவதால், ஊருக்கு அருகிலேயே உள்ள அரசுப் புறம்போக்கு இடத்தை சுடுகாட்டுக்கென ஒதுக்க வேண்டுமென கடந்த 6 மாத காலமாக தாசில்தார், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்டோருக்கு மனு அனுப்பி வந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த 16.05.2013 அன்று அங்கு மாறன் என்பவர் இறந்து விட்டார். அவரது உடலை ஊருக்கு அருகில் உள்ள இடத்தில் புதைக்க அனுமதிக்க வேண்டும் என்று கோரி பிணத்துடன் சாலை மறியலில் ஈடுபட்டனர். ஆனால் மக்கள் கோரிய இடத்தின் அருகில் உள்ள தோட்டத்து உரிமையாளர் ஆரம்பம் முதலே இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்ததோடு, அங்கு சிறியதாக ஒரு கோவிலையும் கட்டி வைத்து விட்டார்.

இந்நிலையில் இறந்த உடலை வைத்து செய்யப்பட்ட சாலை மறியலை கைவிட வலியுறுத்தி ஆர்.டி.ஓ., டி.எஸ்.பி, தாசில்தார் உள்ளிட்டோர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். ஆனால் அதில் சமாதானமடையாத மக்கள் பிணத்தை நடுரோட்டில் வைத்து விட்டு ஊருக்குச் சென்று விட்டனர். தொடர்ச்சியாக அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியும் அவர்கள் திருப்தி அடையாததால் கோபமடைந்த அதிகாரிகள் காவல்துறை உதவியுடன் இரவு 12 மணிக்கு பிணத்தை பழைய சுடுகாட்டிலேயே அடக்கம் செய்தனர். அதன் பிறகு ஊருக்குள் நுழைந்த அவர்கள், அங்குள்ள இளைஞர்கள், கல்லூரி மாணவர்கள், தூங்கிக் கொண்டிருந்தவர்கள் என 26 பேரைக் கைது செய்தனர். மறுநாள் பெருந்துறை நீதிமன்றத்தில் நேர்நிறுத்தி கோவை சிறையில் அடைத்தனர். மேலும் 13 பேர் மீது வழக்குப் பதிவு செய்து (இறந்தவரின் மகன்கள் உள்பட) தேடத் தொடங்கியதால் ஊரிலுள்ள ஆண்கள் தலைமறைவாயினர்.

இந்நிலையில் திராவிடர் விடுதலைக் கழகப் பொருளாளர் இரத்தினசாமி, ஈரோடு மண்டலச் செயலாளர் இராம. இளங்கோவன், அந்தப் பகுதியைச் சேர்ந்த அறிவியல் மன்றப் பொருப்பாளர் ஆசிரியர் சிவக்குமார், கோபி அர்ச்சுணன் ஆகியோர் வடுகபாளையம் சென்று அங்குள்ள மக்களிடம் " உங்களுக்காக வாதாட மூத்த வழக்கறிஞர் ப.பா மோகன் அவர்களை அணுகியுள்ளோம். எனவே யாரும் பயப்பட வேண்டாம், உங்களுக்கு நீதி கிடைக்க நாங்கள் உள்ளோம்" என்று தைரியப்படுத்தினர். நம்முடன் ஆதித் தமிழர் பேரவையைச் சார்ந்த தோழர் தமிழின்பன், புரட்சிகர இளைஞர் முன்னணியைச் சார்ந்த தோழர் லோகு ஆகியோரும் உடன் வந்தனர்.

இந்நிலையில் அங்குள்ள ஆதிக்க சாதியைச் சார்ந்த சிலர் ஊர்மக்களிடம் சென்று நம்முடைய பகுதியிலேயே ஒரு வழக்கறிஞர் உள்ளார், அவர் உங்களுக்காக வாதாடுவார், உள்ளூரிலேயே வழக்கறிஞர் உள்ள நிலையில் வெளியூர் வழக்கறிஞர் வேண்டாம் என்று கூறி குழப்பம் ஏற்படுத்த முயற்சித்தனர், ஏனென்றால் ஆதிக்க சமூக வழக்கறிஞரை வைத்து வாதாடினால் இந்த மக்களை நிரந்தரமாக நம் கட்டுக்குள் காலத்திற்கும் வைத்துக் கொள்ளலாம் என்பது இவர்களின் எண்ணம். குழப்பமடைந்த ஊர்மக்களில் சிலர் அங்கு சாய்ந்த போதும் நம் தோழர்களின் பெரும் முயற்சியால் பெரும்பாலானவர்கள் நம் தோழர்களின் பக்கம் நின்றனர்.

மூத்த வழக்கறிஞர் ப.பா மோகன் அவர்களின் மூலமாக, தேடப்பட்டு வரும் மக்களுக்கான முன்ஜாமீன் பெறப்பட்டது. 22.05.2013 அன்று சிறையில் உள்ள 26 பேருக்கும் பிணை கிடைத்தது. ஆனாலும் இவர்கள் வெளியே வந்து விடக் கூடாது என்று கறுவிய அதிகாரிகள், 26 பேருக்கும் பிணை தர முன்வந்த கிராம மக்களுக்கான சொத்து மதிப்பு சான்றிதழில் கையொப்பமிட மறுக்குமாறு கிராம நிர்வாக அலுவலரை மிரட்டி இருந்தனர். உயர் அதிகாரிகளின் கட்டளையை மீறாத கி.நி.அலுவலர் அவ்வாறே செய்தார். "சீப்பை ஒளித்து வைத்து விட்டால் கல்யாணம் நின்று விடாது" என்ற கிராமத்து பழமொழிக்கேற்ப, பக்கத்து ஊர்களில் உள்ள மக்களை வைத்து அவர்களை அங்குள்ள கிராம நிர்வாக அலுவலர்களிடம் சான்றிதழ் பெற வைத்து அதிகாரிகள் முகத்தில் கரியைப் பூசினர் நம் தோழர்கள்.

கடந்த 23.05.2013 அன்று ஜாமீனில் விடுதலையான 26 பேரை, அறிவியல் மன்றத் தோழர் சிவக்குமார், வடுகபாளையம் பகுதித் தோழர் முத்துச்சாமி, புரட்சிகர இளைஞர் முன்னணியைச் சேர்ந்த லோகு ஆகியோர் கோவைக்குச் சென்று வரவேற்று அழைத்து வந்தனர். சென்னிமலை குமரன் சிலையிலிருந்து பேருந்து நிலையம் வரை ஊர்வலமாக கோசமிட்டவாறு வந்த அவர்களை திராவிடர் விடுதலைக் கழக பொருளாளர் இரத்தினசாமி, மாவட்ட அமைப்பாளர் சென்னிமலை செல்வராசு, ஆசிரியர் மோகன்ராஜ், ஈரோடு நகரத் தலைவர் திருமுருகன், சென்னிமலை ஒன்றியச் செயலாளர் அழகன், பெருந்துறை சின்னச்சாமி, தற்சார்பு விவசாயிகள் சங்கத்தைச் சார்ந்த தோழர் பொன்னையன், ஆதித் தமிழர் பேரவையைச் சார்ந்த தமிழின்பன் மற்றும் நூற்றுக்கணக்கில் திரண்டிருந்த கிராம மக்கள் வரவேற்று பொன்னாடை அணிவித்தனர். பின் அங்கிருந்து ஊருக்குச் அழைத்துச் சென்றனர்.

கடந்த ஆண்டு அங்குள்ள கே.ஜி வலசு பகுதியில் கழகம் பொதுக்கூட்டம் நடத்த முயற்சித்த போது, அங்குள்ள ஆதிக்க சமூகத்தினரின் தூண்டுதலால், காவல் நிலையம் வரை வந்து கூட்டம் நடத்த கடும் எதிர்ப்பு தெரிவித்தனர் இந்த வடுகபாளையம் பகுதி மக்கள், இது பற்றிய செய்தி "புரட்சிப் பெரியார் முழக்க"த்திலும் வந்துள்ளது. இன்றைக்கு கைது செய்யப்பட்ட 26 பேரில் பெரும்பாலானவர்கள் அன்று நமக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள். இந்நிலையில் அவர்களை விடுதலை செய்ய முயற்சி செய்து, விடுதலை அடைந்த பிறகு அவர்களை ஊர் வரை அழைத்துச் சென்ற அறிவியல் மன்றத் தோழர் சிவக்குமாரின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "அன்று உங்கள் கூட்டத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த எங்களின் விடுதலைக்காக இவ்வளவு தூரம் முயற்சி செய்த உங்கள் கருஞ்சட்டைகளுக்கு நாங்கள் என்றும் நன்றிக்கடன்பட்டிருப்போம்" என்று விடுதலையானவர்களும் ஊர்மக்களும் கண்ணீர் மல்கினர்.

**செய்தி ப.சிவக்குமார்**

## கழகச் செயலவைத் தலைவராக திருப்பூர் சு. துரைசாமி: கழகத் தலைவர் அறிவிப்பு


திருப்பூரில் நடந்த திராவிடர் விடுதலைக் கழகச் செயலவைக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையில் கூறிய முக்கிய கருத்துகள்:

திராவிடர் விடுதலைக் கழகச் செயற்குழு, இனி திராவிடர் விடுதலைக் கழகச் செயலவை என்று அழைக்கப்படும். செயலவைத் தலைவராக திருப்பூர் மாவட்டக் கழகத் தலைவர் சு.துரைசாமி செயல்படுவார்.

செயலவைக் கூட்டத்துக்கு வர இயலாத செயலவை உறுப்பினர்கள், வர இயலாமையை முன்கூட்டியே கடிதம் வழியாகத் தெரிவிக்க வேண்டும். தொடர்ந்து செயலவைக் கூட்டத்தில் பங்கேற்காத தோழர்கள், உறுப்பினர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.

மாநில கழகப் பொறுப்பாளர்கள், மண்டல செயலாளர்கள் 3 மாதத்துக்கு ஒரு முறை தங்களின் செயல்பாடுகளை அறிக்கைகளாக தயாரித்து தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

# திண்டுக்கல்லில் குழந்தைகளுக்கான “பழகு மகிழ்வு முகாம்”



தமிழ்நாடு அறிவியல் மன்றம் சார்பில் குழந்தைகளுக்கான “பழகு மகிழ்வு முகாம்” திண்டுக்கல்லுக்கு அருகில் உள்ள லைஃப் என்னும் தொண்டு நிறுவனக் கட்டிடத்தில் மூன்று நாட்கள் (17, 18, 19.05.2013) நடைபெற்றது. இம்முகாமில் 8 முதல் 16 அகவையிலுள்ள 27 பெண் குழந்தைகள், 25 ஆண் குழந்தைகள் என மொத்தம் 52 பேர் பங்கேற்றனர். இவர்கள் தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து (திருப்பூர், சேலம், கரூர், ஈரோடு, கோவை, பொள்ளாச்சி, திண்டுக்கல், தஞ்சாவூர், கன்னியாகுமரி (திருவட்டார்) மாவட்டங்களிலிருந்து) வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முகாமில் பங்கேற்பதற்காக 16ஆம் தேதி மாலையே பெரும்பாலான குழந்தைகள் வந்து சேர்ந்தனர். அவர்களைக்கூட்டி வந்த பெற்றோர்கள் அன்றே அவரவர் வீட்டிற்குத் திரும்பிச் சென்றுவிட்டனர். தமிழ்நாடு அறிவியல் மன்றப் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் தோழர்கள். சிவகாமி, இரஞ்சிதா, விஜி, ஜஸ்டின், மணிமாறன், இராமகிருட்டிணன், சுப்ரமணியம் ஆகியோர் குழந்தைகள் பழகு முகாமை வழி நடத்தினர்.

முதல்நாளின் முதல் நிகழ்வாக குழந்தைகளின் வருகைப் பதிவு எடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆசிரியர் சிவகாமி நெறியாளராக வகுப்புகளைத் தொடக்கிவைத்தார். அதன்பின் பயிற்றுநர்கள் தங்களைக் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்துகொண்டனர். கற்பிக்கும் வசதிக்காக 8 முதல் 11 அகவையுள்ள குழந்தைகள் ஒரு குழுவாகவும் 12 முதல் 16 அகவையுள்ள குழந்தைகள் மற்றொரு குழுவாகவும் பிரிக்கப்பட்ட பிறகு குழந்தைகள் தங்களை அறிமுகம் செய்து கொள்வதை தோழர்கள் சிவகாமி, நீலாவதி மணிமாறன் ஒருங்கிணைத்தனர்.

ஆரம்பத்தில் மற்றவர்களோடு பேசத் தயங்கிய குழந்தைகள் பின்னர் நெருங்கிய நண்பர்களாக மாறிவிட்டனர். தேனீர் இடைவேளைக்குப் பிறகு “உரையாடல் திறன்” குறித்த வகுப்பை செ.நீலாவதி அவர்கள் எடுத்தார்கள். சிரித்த முகத்துடனும் அன்பாகவும் அவர் பாடம் நடத்தியது குழந்தைகளை மிகவும் கவர்ந்தது. மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு “மந்திரமா? தந்திரமா?” எனும் தலைப்பில் தோழர் பெரம்பலூர் தாமோதரன், சாமியார்கள் மற்றும் மந்திரவாதிகளால் மக்கள் ஏமாற்றப்படுவதையும், அவர்கள் செய்வது அனைத்தும் மந்திரத்தினால் அல்ல தந்திரத்தினால்தான் என்று விளக்கினார். மாணவர்களின் உற்சாக பதிலும் கேள்வி கேட்கும் விதமும் அனைவரையும் திக்குமுக்காட வைத்தது. பொள்ளாச்சி நசன் மற்றும் அவரின் திண்டுக்கல் மருத்துவ நண்பர் காகிதத்தில் பல வகையான உருவங்கள் செய்வது எப்படி என்று செய்துகாட்டியது பெற்றோரை நினைத்து அழுத குழந்தையையும் ஈர்த்தது. நசன் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் கதை, கவிதை, ஓவியம் வரையும் குழந்தைகளின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்தோம். குழந்தைகள் அனைவரும் ஆர்வத்துடன் ஓவியம், கதை மற்றும் கவிதைகளை தனித்தனியே ஒரு வெள்ளைத்தாளில் இரவு உணவிற்குப் பின்பும் எழுதி வரைந்தனர். அரசியல், குடும்பம், சினிமா எனும் தலைப்பில் மாணவர்கள் நாடகம் நடத்திக்காட்டியதில் புராணத்தின் கதாபாத்திரத்தை வைத்து தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருக்கும் “சோட்டா பீம்” என்ற மூடத்தனமான நாடகத்தை நாம் பார்க்கக்கூடாது என்றும் அரசியல்வாதிகளின் பொய் வாக்குறுதிகளை நம்பக்கூடாது மற்றும் சினிமாவை இரசிக்கலாம், ஆனால் நடிகர்களுக்காக இரசிகர்களாக இருந்து நாம் சண்டையிடக்கூடாது என்ற கருத்தை முன் வைத்தனர்.

இரண்டாம் நாள் (மே 18) “அருளகம்” என்ற தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் தோழர் பாரதி தாசன் மற்றும் அவருடன் வந்திருந்த காடுகளை ஆய்வு செய்யும் மூவர் இணைந்து இரண்டு ஊர்திகளில் குழந்தைகளை சிறுமலைக்கு அழைத்துச் சென்றனர். பயிற்றுநர்களும் உடன் இருந்தனர். இயற்கையை நாம் எவ்வாறு புரிந்துகொண்டு உயிரினங்களை நாம் ஏன் எதற்காகப் பாதுகாக்க வேண்டும் என்ற கலந்துரையாடலும் நடைபெற்றது. மதிய உணவிற்காகப் பயிலரங்கு வந்தனர். ஊர்தியில் சிறுமலைக்குச் செல்லும்போதும் சென்றுவிட்டுத் திரும்பும்போதும் குழந்தைகள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி, மாணவர்களோடு உரையாடினார். அதனைத் தொடர்ந்து திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் மணிமேகலை “பால் மற்றும் பாலினப் பாகுபாடு” குறித்து மாணவர்களுக்கு விளையாட்டின் ஊடாக பாடம் நடத்தினார். பாலினப் பாகுபாடு கூடாது என்று முகாமில் பங்கேற்ற அனைத்துக் குழந்தைகளும் ஒருமித்த கருத்தோடு கூறியது அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. மலைக்குச் சென்று வந்த சோர்வு சிறிய குழந்தைகளுக்கு இருக்கும் என்பதால் இப்பாடத்தை அவர்கள் விரும்பினால் கவனிக்கலாம் அல்லது அறைக்குச் சென்று ஓய்வெடுக்கலாம் என்று கூறியும் யாரும் வகுப்பறையை விட்டு அகலவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாலையில் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டு “புராணம்-கடவுள்-பண்டிகை” என்னும் தலைப் பிலான கலந்தாய்வு தோழர் சிவகாமியின் நெறியாள்கையில் நடைபெற்றது. ஒவ்வொரு தலைப்பிலும் நாடகம் நடத்தினர் குழந்தைகள். மதத்தின் பேரால் கொண்டாடப்படும் மூடப் பண்டிகைகளை நாம் புறக்கணிக்கவேண்டும் என்றும் “பொங்கல் பண்டிகைதான் தமிழர் களுக்கான பண்டிகை” என்றும் வெளிப் படுத்தினர். முதல்நாள் விரைவாக படுக்கைக்குச் சென்ற குழந்தைகள் புதிய நண்பர்கள் கிடைத்த மகிழ்வில் இரண்டாம் நாள் இரவில் நெடுநேரம் விளையாடிக் கொண்டிருந்தனர்.

மூன்றாம் நாள் காலை முகாமில் பங்கெடுத்துக் கொண்ட அனைத்துக் குழந்தைகளுடன் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் தமிழ்நாடு அறிவியல் மன்றப் பொறுப்பாளர்கள், உறுப்பினர்களும் ஒளிப்படம் எடுத்துக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து “மறுத்தல் திறன்- பாலினப் பாகுபாடு” எனும் தலைப்பில் ஆண்களுக்குத் தோழர் மணிமாறன் நெறியாள்கையில் தனியாகவும் பெண்களுக்கு தோழர் நீலாவதி நெறியாள்கையில் தனியாகவும் வகுப்புகள் நடத்தப்பட்டன. பிறகு “பில்லி சூனியம் என்பது ஏமாற்று வேலை என்பதை விளக்கி தோழர்கள் மடத்துக்குளம் மோகன், திருப்பூர் நகுலன், பிரசாத், மணிகண்டன் ஆகியோர் விளக்கியதின் விளைவாகப் பயிற்சியாளராக வந்தவர்களுக்கும் கடவுள் மற்றும் மூடப் பழக்கங்கள் பற்றிய புரிதலை ஏற்படுத்தியது. மதிய உணவிற்குப் பிறகு நிறைவாக குழந்தைகள் உருவாக்கிய படைப்புத் திறன்களையெல்லாம் திரட்டி “தேன் துளிகள்” என்ற தலைப்பில் நூலாக கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி வெளியிட்டார். அதனை பேராசிரியர் புரட்சிக் கொடி குழந்தைகளோடு சேர்ந்து பெற்றுக் கொண்டார். பயிற்றுநர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் இணைந்து எடுத்த ஒளிப்படத்தை பெரியாரின் பெருந் தொண்டர் தோழர் ஆசிட் தியாகராசன் உற்சாகத்தோடு வழங்கி, “இனிமேல் இதுபோல் நடக்கும் குழந்தைகள் முகாம்களுக்கு என்னை அழையுங்கள் ஓவியத்தில் எனக்குள்ள திறமைகளைக் குழந்தைகளுக்குப் பயிற்றுவிக்கிறேன்” என்றதும் பெருத்த கரவொலி எழுப்பப்பட்டது.

முகாமில் குழந்தைகளை ஆயத்தப்படுத்துவது குளிக்க வைப்பது கண்காணிப்பது போன்ற சவால்கள் நிறைந்த பணிகளை ஆசிரியர் இரஞ்சிதா அவர்கள் கவனித்துக்கொண்டார். தோழர் ஜவகர் மற்றும் அவர் துணைவியார் ஆசிரியர் ஜாகுலின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பிற்கும், வழிநடத்துதலுக்கும் பெரிதும் உதவிகரமாக இருந்தனர். செம்பட்டியைச் சேர்ந்த தோழர்கள் ஆல்பர்ட், இராசா இருவரும் ஒளிப்படம் எடுக்க மிகுந்த ஒத்துழைப்பு நல்கினர். உணவு மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான ஏற்பாடுகளில் தோழர் காந்தி மிகவும் உதவினார். தோழர் பெரியார் நம்பி தன்னுடைய தோட்டத்தில் விளைந்த மாம்பழத்தையும், தோழர்கள் விஜி மற்றும் முருகானந்தம் வாழை மற்றும் பிளம்ஸ் பழங்களை அனைவருக்கும் வழங்கினர். மூன்றுநாள் முகாமின் அனைத்து நிகழ்வுகளையும் தோழர் கோகுலக்கண்ணன் படம்பிடித்து ஆவணப்படுத்தினார். இம் முகாமிற்கான இடத் தேர்வு முதல் பல்வேறுபட்ட பணிகளை திண்டுக்கல் இராவணன் பொறுப்பேற்று நடத்திக் கொடுத்தது முகாம் சிறக்க மிகவும் உதவிகரமாக இருந்தது. முகாம் பற்றிய திட்டமிடுதல் செயல்படுத்துதல் போன்றவற்றிற்கு மாநில அமைப்புச் செயலாளர் தோழர் தி. தாமரைக் கண்ணன் அவர்கள் பெரிதும் உதவினார்.

**செய்தி: பேராசிரியர் இராமகிருஷ்ணன்**

DATE OF PUBLICATION 29.05.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# இஸ்லாமியர்கள் மீது பொய் வழக்குகளுக்குக் கண்டனம்

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

இல்லை. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்திய நடுவண் அரசு இழைத்திருக்கும் இந்த துரோகத்தை இந்த செயலவை வன்மையாக கண்டிப்பதோடு - அவர்களுக்கு 27 சதவீத இட ஒதுக்கீட்டு உரிமையை உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் உறுதி செய்வதற்கேற்ற நடைமுறைகளை அமுல்படுத்த வேண்டும் என்று இந்த செயலவை வற்புறுத்துகிறது.

**மக்களை சுரண்டும் உலக மயம்**

உலக மயம், தனியார் மயம், தாராளமயம் போன்ற கொள்கைகளைக் கொண்டுவந்து மக்களின் கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு போன்ற அடிப்படை உரிமைகளுக்கான பாதுகாப்புகளிலிருந்து விலகிக் கொண்டு பனியா, பன்னாட்டு நிறுவனங்களுக்கு கதவுகளைத் திறந்துவிட்ட இந்திய நடுவண் அரசின் கொள்கைகளால் அடித்தட்டு உழைக்கும் மக்கள் கடுமையான நெருக்கடிகளை சந்தித்து வருகிறார்கள்; சமூக நீதி, மக்களின் வாழ்வாதாரம், சுற்றுச் சூழல் சீர்குலைந்து, அடித்தட்டில் உழலும் மக்கள் மேலும் மேலும் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்; மக்களுக்கு எதிரான சமூக பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குவதிலும், திட்டமிடுதலிலும், நடைமுறைப்படுத்துவதிலும் பனியா, பன்னாட்டு நிறுவனங்களுக்கு மூளையாக பார்ப்பன அதிகார வர்க்கம் செயல்பட்டு - "இந்திய தேசியம்" எனும் கவசத்தில் - தன்னை மீட்டுருவாக்கம் செய்துகொண்டு வெகுமக்களுக்கு எதிரான போரைத் தொடர்ந்து வருகின்றது; இந்த சமூக பொருளாதார சுரண்டல் சக்திகளுக்கு எதிராக மக்கள் விடுதலையை நோக்கி நமது பயணத்தை முன்னெடுப்பதற்கான திட்டங்களை வகுத்து செயல்படுவதே நமது இயக்கத்தின் முன்னுள்ள தலையாய பணியாகக் கருதி அந்தத் திசையில் வேலை திட்டங்களை வகுத்து செயல்பட இச்செயலவை முடிவு செய்கிறது;

**முதல்வருக்கு பாராட்டு**

அனைத்து சமூகங்களின் கூட்டமைப்பு என்ற பெயரில் சில ஆதிக்க ஜாதி அமைப்புகளைத் திரட்டி சுயநலனுக்காக ஜாதி வெறியைத் தூண்டிவிட்டு தருமபுரி, மரக்காணம் போன்ற பகுதிகளில் தாக்குதல்களை நடத்திய பா.ம.க / வன்னியர் சங்கம் ஆகியவற்றின் மீது உறுதியான நடவடிக்கைகளை மேற் கொண்டுவரும் தமிழக முதல்வரை இந்த செயலவை பாராட்டுகிறது; தமிழக அரசின் உறுதியான இந்த நடவடிக்கைகளால்தான் - தங்கள் சுயநலன்களுக்காக ஜாதி வெறியைத் தூண்டிவிட்டு குளிர் காயலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த ஆதிக்க ஜாதி அமைப்புகளும் அடங்கிக் கிடக்கின்றன.

அதே நேரத்தில் அடக்குமுறை சட்டங்களுக்குப் பதிலாக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் சரியாக இருந்திருக்கும் என்பதையும் சுட்டிகாட்ட விரும்புகிறது.

**ஆசிரியர் தேர்வில் அநீதி**

தேசிய ஆசிரியர் கல்விக் கழகம் (NCET) ஆசிரியர் பதவிகளுக்கான தகுதித் தேர்வு மதிப்பெண் - 60 ஆக நிர்ணயித்திருந்தாலும் - மாநில அரசுகள் - அந்தந்த மாநிலங்களில் பின்பற்றப்படும் இட ஒதுக்கீடு முறைக்கு ஏற்ப - மதிப்பெண் வரம்பை மாற்றி அமைத்துக் கொள்ளலாம் என்று - அறிவித்த பிறகும் கூட - தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு வாரியம் - இந்த அறிவுறுத்தலை புறந்தள்ளி விட்டு - இரண்டு சதவீதம் பேர் கூட - தேர்ச்சி பெற முடியாத நிலையை உருவாக்கிவிட்டது; ஆசிரியர் பயிற்சி முடித்து பல ஆண்டுகளாக வேலைவாய்ப்புக்காக தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் ஏராளமாக காத்திருக்கிறார்கள்; தமிழ்நாட்டுப் பள்ளிகளிலும் போதுமான ஆசிரியர்கள் இன்றி கல்வித்தரமும் சரிந்து வருகின்றது; இந்த எதார்த்தங்களை கருத்தில் கொள்ளாது - ஆந்திரா, ஒரிசா, அசாம் போன்ற மாநிலங்களில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு தகுதி மதிப்பெண் அளவை குறைத்துள்ளதையும் கவனத்தில் கொள்ளாது, சமூக நீதிக்கு வழிகாட்டியான தமிழக சமூக நீதிச்சூழல் பற்றி புரிதல் இல்லாத வடநாட்டு அதிகாரிகள் மனம் போன போக்கில் செயல்பட தமிழ்நாடு அரசு அனுமதிப்பது - சமூக நீதிக்கு எதிரானது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்; இந்த நிலையில் ஏற்கனவே தேர்வில் 60 சதவீத மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றவர்களை திறந்தப் போட்டிக்கான இடங்களில் நிரப்பி விட்டு, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களுக்கான இடங்களை - ஏற்கனவே தேர்வு எழுதியிருந்த சமூக பிரிவினரிலிருந்து - தகுதி மதிப்பெண்களை குறைத்து - நியமனம் செய்ய வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறோம்; தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இட ஒதுக்கீட்டை மிக உறுதியாகப் பின்பற்றி வரும் நிலையில் - தமிழ்நாடு ஆசிரியர் தேர்வாணையம் தன்னிச்சையாக இட ஒதுக்கீட்டு முறையை புறக்கணித்தல் கூடாது; தமிழக முதல்வர் ஆசிரியர் தேர்வில் நிகழ்ந்துள்ள இந்த சமூக அநீதியைக் களைவதில் விரைந்து செயல்பட வேண்டும் என்று இந்த செயலவை வலியுறுத்துகிறது.

**இஸ்லாமியர் மீது பொய் வழக்கு**

பார்ப்பனிய ஜாதி - தீண்டாமைக் கொடுமைகளிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள பல தலைமுறைகளுக்கு முன்னர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிய திராவிடர் சமுதாயத்தினரை, பார்ப்பனிய, இந்துத்துவா சக்திகள் தனிமைப்படுத்தி அவர்களைப் பகைவர்களாக காட்டி, ஒட்டுமொத்த இஸ்லாமிய சகோதரர்களையும் சந்தேகத்திற்குரியவர்களாகவும் - தீவிரவாதி களாகவும் சித்தரித்து வருவதைத் திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாக கண்டிக்கிறது; இஸ்லாமிய தோழர்கள்மீது - தமிழக காவல் துறை பொய் வழக்குகளை புனைந்து - கைது செய்து - பல ஆண்டுகளாக பிணை கூட வழங்காமல் சிறையிலடைக்கப்பட்டு, பின்னர் அவர்கள் குற்றமற்றவர்கள் என்று நீதிமன்றங்களால் விடுதலை செய்யப்பட்டு வருகிறார்கள்; பலர் நீண்ட காலம் சிறையிலடைக்கப்பட்டும் கிடக்கிறார்கள்; அவர்களுக்காக - சட்ட உதவிகளைச் செய்து வந்தோரும், செய்ய முன்வருவோரும் அச்சுறுத்தப்பட்டு பொய் வழக்குகளில் கைது செய்யப்படுகிறார்கள்; நீண்ட காலம் சிறையில் வாடும் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி முன்விடுதலை செய்வதிலும் - இஸ்லாமியர்கள் தமிழக அரசுகளால் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

தமிழக அரசும், காவல்துறையும் மேற்கொண்டுவரும் இந்த அடக்கு முறைகளை திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாக கண்டிப்பதோடு - இந்த போக்கைக் கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

**பரப்புரைப் பயணங்கள்**

திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் ஜாதி - தீண்டாமை எதிர்ப்பு இயக்கங்களை மேலும் விரிவாக முன்னெடுப்பது என இந்த செயலவை முடிவு செய்கிறது; முதல் கட்டப் பரப்புரைப் பயணம் ஜாதி ஒழிப்புக்கு சுதந்திர தமிழ்நாடே தீர்வு என்று பெரியார் அறிவித்த ஜூலை 6 -ம் தேதி தொடங்குவது என்றும் இரண்டாவது கட்டப் பயணம் குலக்கல்வி திட்டத்தை எதிர்த்து இந்திய தேசப் பட எரிப்புப் போராட்டத்தை பெரியார் அறிவித்த நாளான ஆகஸ்ட் 1 இல் தொடங்கி, திராவிடர் விடுதலைக் கழகத்தின் இரண்டாம் ஆண்டு தொடக்க நாளான ஆகஸ்ட் 12 இல் முடிப்பது என்றும்; இரண்டாம் ஆண்டு தொடக்க நாளில் கழகக் கொடிகளை ஏற்றுதல், மக்களை சந்தித்து துண்டறிக்கைகள் வழங்குதல், பரப்புரைக் கூட்டங்கள், குடும்ப விழாக்கள் நடத்துதல் என்று திட்டமிட்டு கொள்கை உறுதி ஏற்பு நாளாக கடைபிடிக்கவும் இந்த செயலவை முடிவு செய்கிறது.

## ஜூன் 17இல் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முற்றுகை

கோவை மாவட்டம் கிணத்துக்கடவு பகுதியில், "இரட்டைக் குவளை" தீண்டாமை, தேனீர்க் கடைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தக் குற்றத்தைத் தடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்கனவே ஆர்ப்பாட்டம் நடத்தி, மாவட்ட நிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றது. மாவட்ட நிர்வாகம் இந்தக் குற்றங்களைத் தடுக்க முன்வராவிடில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முற்றுகையிடப்படும் என்று கழக சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், மாவட்ட நிர்வாகம், தீண்டாமைக் குற்றத்தைத் தடுக்க முன்வராத நிலையில் ஜூன் 17 ஆம் தேதி, கோவையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் காலை 10 மணியளவில் நடக்கிறது. திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் இந்தப் போராட்டத்துக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்குகிறார். சேலம், ஈரோடு, திருப்பூர், கோவை மண்டலங்களைச் சார்ந்த கழகத் தோழர்கள் போராட்டத்தில் பங்கேற்கிறார்கள். ஏனைய மாவட்டங்களிலிருந்தும் வாய்ப்புள்ள தோழர்கள் பங்கேற்பார்கள். திருப்பூரில் நடந்த திராவிடர் விடுதலைக் கழகச் செயலவைக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி இதை அறிவித்தார்.

### நன்கொடை

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், பல்ல கச்சேரி கிராமத்தில் வசிக்கும் அலமேலு - ஜெயராமன் ஆகியோரது மகள் பிரேமா வுக்கும், அலமேலு-செல்லத் துரை ஆகியோரது மகன் சபரிநாதனுக்கும் 16.5.2013 அன்று மேட்டூரில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் மணவிழா நடந் தது. கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண் டோம். (ஆர்)

### ஒரு கேள்வி: ஒரு பதில்

**கேள்வி:** சீமான் நடத்திய கடலூர் கூட்டத்தில் காஷ்மீர் விடுதலைப் போராளி யாசின் மாலிக் எப்படி கலந்து கொண்டார் என்று பா.ஜ.க. காங்கிரஸ் தலைவர்கள் கேட்கிறார்களே?

**பதில் :** இது என்ன கேள்வி? பயணச் சீட்டை வாங்கிக் கொண்டு விமானத்தில் வந்துதான் கலந்து கொண்டார். கடவுட் சீட்டு, 'விசா' வாங்க வேண்டும் என்று சொல்கிறார்களோ? அதற்கு யாசின் மாலிக் தயாராக இருக்கிறார். உடனே காஷ்மீரை தனிநாடாக அறிவிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 30th May 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.